728

உ

சிவமயம்.

ஓம் பரப்பிரஹ்மணே நம:

# சுவாநுபவத் திருவாக்கு

என்னும்

# பாராயண சிந்தாமணி.

-8 NOV 1938

இது

புதுக்கோட்டை சமஸ்தானம்

பனையப்பட்டி

புண்ணியசீலர்

சி. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார்

அவர்கள் குமாரர்

சி. மு. சி. சின்னையா செட்டியாரால்

திரட்டி அச்சியற்றப்பெற்றது.

யுவஹு 1935. ஆவணிமீ.

நான்காம் பதிப்பு 2000.

இதன் விலை அணா 4

Q23:417
N35
97438.

உ

சிவமயம்.

ஓம் பரப்பிரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-8 NOV 1935
MADRAS

# சுவாநுபவத் திருவாக்கு

என்னும்

# பாராயண சிந்தாமணி.

இது

புதுக்கோட்டை சமஸ்தானம்

பனையப்பட்டி

புண்ணியசீலர்

சி. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார்

அவர்கள் குமாரர்

சி. மு. சி. சின்னையா செட்டியாரால்

திரட்டி அச்சியற்றப்பெற்றது.

யுவ௵ 1935. ஆவணிமீ.

நான்காம் பதிப்பு 2000.

இதன் விலை அணா 4

உ

சிவமயம்.

# முகவுரை.

பரசிவ ஞானத்தில் விருப்புடைய அறிஞர்கள் பிரதி தினமும் பாராயணஞ் செய்வதற்கு அனுகூலமாய்ச் சிவானுபவப் பேற்றை அடைந்த மஹாத்மாக்களின் அருமைத் திருவாக்குகளைப் பழைய பிரதிகளுக்கிணங்க ஒரே புத்தகமாகப் பேரறிஞர்களின் அனுமதியினாலும் பகவானருளாலும் திரட்டிய இந்நூல் மூன்றும் பதிப்பு வரையில் அச்சிட்ட ஆறுயிரம் புத்தகம் செலவாகி விட்டபடியால் நான்காம் பதிப்பில் 2000-புத்தகமும் அடியேனால் அச்சியற்றப்பெற்றது.

இதிற் பிழையுளதாயின், பெரியோர் பொறுப்பாராக.

புதுக்கோட்டைச்
சமஸ்தானம்
பனையப்பட்டி.

இங்ஙனம்,

சி. மு. சி. சின்னையா செட்டியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## இந்நூற் பெயர்.

ஆரண முடிவத் வைத முத்திப்பே றடைவ தற்கு
நாரண னருளால் மேலோர் நவின்றசா தனம னைத்துஞ்
சீரணப் பன்னூ லாய்ந்து திரட்டியச் சிட்ட விந்நூல்
பாரண மக்க ளுக்குப் பகர்சிந்தா மணியா மாதோ.

---

## அறிவிப்பு.

இப்புத்தகம் அடியிற்கண்ட, இடத்தில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சி. மு. சி. சின்னையா செட்டியார்,
பனையப்பட்டி,
புதுக்கோட்டை சமஸ்தானம்.

---

பிர்ம்மஸ்ரீ யோகானந்த சுவாமிகள்
மடாலயம்
பிட்டுத்தோப்பு
மதுரை.

---

இதன் விலை அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

சிவமயம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பண்டித

சித. நாராயண சுவாமி அவர்கள்

இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

உயர்திணை மக்க ளஃறிணை பிறவே
ஆறறி வுடைமையா னவைபெரு நிலைமையான்
அவ்வறி வுடைமையா லெவ்வமற் றின்புறப்
பெறும்பய னியாதெனத் திறம்பெறத் தேரி
இறைவனற் றாளைப் பெறுவது பேறென
நுணித்துணர் பெரியோர் பணித்தன ரவரே
உளங்கையங் கனியென விளங்குநங் கடவுளை
நினைந்தாற் பணிந்தா னிவப்புறத் துதித்தாற்
காட்டுவன் வீடெனுந் தாட்டுணை யதனை
யென்றே யெவரு நன்றே கழறினும்=பதம்பெறத்
துதித்த லொன்றே மதித்தநல் வழியதாய்க்
கலியினிற் சிறந்தே யொலிபெறு மென்ப
அதனு லிறைவனை யன்பரு முனிவரும்
நற்குணப் பொருளாய் நிற்குணப் பொருளாய்
மறைமொழிந் தாங்கே நறைவழிந் தொழுகுற
உரைத்தனர் புகழ்ந்தே விரித்துறு மவற்றுள்
சிறந்துறு பாக்களைத் திறந்தெரிந் தெடுத்தே
நாளு மெவரு நலனுறக் கனிந்தே
பாரா யணஞ்செய நாரா யணன்றன்
திருவரு ளதனுற் றெரிதரத் தொகுத்தே

பாரா யணசிந் தாமணி யெனுமோர்
பெயரது புனைந்தே யுயர்வுற வெவர்க்கும்
விலையிலா தீய விரும்பின னாகி
செம்ம லாரிய சிதம்பர முனிவரன்
றாட்டுணை பரவிய வேட்டவை விடீஇக்
கற்றுத்துறை போகிய முற்றவக் குரிசில்
சுப்பைய முனிவரன் றுணைகொடு சிறந்தே
அச்சினிற் பதித்தன னழகுற யாரெனில்
துவாத சாந்தத் தொன்னகர்த் தமனிய
நளின வாவியின் குளிர்கரை யமர்ந்த
நீற்று விநாயகர் நிதம்நித நீற்றினில்
குளித்துள மகிழக் கொழுந்திரு நீற்றினை
நாளு முதவு நறும்பணி நிலைக்கப்
புரிந்தெவ ரேனும் புரிவுட னுண்ணிய
முத்தும் பொன்னு நத்துறத் திரண்டென
அமைவுறு பருப்பி னன்னத் திரளையும்
புளியே தயிரே பொருந்திய வோதனத்
திரளையு நாளுந் தெளிதமிழ் மீனக்
கண்ணிதன் முன்பே களித்திட வுதவும்
பணியும் புரிந்து பான்முதற் பொருள்கள்
காசிவா ழிறைவர் காமுறக் கொடுத்தும்
பசுமடந் தண்ணீர்ப் பந்தலும் பனைசையில்
நாட்டினன் புகழை நாட்டின னாகி
அரனார்க் கென்றும் அடியவர்க் கென்றும்
பணிபல புரிந்த பான்மைய னாகிய
முத்துக் கருப்ப முதல்வனுங் கற்புறு
முத்துக் கருப்பி முதல்வியும் பெற்ற
மகார் பலருள் மதிக்க நின்ற
முன்னவன் றனக்குப் பின்னவ னாயோன்
தந்தை வளர்த்தசீர் முந்துறும் அறம்பல
நாளும் வளர்தர நறும்பொருள் கொடுத்தோன்

காசியம் பதியினி லாசறு முத்தி
மண்டபப் பணிக்கு மகிழ்ந்துறு பொருளைக்
கொடுத்தணி மதுரையில் விடுத்தநற் றறவோர்
தங்கிநன் றுரைசெயத் தகுமட மமைப்பித்
துண்டியு முடையு முவப்பொடு தருவோன்
சொக்க நாதரின் சொற்றிரு வாயிலார்
தெண்டா யுதஞ்சேர் சேந்தனுர்க் கென்றுந்
திருவாட்சி யென்னுஞ் செய்விளக் கமைத்துப்
புட்ப வங்கியைப் போற்றச் செய்தும்
திருப்பரங் குன்றிற் றேர்விசா கத்தினில்
பருப்பொடு மார்ந்த பாற்சுவை யோதனம்
பத்தருக் கீயும் பணிபல வாற்றுவோன்
தண்டமி ழரசாய்த் தனிபுரந் தருளும்
தொண்டைமா னுட்டினிற் கண்டவர்களிகொளத்
திருவளர்ந் தோங்குஞ் செழுநக ரான
பனைசை நன் னகரினிற் றனைநிகர் விலாதோன்
மருத்துவ சாலை திருத்தக வமைத்தோன்
மாயவன் பக்தி தோய்தரு முளத்தினன்
வைசியர் குலத்தினர் மகிழ்தர வுதித்தோன்
அடியவர்க் காணில் மிடியெலாந் தவிர்ந்தே
பெரும்பொரு ளெய்திய பெற்றியின் மகிழ்ந்து
வேண்டிய யாவும் விருப்பொடு தருவோன்
கோயிலூர் மேய குருபர ரடியிணை
மறவா நோன்பினன் மண்டிணி யுலகினில்
தனிக்குரு பரனுய்த் தவத்துறைப் பொருளாய்ப்
போந்தநஞ் சங்கர புனிதநற் சயந்தி
விழாவினைக் கூடலில் விழுத்தக நடத்திக்
களிகொளு முளத்தினன் தெளிதரு புலத்தினன்
உரியசீர் வயதினிற் பெரியவர்ப் பேணி
ஒன்றே பொருளெனு முணர்வுநூ லதனை
நன்றே பயின்ற நலம்பழுத் தயர்ந்தோன்

ஆலவா யதனில் மேலவ னுயுறு
யோகா னந்த வுறுதவ முனிவன்
பாலன்பு பூண்ட பளகறு குணத்தினன்
சிவராம லிங்கத் தவராய குருபரன்
அடியிணை மறவா தவனருள் பெறீஇயர்
வழிபடு குணத்தொடு மாணவ னுகியோன்
சத்துவ மேநிறை சித்தம துற்ற
முத்துக் குமார முனிவரன் றுணைகொடு
சென்னைநன் னகரிற் செலீஇப் பலபொருள்
தவப்பிர காசச் சிவப்பிர காசப்
பெருந்த கைக்கன் புறுந்தக வுடனே
கொடுத்துளஞ் சிறந்தோன் நடுத்தவி ராதோன்
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி
மகிழ்வொடு நாளு மணந்து பயன்றரூஉம்
ஆப்பனூர் மேய காப்புடை யரனுர்
மகிழ்ந்துறை கோவிலிற் றருமணி யொட்டிக்
கான்மண் டபப்பணி வான்பெற விழைத்து
நான்மறைச் சாலையும் நற்றமிழ் மறையாம்
சாலையு மகற்கா மேலவர் மேவர
நாட்டியென் னுளும் நல்வளம் பொலியும்
வலையமா நகரினி லுலைவரு ஞானியார்
மலையினன் மடத்தின் மாலவன் சயந்தி
விழாவினை நடத்தி விழைதரு முளத்தொடு
பிறந்தநற் பனைசையிற் பெருநலம் பலவே
சிறந்திட வமைத்துச் சேர்ந்தநற் புதுவை
நாட்டினிற் சாலை நாட்டியொன் றமைத்தோன்
புண்ணிய தலமும் பொய்கையு நதியும்
கண்டுங் குளித்துங் களித்திடு முளத்தினன்
அறம்பல வின்னுந் திறம்பெறப் புரிவோன்
சீனு மூனுச் சின்னைய வேளெனும்
ஆனு வியல்புறு மன்பினன் றனே





உ

ஓம் பரப்பிரஹ்மணே நம:

# பாராயண சிந்தாமணி.

## விநாயகர் துதி.

ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகரருளியது.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## பரசிவ வணக்கம்.

ஆனைமுக னறுமுக னருளாந் தேவி
யநந்தகண மளவற்ற முனிவர் தேவ
ரேனையுள நல்லன்ப ரியாவ ராலு
மெய்ப்பயனும் பெறவேண்டி யிதயத் தின்க
ணூனமற வுபாசிக்கப் பட்டன் னோர்க்கிங்
குவந்தபய னருள்கருணை மூர்த்தி யாகி
வானமென வகண்டசிதா காய மான
வத்துவதாம் பரசிவனை வணங்கல் செய்வாம். 2

## சுப்பிரமணியர் துதி.

சிவஞானவள்ளலாரருளியது.

அறுவிதச் சமயத் தோர்க்கு மறுமுகச் சாமியாகிச்
செறிபரப் பிரமம் யாமே யென்றுசின் மயிலிலேறிக்
குறுமுனிக் கருளிச் சிவக் குகைதொறும் வீற்றிருந்த
மறுவிலாக் குகனைப் போற்றி மாய்த்தனன் பிறவியெல்லாம். 3

## நடராஜர் துதி.

மகாராஜா துறவு குமாரதேவரருளியது.

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத்
திருந்திழை யுமையுளங் களிப்பப்
பொங்கரா வொடுநற் புலிமுனி வர்கண்மால்
போதய னமரர்கள் போற்றத்
துங்கநான் மறைகள் துதித்திட வைந்து
தொழில்விரிந் திடப்பொது வதனிற்
செங்கழ லதிர நடஞ்செயும் பொருளைத்
தினம்பணிந் திடவீரழித் திடுவாம். 4

## அம்பாள் துதி.

சௌந்தரியலகரி.

தருண மங்கலை யுனது சிந்தை
தழைந்த பாலமு தூறிஞ
லருண கொங்கையி லதுபெ ருங்கவி
யலைநெ டுங்கட லாகுமே

வருண நன்குறு கவுணி யன்சிறு
மதலை யம்புயல் பருகியே
பொருண யம்பெறு கவிதை யென்றொரு
புனித மாரிபொ ழிந்ததே. 5

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
விமையப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. 6

பெருந்தே னிறைக்கு நறைகூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக வருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. 7

## சரஸ்வதி துதி

குமரகுருபர சுவாமிகளருளியது.

மண்கொண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
யுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகலகலா வல்லியே. 8

## கிருஷ்ண பரமாத்மா துதி.

மஹா பாகவதத்திரட்டு.

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனவுலக நிறைந்தொளிதன் பாற்றோன்ற
வேர்பூத்த முத்தொழிலு மினிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண்மல ரடிநினைவாம். 9

## சங்கர பகவத் பாதாசாரியர் துதி.

*சி. பொன்னம்பல சுவாமிகள் அருளியது.*

பொங்கருண் ஞான நங்கள் புண்ணிய மனைத்து மொன்றாய்
அங்குபுல் லென்னவந் தாண் டருமறைப் பொருளை யார்க்கும்
அங்கையி னெல்லி போல அளித்தரு ளமலா நந்த
சங்கர பகவற் பாதன் றாண்மலர் நந்த லைக்கே. 10

## சத்குரு துதி.

*தத்துவராய சுவாமிகள் அருளியது.*

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும்—எந்தமுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு. 11

## இந்நூற் பயன்.

கற்பிதமாம் பேதமெலாம் போக்கு மிந்நூல்
களங்கமிலாப் பரப்பிரம மாக்கு மிந்நூல்
நிற்பயமா நிட்டையினை யளிக்கு மிந்நூல்
நிரதிசயா நந்தத்தை நல்கு மிந்நூல்
அற்புதமா மிந்நூலி னனுப வங்கள்
அறிந்தவர்கள் பரமசுக ஞானி யாவர்
பற்பலவா நூலையெல்லாம் விட்டிந் நூலைப்
பரிவுடனே முமூட்சுவெலாம் பார்க்க வேண்டும்.

கணபதி துணை.

## ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த தூய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி,
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்,
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்

திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே,
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்,
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து,
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி,
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவில் உணர்த்திக்,
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலாதா ரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே,
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி,
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து,
இருள்வெளி யிரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகரகவல் முற்றிற்று.

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

திருச்செந்தூர்க்

# கந்தர் கலிவெண்பா.

க. பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு
உ. நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு
ந. அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
ச. குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்கு
ரு. அநாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமா யன்றே
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனாதருளின்
சு. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாம்—எஞ்சாத
எ. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியில்
அ. இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்—முந்துங்
கூ. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரண

கO. மாகவரும் இச்சை அறிவியற்ற லாவிலய
போக அதிகாரப் பொருளாகி — ஏகத்து

கக. உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய் — இருண்மலத்துள்

கஉ. *மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்து — தேகமுறத்

கந. தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து — மந்த்ரமுதல்

கச. ஆறத்துவாவு மண்டத் தார்ந்த†வத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து — மாறிவரும்

கரு. ஈறிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
ஞரவந்த நான்குறா ருயிரத்துள் — தீர்வரிய

கசு. கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து — வெந்நிரய

கஎ. சொர்க்காதி போகமெலாந் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந் — தர்க்கமிடுந்

கஅ. தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து — முன்னூல்

கக. விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்து — அருள்பெருகு

உO. சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை அகற்றுவித்து — நால்வகையாம்

உக. ‡சத்திநி பாதந் தருதற்கு இருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப் — பெத்த

*மோகமுறும் பல்லுயிர்-சகலர்; ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களு முடையோர்.

†அத்துவா-வழி. ‡சத்திநிபாதம் = சிற்சத்தி பதிதல்.

உஉ. மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவாது

உங. அறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்த நிலைநீங்கிப்—பிரியாக்

உச. கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்

உரு. ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழுமத்து வாக்கள் இருமூன்றும்—பாழாக

உசா. ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெஞ்ஞானக் கண்காட்டிப்— பூணும்

உஎ. அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற் றுங் காட்டி—முடியாது

உஅ. தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்

உகூ. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்பம்—மருவுவித்துக்

ஙO. *கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன்—மின்னிடத்

ஙக. பூத்தபவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்[துப்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த

ஙஉ. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
‡ றொருமலத்தார்க் கின்பம் உதவிப்—பெருகியெழு

* கன்ம மலத்தார் - பிரளயாகலர்; ஆணவம், கன்மம் என்னும் இருமலமுடையோர்.

‡ ஒரு மலத்தார்-விஞ்ஞானகலர்; ஆணவமலம் ஒன்றுமே உடையோர்.

௩௩. மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்

௩௪. யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக—ஞானந்

௩௫. திருவுருவா விச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே

௩௬. சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!—மின்னுருவந்

௩௭. தோய்ந்தநவ ரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்

௩௮. துண்டமிரு மூன்றுநிறை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட

௩௯. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியுங் கண்மலர் ஈராறும்—பரிதி

௪0. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்

௪௧. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்

௪௨. வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்

௪௩. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்

௪௪. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்

௪௫. பாசஇருள் துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்

௪௬. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கும் முகமதியுந்—தாகமுடன்

சஎ. வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
சஅ. வேரிக் கடம்பும் * விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் † புயசைலம் பன்னிரண்டு – ஆரமுதந்
சகூ. தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது
ருO. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
ருக. வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த
ருஉ. சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையும்—தெறுபோர்
ருந. அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத
ருச. கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் பைம்பொற்
ருரு. புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை யழகுந்—திருவரையும்
ருசு. நாதக் கழலும் நகுமணிபொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி
ருஎ. இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும்—உளந்தனிற்கண்
ருஅ. ‡டாதரிப்போர்க்(கு)ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே!—ஓதியவைந்(து)

---

* விரை-வாசனை; குரவு-முல்லை.

† புயசைலம்-புயமலை.

‡ ஆதரிப்போர்—அன்பு செய்வோர்.

௫௯. ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழி
நீங்காத பேருருவாய் நின்றோனே!—தாங்கரிய [ற்கு

௬0. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்

௬௧. ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த

௬௨. கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி

௬௩. அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்

௬௪. ஆவிப் புலனுக் கறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ

௬௫. வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வே! மெஞ்ஞானந்
தரும்அட்ட யோகத் தவமே!—பருவத்து

௬௬. அகலாத பேரன் படைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

௬௭. பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

௬௮. எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லா துயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

௬௯. ஈறும் முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதந்

௭0. தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலங்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

௭௧. பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்—காரணத்துள்

எஉ. ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்த நவநாத மணிமுரசும்—சந்ததமும்

எங. நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

எச. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே!—தேசுதிகழ்

எரு. பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள்

எசு. வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
*ஐந்து முகத்தோடு அதோமுகமுந்—தந்து

எஎ. திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவனம்

எஅ. எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண் [ன்

எகூ. எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மா
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு

அ0. பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்(று)

அக. அன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் †சரவணத்திற்
சென்னியிற் கொண்டுய்ப்பத் திருவுருவாய்—முன்னர்

அஉ. அறுமீன் முலையுண் டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்

அங. கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவம்ஆறினையும்—தன்னிரண்டு

---

*ஐந்து முகம்—ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம் சத்தியோசாதம்.

† சரவணம்—நாணல் காடு.

அச. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய

அரு. முகத்தில் அணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த

அசா. வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ள முவப்ப உயர்ந்தோனே!—கிள்ளைமொழி

அஎ. மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்

அஅ. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)

அகூ. அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்

கூ0. விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா!—படைப்போன்

கூக. அகந்தை உரைப்பமறை ஆதிஎழுத் தொன்று
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

கூஉ. *சிட்டித்தொழிலதனைச் செய்வதெங்ஙனென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே!—மட்டவிழும்

கூ௩. பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே!—கொன்னெடுவேல்

கூச. தாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே!—சீரலைவாய்த்

கூரு. தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்

கூசா. கயேந்திரனுக் (கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனுஞ்

---

* சிட்டி—சிருஷ்டி - படைப்பு.

௯௭. சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே—காரவுணன்

௯௮. வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப்—பானு

௯௯. பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்!—சகமுடுத்த

௱. வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்!—போரவுணன்

௱௧. அங்க மிருகூறாய் அடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலு—மங்கவற்றுள்

௱௨. சீறும் அரவைப் பொருதசித்ர மயில்வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே!—மாறிவரு

௱௩. சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்ந்த மேலோனே!—மூவர்

௱௪. குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்ததேவே!மறைமுடிவாஞ்

௱௫. சைவக் கொழுந்தே தவக்கடலே! வானுதவுந்
*தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே!—பொய்விரவு

௱௬. காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாம மடமானின் வயிற்றுதித்துப்— பூமருவு

௱௭. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்

௱௮. தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே!—உள்ளமுவந்(து)

௱௯. † ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!—நாறுமலர்க்

---

* தெய்வக்களிறு—தெய்வயானை. † ஆறு திருப்பதி—திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை.

௱௪௰. கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ்சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே! சந்ததமும்

௱௪௧. பல்கோடிசன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

௱௪௨. பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந் தீநீரும் பொருபடையுந்—றீதகலா

௱௪௩. வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை எதிர்த்தாலும்—அவ்விடத்திற்

௱௪௪. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

௱௪௫. திருவரையும் சீரடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணஞ்

௱௪௬. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

௱௪௭. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்(து)
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

௱௪௮. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

௱௪௯. எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்

௱௫௰. இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்-தம்மைவிடுத்(து)

௱௫௧. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

௱௫௨. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின் றருள்.

கந்தர் கலிவெண்பா முற்றிற்று.

# ஸ்தோத்திரப்பாக்கள்

அத்தி முகவனை மத்தன் மதலையை
நித்த நினைபவர் முத்தி பெறுவரே. 1

பொன்னிமயப் பிடியானை தருமானை முகத்தானைப் பொருவிலானைச், சொன்னயஞ்சேர் தாரகத்தி னுருவானை யன்பருளச் சோதியானைச், சென்னியிலா றுடையானைத் தந்தையெனப் படைத்தானைத் திகழோராறு, மன்னுமுகன் றுணையானை வல்லபையின் பதத்தானை வணங்கி வாழ்வாம். 2

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனும் மலர்கொண்டு பத்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனுங் கோயிலின்க ணறிவென்னுங்
கணபதிக்கே யன்பு செய்வாம். 3

ஆறு முகவனை நாறு மலர்கொடு
கூறு மடியவர் பேறு பெறுவரே. 4

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொ னம்பலவன்
ஞானகுரு வாணிபத நாடு. 5

உலகமுதற் பொருளை யும்பர்க் குணர்வரிதாம்பொருளை
யோதியவே தாகமத்தி னுச்சியினுட் பொருளைப்
பலகலையின் பொருண்முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற்றியபெரியோர் பரவியவான் பொருளை

யலேதிவலே நுரைகடலி னுதித்தொடுங்கு மாபோ
லகிலாண்டமுதித்தொடுங்கு மதன்மூலப் பொருளே
யிலகியசற் குருவாகி யாவுகும் பொருளே
யெங்குமாம் பரம்பொருளே யாமும் வணங்குதுமே. 6

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லேப் பொதுநடம் போற்றிபோற்றி. 7

கற்பனே கடந்தசோதி கருணேயே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்ற பூங்கழல்போற்றிபோற்றி. 8

காரண மானதன் கலேயி னோர்கலே
தாரணி தனிலுறுந் தலங்கள் மேவிவந்
தாரண வுரைப்படி யடங்கு மம்பலப்
பூரண நடேசனேப் போற்றல் செய்குவாம் 9

குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனே
யன்றி யார்துணே யாருற வார்கதி
யென்று நீயெனக் கின்னருள் செய்வதே. 10

அம்பிகா சகிதனுகி யாநந்த நடனஞ்செய்து
நம்பினேர் துன்பநீக்கி நற்சுக நல்காநின்ற
எம்பிதா வானவீசன் இருபதக் கமலந்தன்னே
நம்புவாம் துன்பநீங்கி நற்சுக மடைவதற்கே. 11

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி. 12

பராபர முதலேபோற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகிவேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய்போற்றி கனகவம் பலத்து ளாடும்
நிராமய பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி. 13

அனகநிர வயவபர அமலவுணர் வுறவே
உனவரிய பகுதியதி னுருமுழுது மறவே
மனநிறைய வமுதசுக மகிழ்வுதரு மொளிசேர்
கனகசபை நடனமிடு கடவுளடி பணிவாம். 14

வேத நான்கினுட் பொருளினை மறைத்த வெந்தமக்குப்
போத பாநுவாய்ப் புனிதநல் லருளுருப் புனைந்து
சேதுவாம்பர சுகத்தினைத் திகழ்தர விளக்கும்
வாத ராயணன் மலரடி முடிமிசை வைப்பாம். 15

உ

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே—கொடியேனென்
றெண்ணு திமைப்பளவி லிங்ஙனே வீடளித்த
கண்ணு கடைபோகக் கா. 16

இரவியு மதியும் வானும் வாயுவு மனலு மப்பு
முரவிய மண்ணு மற்றை யுணர்பவன் றானு மாகிப்
பரவிடுங் காணம் பன்னான் காயுமன் றாயு நின்றே [ம்.
யுரைமன மிறந்து ளோங்கு மொளியினை வணங்கல் செய்வா

கண்முதற் புலன்க ளந்தக் கரணங்கள் விளங்கு மெத்தாற், றண்மதி யருக்க னங்கி தாரகை விளங்கு மெத்தால், விண்முதற் பூத மியாவும் விளங்கிடு மெத்தா லந்த,வுண்மையைச்சிவப்ர காசவொளியினை யுளத்துள் வைப்பாம். 17

## ஞானிகளின் பெருமை.

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே. 18

ஈசனு ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத், தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னி யிலிருப்பது மன்னி, மாசிலாப் பரமஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கில், ஆசிலா வரியு மொப் பல னுமொப்பல னேவரொப்பாரே. 19

அருவெனு மமலன்று னருளில னெனினுஞ்சார்
குருபர னருளுண்டே லெனிலொரு குறையுண்டோ
திருவடி தரவந்தார் திருவுள மிலரென்றால்
ஒருவரு மிலர்கண்டீ ருறுதுயர் களைகின்றார். 20

உலகி லொருவன் சிவயோகி யுண்டதம்ம சராசரமா மலகி லுயிர்க ளெலாமுண்ட தாகுமென்ன மறைகூறு மிலகு முறையைக் காட்சியா னின்றிங்குணர வுணர்த்தினன் கலக வினைக டீர்க்கும்அருட் கண்ணன் றிகழல் லமதேவன்.

ஞாலமுண்டவன் தலைமிசை சுமப்பன்மெய்ஞ்
ஞானி வேண்டுவ தெல்லாம்
ஆலமுண்டவன் அவன்பின்னே திரிகுவன்
அவனடித் துகட்கன்றோ
சீலமன்னரு மற்றுள தேவருந்
திசைதிசை பணிந்தேற்றக்
காலிரண்டையுந் தலைமிசை வையெனக்
கழறுவன் கமலத்தோன். 22

ஆக பாடல்-34.

---

# தேவாரம்.

## திருஞானசம்பந்த சுவாமிகளருளியது.

தோடுடைய செவியன்விடை யேறியோர்தூ வெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 1

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 2

அந்தணாள னுன்னடைக் கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தைநீ யெனை நமன்றமர் நலியின்
இவன் மற்றென் னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற் றிருப்புன் கூருளானே. 3

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்த
ஞவினுக் கரைய ஞளைப்போ வானும்
கற்றகூ தனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செயினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ் திருப்புன் கூறுளானே. 4

---

திருநாவுக்கரசு சுவாமிகளருளியது

கூற்று யினவாறு விலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்று யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங் குவனெப் பொழுதுந்
தோற்று தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 5

உடம்பெனு மனையகத்தி னுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே. 6

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினன்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே. 7

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ்
சாதனமுங் கண்டாலுள்கி
யுவராதே யவரவரைக் கண்டபோது வுகந்தடிமைத்
திறநினைந்தங் குவந்துநோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டா
தொழிந்தீசன் றிறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்
நடுதறியைக் காணலாமே. 8

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமான னாயெறி யுங் காற்றுமாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்டமூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி நெருநலையாயின்றாகி நாளையாகி நிமிர்புன்சடை யடிக ணின்றவாறே. 9

சுந்தரமூர்த்தி சுவாமிகளருளியது.

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ளத்தாவுனக் காளாயினி யல்லே னெனலாமே. [டுறையு 10

## திருத்தொண்டத்தொகை.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 11

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனல்மங்கை யானாயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 12

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 13

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்

ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 14

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 15

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 16

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடிய னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்

கைதடிந்த விரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 17

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே 18

கடற்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணை தன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 19

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்

முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 20

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 21

ஆக பாடல் 176.

---

# திருவாசகம்

## ஸ்ரீமாணிக்கவாசக் சுவாமிகளருளியது.

---

### நூற்சிறப்பு.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமெனுந் தேன்.

# சிவபுராணம்.

சிவனதநாதி முறைமையான பழமை.
திருப்பெருந்துறையி லருளிச்செய்யப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர் [யாய்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னை புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒள்நித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய் 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந் துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்

பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

**போ**ற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோங்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ராணாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

# கோயில் மூத்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்துமுடியும் வண்ண முன்னின்றே. 1

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானுமதுவேமுயல்வுற்றுப்
பின்னின்றேவல் செய்கின்றேன் பிற்பட்டொழிந்தேன்பெம்மா
என்னின் றருளி வரநின்றுபோந்தி டென்னா விடிலடியார் [னே
உன்னின் றிவனாரென்னாரோபொன்னம்பலக்கூத் துகந் தானே.

உகந்தா னேயுன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலி
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்னாரோ[யேன்
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன்[லே
முகந்தான்றாராவிடின்முடிவேன்பொன்னம்பலத்தெம்முழுமுத

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்ற னக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான் குழுமிக்கு
எழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ வென்
றழும தவேயன் றிமற்றென்செய்கேன்பொன்னம்பலத்தரைசே

அரைசே பொன்னம்பலத்தாடு மமுதே யென்றுன்னருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. 5

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்தானும் பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. 6

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே.

அருளாதொழிந்தாலடியேனையஞ்சேலென்பாராரிங்குப்[கூத்தா
பொருளா வென்னைப்புகுந்தாண்டபொன்னே பொன்னம்பலக்
மருளார் மனத்தோடுனைப்பிரிந்து வருந்துவேனைவாவென்றுன்
தெருளார்கூட்டங்காட்டா யேற்செத்தேபோனாற்சிரியாரோ. 8

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார் திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. 9

நல்கா தொழியா னமக்கென்றுன் னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தானினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. 10

திருச்சிற்றம்பலம்

ஆக பாடல்—216.

---

## யாத்திரைப்பத்து.

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை, ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணையினால், ஆவா என்னப் பட்டன் பா யாட்பட் டீர்வந் தொருப்படுமின், போவோங் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே. 1

புகவே வேண்டா புலன்களினீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள், நகவே ஞாலத் துள் புகுந்து நாயே யனைய நமையாண்ட, தகவே யுடையான் றனைச்சாரத் தளரா திருப்பார் தாந்தாமே. 2

தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகையும், யாமா ரெமதார் பாசமார் என்ன மாயம் இவை போகக், கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்க னாள்வான் பொன்னடிக்கே. 3

அடியா ரானீர் எல்லீரும் அகல விடுமின் விளை யாட்டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைகொண் டிருமின் திருக்குறிப்பைச். செடிசே ருடலைச் செலநீக் கிச் சிவலோ கத்தே நமைவைப்பான், பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார் கழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர்காலம் இனியில்லை. உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போ வதற்கே யொருப்படுமின், அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவ தடை யாமே, புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கனாள் வான் புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் றாளே புந்திவைத்திட், டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோ ரிடையூ றடையாமே, திகழுஞ் சீரார் சிவ புரத்துச் சென்று சிவன்றாள் வணங்கிநாம், நிகழும் அடியார் முன்சென்று நெஞ்ச முருகி நிற்போமே. 6

நிற்பார் நிற்கநில் லாவுலகி னில்லோம் இனிநாஞ் செல்வோமே, பொற்பா லொப்பாந் திருமேனிப் புயங்க னாள்வான் பொன்னடிக்கே, நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே யொருப்படுமின், பிற்பால் நின்று பேழ் கணித்தாற் பெறுதற் கரியன் பெருமானே. 7

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்காள், அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா வழுங்கி யரற்றாதே, திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த போதே சிவபுரத்துத், திருமா லறியாத் திருப் புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே. 8

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின், போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம், ஆரப்பருகி யாராத ஆர்வங் கூர அழுந்துவீர், போரப் புரிமின் சிவன் கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாளாகாதீர், மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர், தெருள்வீ ராகில் இது செய்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன், அருளார் பெறுவாரகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே. 10

---

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே னீயலாற் பிறிதுமற் றின்மை, சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே, யொன்றுநீ யல்லை யன்றி யொன்றில்லை யாருன்னை யறியகிற் பாரே. 11

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணை
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பி. 12

---

## நால்வர் துதி.

வெங்குருவிற் சற்குருவா யுதித்துக் கூடன் மீன
வன்மேல் வினைதீர்த்தோன் விரைத்தாட் போற்றி,
துங்கமுறு மலைகடலிற் சிலைய தான தோணியில்வந்
தவன்பாத தூளி போற்றி, எங்கள்பிரான் றனையிருளிற்
பரவை வாசற் கேவல்கொண்டான் பதப்பதும விரு
தாள் போற்றி, புங்கவர்சூழ் திருவாத வூரில் வந்த
புண்ணியனு ரிணையடிகள் போற்றி போற்றி. 13

## நால்வர்மகிமை.

### சம்பந்தர்.

புனலி லேடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னூர்தலை தத்தெனத் தத்துமே
கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனையி லாண்பனை பெண்பனை யாகுமே
பழைய வென்புபொற் பாவைய தாகுமே
சினவ ராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே. 14

### அப்பர்.

தலைகொ ணஞ்சமு தாகவி ளையுமே
தழலி னீறு தடாகம தாகுமே
கொலைசெ யானைகு னிந்து பணியுமே
கூரரா விடந் தீரெனத் தீருமே

கலைகொள் வேதவ னப்பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லுமி தக்குமே
அப்பர் போற்று மருந்தமிழ்ப் பாடலே. 15

### சுந்தரர்.

வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதி லிருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட்டு நிற்குமே
செங்க லானது தங்கம தாகுமே
திகழு மாற்றிட்ட செம்பொ னளிக்குமே
துங்க வாம்பரி சேரற்கு நல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே. 16

### வாதவூரர்.

பெருகும் வையை தனையழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரம னேடெழு தக்கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே. 17

## திருவிசைப்பா.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 18

---

## திருப்பல்லாண்டு.

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதா
யிரந்திரந் தழைப்ப வென்னுயி ராண்டவற்
கென்செய வல்லமென் றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 19

---

## திருமூலநாயனுர் அருளிய திருமந்திரம்.

நடுவுநின் ருர்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் ருர்க்கு நரகமு மில்லை
நடுவுநின் ருர்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் ருர்வழி நானுநின் றேனே. 20

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. 21

ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. 22

---

### பட்டணத்தார் அருளியது.

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே. 23

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே. 24

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான். 25

---

அருணகிரிநாதர் அருளியது.

காமேவறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபத்து வகையான
நாலாறு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்குன் அருள்கூர
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாஅனைச்சொ லருள்வாயே
சேவேறு மீசர்சுத்த மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே. 26

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து. 27

## சேக்கிழார் அருளிய பெரியபுராணம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 28

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே, மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின், உண்டிநாலு விதத்திலாறு சுவைத் திறத்தினி லொப்பிலா, அண்டர்நாயகர் தொண்டரிச்சையி லமுதுசெய்ய அளித்துளார். 29

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். 30

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற் பெற்ற படிக்காசு, பல்லா றியன்ற வளம்பெருகப் பரமனடியாரானார்கள், எல்லா மெய்தி யுண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். 31

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பிற் றலைவர் பூதகணநாதர், முனிவரமரர் விஞ்சையர்கண் முதலாயுள்ளோர் போற்றிசைப்ப, இனிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப் பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார். 32

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள, ஏகநா யகரைக் கண்டார் எழுந்தபே ருவகை யன்பின், வேகமா னதுமேற் செல்ல மிக்க தோர் விரைவி னோடு, மோகமா யோடிச் சென்றார் தழுவி னார் மோந்து நின்றார். 33

## திருவாய்மொழி.

நன்றாய் ஞாலங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த், தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், லன்றேயப் போதேவீடு அதுவே வீடு வீடாமே. 34

## வில்லிபுத்தூராழ்வார் அருளியது.

முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந், திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினை, புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரு, மொருகோடி பூதேவ ருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம். 35

ஆக பாடல் 251

# பகவற் கீதை

## கஉ-வது பக்தியோக வத்தியாயம்.

### காப்பு.

பாதியோர் பெண்மையான் பரிந்து பெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூர மண்மையிற்
பேதியா துளம்பெறப் பேணிப் பாகவற்
கீதையான் மொழிகுவன் ஞானங் கிட்டவே. 1

வயநா னெதிரேகண்ட வுருவமே யிசைகிற்பாரோ [ரோ
தூயநான்மறைக்கு மெட்டாப் பொருளையே தொடர்கிற்பா
தாயனுய்ப் பெரியோரென்று தனஞ்செயன் வினவத்தானே
ராயனுய் நிறைகண்மேய்க்கு மாயன்வே றருளிச்செய்வான். 2

மன்னநீ காணநான்முன் காட்டிய வடிவைநெஞ்சா,
லுன்னல்வாய் மொழியினாலே யுரைத்தல்செய்பவர்
களெல்லா, மென்னலாற் பிரிதொன்றெய்தாரியாரினு
நல்லரிங்குச், சொன்னவ ரன்றிமற்றை யவர்கடந்
துறையுங்கேளாய். 3

உரைசெயற் கரிதாய்நெஞ்சி னுணர்விடப் படா
தாயெங்கும், புரையறக் கலந்துபோக்கு வரவின்றிப்
பொலிந்ததொன்றைக், கரைசெயற் கரியவாய புலன்
களைக் கடந்துகாண்பா, னரசமற் றியானேயென்னி
னன்னிய மென்னலாமோ. 4

காரண மிறந்தொன்றிற்குங் காட்சியிற் படாத
தொன்றைச், சேர்பவர் வருத்தம்வேறு செப்பிட
லாவதன்று, லோர்வரி திதுதான்வாழு முயிர்களா
லாவதொன்றே, யாரவர் பெருமைதன்னை யளவறுப்
பவர்களையா. 5

யாவர்கள் சிலவரெல்லா வினையுமென் கண்ணே
விட்டிட், டியாவர்த மறிவென்பாலே யாக்குவா ரவர்க
டம்மைச், சாவது முதலாயுள்ள துயர்க்கட னின்றுந்
தாங்கி, யாவர்க ளேனுங்காலஞ் சிறிதிலே யெடுக்கின்
றேனுன். 6

மெய்யுற வுன்னை யென்னிலே வைத்தா
லென்னில்வே றின்றி யொன்றுதற்
கையுற வில்லை யதுசெய முடியா
தாயினப் பியாசமே பயில்வாய்
பொய்யற வதுவும் புரிகிலா யெனினுன்
வினைகளென் பொருட்டினாற் புரிவாய்
செய்யுமவ் வினைக ளப்படிச் செயாயேல்
வினைப்பயன் றவிரவே செய்வாய். 7

அத்தி ஞானம் வினையி னதனினு
மெய்த்தி யான மிகுமதின் மேலதாம்
வித்தி னுய வினைப்பயன் வீடுதல்
சித்த சாந்தி யதற்பின் செறியுமால். 8

இருவகை யுயிர்க்கு மினியனாயின்ப துன்பம்யா
னென்ன தென் றறியா
தொருபொரு ளாலுங் குறைவுபா டின்றி
யுள்ளமு மொருவழிப் படாப்
பொருவருந் துணிவுங் கருணையும் புரிந்து
புலன்றெரி யுணர்வையென் பாலே
மருவினின் றொழுகு மியோகியென் பவன்காண்
மன்னமற் றெனக்குவே றினியான். 9

உலகமுந் தானும் வேறிலா மையினாற்
றொன்றொரு பொருட்குமஞ் சாதே
யலகிலா வுயிர்கட் கினியனா தலினா
லவைகளுந் தன்னையஞ் சாதே

புலவரா னவர்கள் புகழுவே நிகழ்வான்
பொறுமையு மயக்கமுங் களிப்பு
மிலகிடா நெஞ்சத் தியோகியென் பவன்கா
ணியாரினு மெனக்குவே றினியான். 10

ஒன்றினு மாசை யின்றியிங் கியங்க
டம்வழி யொழுகிடா தொருக்கி
நன்றியி னோடு தீங்கினி னைத்து
நல்வினை தீவினை துறந்து
பொன்றினு நோவுற் றழுதல்செய் யாதே
பூரித்தல் வாடுத லின்றி
யென்றுமுன் பிழந்த பொருட்கிரங் காதே
வரும்பொருட் கிச்சைசெய் யாதே. 11

இகழ்பவர் நட்டாரென்ப தின்றியே யின்பதுன்பந், திகழுவ மானமானஞ் சீதமோ டழலின்றீமை, புகழ்பழி யிவற்றுளொத்துப் பொருந்திவா ழிடமொன்றின்றி, நிகழ்தரு மியோகி கண்டாய் மற்றெனக் குரிய நீரான். 12

செயத்தகு வதுவாகிச் சேர்ந்தவர் செல்லறீர, வயக்கொடு போவதாய பொருளையா னுரைத்தவண்ண, மியற்பட வுணர்கிற்பாருக் கியான்மிக வினியனென்றூன், மயக்கற வொருவராலு மறிவறி தாயமாயோன்.

ஆக பாடல் 264.

# குரு கீதை.

நித்யா நந்தம் பரம ஸுகதம் கேவலம் ஜ்ஞான மூர்த்திம்
விஸ்வா தீதம்ககந சதுருஸம்தத்வமஸ்யாதிலக்ஷ்யம். 1

ஏகம் நித்யம் விமல மசலம் ஸர்வதீ ஸாக்ஷிபூதம்
பாவா தீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குரும் தம்நமாமி. 2

அஜ்ஞாந திமிராந் தஸ்ய ஜ்ஞாநா ஞ்ஜந ஸலாகயா
சக்ஷுருந் மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம: 3

அகண்ட மண்டலா காரம் வ்யாப்தம் யேந சராசரம்
தத்பதம் தர்சிதம் யேந த்ஸ்மை ஸ்ரீகுரவே நம: 4

த்யாநமூலம் குரோர் மூர்த்திம் பூஜாமூலம் குரோ: பதம்
மந்த்ர மூலம் குரோர் வாக்யம்முக்திமூலம் குரோர்க்ருபா
மந்நாத: ஸ்ரீஜகந் நாதோ மத்குரு: ஸ்ரீஜகத் குரு:
ஸ்வாத்மைவ ஸர்வபூ தாத்மா தஸ்மை ஸ்ரீகுரவே நம:
சைதந்யம் ஸாஸ்வதம் ஸாந்தம் வ்யோமாதீதம்நிரஞ்ஜநம்
நாதபிந்து களாதீதம் தஸ்மை ஸ்ரீகுரவே நம: 7
குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:குருர்தேவோமஹேஸ்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப்பிரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:

ஆக பாடல் 272.

---

## ஈசுவர கீதை.

### ௧௦-வது தத்துவ தரிசன அத்தியாயம்.

துக்காங் குறியில்குறி சூக்கசூ சனைதெரியி
லக்கணஞ் சகலவுல கத்தினங் குரமதுநல்
அக்கரம் பரமபத மப்பரஞ் சுடர்பிரம
நிர்க்குணம் பரவெளியி னிச்சயம் பெறநிகழும். 1

ஒப்பரும்பர தத்துவத் தொப்பிடுஞ்சுரு திக்கலை
கப்பறும்படி புத்தியிற் கற்பிதங்கள் கழற்றிமெய்த்
தப்பருந்தவர் சித்தமெய் தற்பரந்தனி லற்றதிங்
கப்பரம்பிர மத்தினுக் கத்தைலிங்க மெனப்படும். 2

அறிவினில் பிறிதெல்லா மறிவென லறிவாகும்
பெறவரி திதிலல்லாற் பிறிதினில் வெளிநில்லேன்
பிறவிய தறுஞானம் பெறவரி ததனாலே
மறவிய தருமாயா மயலல திலையெல்லாம். 3

நின்மல மாகி நிரஞ்சன மாய்வே
றின்மைய தாயவி காரமி தாமித்
தொன்மைய தாகிய சூக்கும ஞான
மென்மல மில்லுரு வென்ப ரறிந்தோர். 4

யோகினி லுளமென்பா லொருபடி யுறவைத்தே
யோகவெளினிலைகண்டா ரவரென தியல்கண்டார்
பாகம தறுமொன்றும் பலவுரு வமுநானே
யாகவு மெனையன்பா லறிஞரு மயலன்றால். 5

பேறுறு பிரமானந் தமுமது பெறுதாமும்
வேறுற வறிகின்றா ரவர்விழி மறைகின்றார்
கூறற வவிகாரங் கூடிய விறைதாமா
யூறற வுணர்கின்றா ருண்மையை யுணர்கின்றார். 6

பங்கமில்சீர் பரனுடைய தாதித்தன் பான்மையினை
யிங்கொருவர்க் கறிவரிய தாகியதவ் வியத்தத்தை
யெங்குமுள தாய்த்தம்பா லிலங்கியபே ரின்பத்தைத்
தங்களிலே நிலைபெற்ற சாந்தரடைந் திருப்பர்களால். 7

மெய்த்தக வீடிது விமல மாய்ப்பரி
சுத்தம தாகிநிர்த் தொந்த மாயொரு
பெத்தமில் பிரமரூ பத்திற் பேதியா
வுத்தம மெனதுசா யுச்ச மென்பரால். 8

ஆதியு நடுவு மந்தமு மிலாததொன்
றேதது வெனிற்பர மீச னனநா
னீதியி லெனையறி நிமல நித்தனும்
பேதமி லெனைப்பெறும் பிறவி பின்பெறான். 9

தபனனொளி பெருகிரவி சசியுடுமி னடையச்
சிவனிகழ்வி னிகழ்வுபெறச் சிறிதுமிவர் நிகழா
ரவனுடைய வொளிகொடொரு வொளிதிகழு மசையா
விவனதொளி சிரிதுபெறி லிவர்நிகழ்வு பெறுவார். 10

உதியாம லென்று மொழியாமைநின்ற
வொளியாகி யென்று முளதாய்த்
திதியாய் நிறைந்து தெளிவாகி யங்கோர்
செயலான தின்றி யருளான்
மதியாளர் தங்க ளகமே யகண்ட
வடிவாய் நிகழ்ந்த வடிவே
பதியாகி யென்று மழியாமை நின்ற
படியாகி நின்ற பரனன். 11

நித்தம னந்த நிட்கள மின்ப நிமலஞ்சற்
சித்தமு தந்தற் சிவமெனும் வேதத் திரளெல்லாஞ்
சுத்தனை யந்தச் சுருதியி னந்தத் துணிநெஞ்சத்
துத்தமர் தந்த முளம துணர்ந்தா ரோமன்றே. 12

தாராகாயம் பவனம்புத் தானனலல்ல னிராதார
ஞோராதான பிராணுதி யெல்லா வாயுவி னுருவல்ல
ஞோராகாசன்மனம்புத்தியுறமொருசேதனனவனல்லன்
பாராகார யோகத்திலகிய கேவலனுகும் பரமீசன். 13

எல்லாவே தத்துமறைந் திருப்பதுவா யாவர்க்குஞ்
சொல்லாத பரஞான முங்களுக்குச் சொன்னேனு
னல்லானிப் பரயோக ஞானத்தா லேநலிவொன்
றில்லாத விடத்தடைவா னெனவியம்பி யருளினுன். 14

ஆக பாடல்-286.

---

## பிரதம கீதை.

### எட்டாவது

### கைவல்லிய வுபநிடத தாற்பரியமுரைக்கு மத்தியாயம்.

நனிவேதநாலு முகமாக மேவி
நளினு லயத்தி லுறைவா
னனுபோகமாக வருளா லறிந்த
வவரே பரத்தை யறிவார்
தனிமேவுவார்கள் பெறுஞான மாகு
மிதுசா தனங்க ளுடைய
முனிமேவுவான தெனுமாறு வேத
மொழியோது மாறு மொழிவான். 1

முத்தியின் விருப்பத் தாலு முதலவ னற்பா தத்திற்
பத்தியி னுலு மற்றப் பரனையே பாவிக் கின்ற
நித்தமாந் தியானத் தாலு நிரந்தர யோகத் தாலுஞ்
சித்தியா மிதுசித் திக்கும் வினையினுற் சித்தி யாதால்.2

தக்கஞா னத்தைத் தான்பெறற் பொருட்டுத்
தனியிடந் தனையடைந் திதய
துக்கமே வாமற் சுகாசனத் திருந்து
தோடலை கழுத்துடம் பிவைநே
ரொக்குமா றிருத்திப் பூதிகொண் டிந்த
வுடம்பையுத் தூளனம் பண்ணி
மிக்கவாய் வருமிந் தியங்களை யெல்லாம்
விடயமே லெழாவகை விலக்கி. 3

பத்தியாற் குரவன் பதம்பணிந் திதய
பங்கயந் தனைநினைந் ததிலே
நித்தமா யொருவ ரானிணைப் பரிதாய்
நிமலமா யெங்கணு நிறைந்து
சுத்தமாய்ச் சாந்த மாயனைத் துலகுந்
தோன்றுதற் கியோனியாய்ச் சுபாவ
சித்தமா யமுதா யருவமா யொன்றாய்ச்
சிற்சதா னந்தமாய்ச் சிவமாய் 4

உரியநால் வேதத் தோமெனும் பொருளா
யுள்ளதா யுள்ளவெப் பொருட்குங்
கரியதாய் நின்ற வொன்றினைக் காள
கண்டமுங் கண்ணொரு மூன்றும்
பிறிவிலா மங்கை பாகமு மாகப்
பேணுநற் பாவனை பெறுவா
னரியதா யருளி னல்வரும் விச்சை
யதனினு லதனையே யடையும். 5

தெரிவரிய சிற்கனமாய்த் திகழ்சிவனே திசைமுகனு
மரியுடனவ் வரனுமவ னமரரதி பதியுமவன்
துரிசறவே யக்கரமாய்ப் பரமாகுஞ் சுராட்டுமவ
னெரியுமழல் காலனவ னிந்துவொடு பிராணனவன். 6

தாக்கரும் பரமன் றன்சுதந் தரத்தாற்
றன்னுடை மாயைதன் னாலே
யாக்கின னிந்த வுடம்படைந் தறியான்
போலநின் றனைத்தையு மதிலே
சாக்கிரத் தென்னு மிடம்வகுத் தன்ன
பானமுந் தையலார் முதலாம்
போக்கியங் களையும் புசித்திடுங் கனவும்
பண்ணியத் தன்மையே புசிக்கும். 7

உறங்குமவ் வியத்த மன்னிய தமத்தி
னுட்புகுந் தொன்றொழி யாம
லிறந்தவவ் விடத்தே தன்னுரு வான
வின்பமே புசிக்குமீண் டெழுந்து
கறங்குபோ னனவை யடையினு மடையுங்
கனவைவந் தடையினு மடையுஞ்
சிறந்தமுப் புரமு மிவன்விளை யாடித்
திரிதரச் செய்ததே திகழ்த்தில். 8

ஆதலாலறிவா னந்தமா யுள்ள
வமலனே யவைபுசிக் கின்றா
னீதெலாம் விளையாட் டேவிளை யாடு
மிடங்களே யிப்புர மூன்று
மாதலா காமை சொல்லவும் படுமோ
வதிசுதந் தரனையன் னியமா
யோதலா மோவிப் புரங்களு மவன்ற
னுருவமே யொழிவிலா மையினால். 9

மானுறு நனவு கனவுறக் கங்கள்
வடிவமா நிகழ்ந்துள விறைக்கு
ஞாலமே விசுவன் றைசதன் பிராஞ்ஞ
னுமமா நவிலுவ ரடைவே

தூலமே விசுவ னுண்பன சுருக்கந்
    தைசதன் றுய்ப்பன சுகந்தன்
பாலதா தலினுற் றன்னுடை யின்பம்
    பருகிடா நிற்குமே பிராஞ்ஞன். 10

ஓது வேதம் பலவாறு
    மோதி யுணரப் படுவேனுன்
வேத வேதாந் தப்பொருள்க
    ளெல்லாம் விளங்க வறிவேனுன்
றீது நன்ரும் வினைமாணஞ்
    செனனந் தேகேந் தியம்புத்தி
பூத மைந்து மின்றியக
    மிதமாய் நானே புசிக்கின்றேன். 11

எனையொழிய வொன்று மிலையெலா
    மெனதுரு வென்று நிகழ்வதோ
ரனுபவம் வந்து விளையுமே
    லழிவுள தன்றி யமலமா
யினிதுற நெஞ்சி லுறைவதா
    யிலதுள தன்றி யெதுவுமா
யனிய மிறந்த பிரமமா
    மறிவுரு வொன்றை யடையுமே. 12

கைவல்லிய வுபநிடதங் கருணையினு
    லேயேது கருதிக் கூறிற்
றுய்வில்லை யனியமொன்ரு லெனவரி
    பிரமாதிக ளுகவா நின்ரு

றெவ்வல்லியி னுளவதி காரிகளு
மிதறியும்படி யினிதிற் சொன்னே
னவ்வெல்லையில் பொருளதி பத்தியொ
டறிவுறுவீ ரமரர்க ளனைவீரும். 13

பண்டைநான் மறைகள் சொல்லிய பரிசே
பரகுரு வாயிருந் துள்ள
வண்டர் நாயகனை யாதரித் தவன்ற
னருளினு லநுபவ மாகக்
கண்டுளோ ரிருக்குந் தன்மையை யெல்லாங்
காதலால் வானவர்க் குரைத்தான்
புண்டரீ கத்தே யிருந்துதான் சகல
பூதமும் படைத்திடும் புனிதன். 14

ஆக பாடல்–300.

---

## ரிபு கீதை.

அகிலசகன் ஞயகனு யநந்த சத்தி
யமைவுற்ற அகண்டசிவன் சரணம் போற்றி
நிகிலசகன் மாதாவாய் நித்யா னந்த
நிசவடிவா மம்பிகையின் சரணம் போற்றி
சகலவித விக்கினமும் தீர்த்தெல் லோர்க்குஞ்
சாதகமாம் விஞயகனற் சரணம் போற்றி
தகைமைமிகு மன்பர்க்குச் சிவஞா னத்தைத்
தந்தருளுஞ் சண்முகனற் சரணம் போற்றி. 1

## நான்கு மஹாவாக்கியார்த்த முரைக்கும் அத்தியாயம்.

சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரிதாகிக் குய்ய மாகிச்
சுருதிமுடி யனைத்திலுநற் சார மாகிச்
சுத்தமதாம் பரப்பிரம சொரூபந் தன்னை
யிருளறவே நேராக வறிவிக் கின்ற
வியல்புள்ள நான்குமஹா வாக்கி யத்தின்
பொருளினையிங் கெல்லோர்க்கு மிதமே யாகப்
பூன்றசிவன் புகன்றபடி புகலு வாமே. 2

பெருமைமிகு மிருக்குமறை முடிவி லுள்ள
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கிய மொன்று
மிருண்மருவா யசுர்வேத முடிவி லுள்ள
விலகுமகம் பிரமாஸ்மி வாக்கிய மொன்று
மருண்மருவாச் சாமமறை முடிவி லுள்ள
மகத்தான தத்வமசி வாக்கிய மொன்று
மரியவதர் வணவேத முடிவி லுள்ள
அயமான்மாப் பிரமமெனும் வாக்கிய மொன்றும். 3

இந்தவித நான்குமறை முடிவின் கண்ணே
யிருக்கின்ற நான்குமஹா வாக்கி யத்துண்
முந்தியதாம் பிரஞ்ஞானம் பிரம மென்றே
மொழிந்தமஹா வாக்கினுடைப் பொருளைச் சொல்வா
மைந்தவிதிற் பிரஞ்ஞானம் பிரம மென்று
மருவுபத மிரண்டாகு மற்றி வற்றின்
முந்தியதாம் பிரஞ்ஞான பதத்தி னுக்கு
முக்கியமா மர்த்தத்தை மொழியக் கேளாய். 4

ஞானமதே பிரஞ்ஞான மென்ன லாகும்
ஞானத்தாற் சகலமுமே தெரிவ தாகும்
ஞானமதிற் றெரிகின்ற சகத்த னைத்தும்
ஞானத்திற் கற்பிதமாய்த் தெரிவ தாலே
ஞானமல தன்னியமா யொன்று மில்லை
ஞாலமுத லெப்பொருளு ஞான மாத்ரம்
ஞானமதே நமதுநிஜ வடிவ மாகும்
ஞானமதே பரப்பிரம வடிவு மாமே. 5

சருவஜகத் ததிட்டான சொரூப மான
சத்தியஞா னனந்த வத்துத் தானே
பிரமமெனும் பதத்தினுடை யர்த்த மாகும்
பிரமமதிற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
வொருபொருளும் பிரமத்திற் கயலே யாகா
துணர்வுற்ற பொருளெல்லாம் பிரம மாத்ரம்
பிரமமதே நமதுநிஜ சொரூப மாகும்
பிரமமதே பிரஞ்ஞான சொரூப மாமே. 6

பிரஞ்ஞானப் பொருடானே பிரம மாகும்
பிரமமெனும் பொருடானே பிரஞ்ஞா னங்கா
ணஞ்ஞான முதலியவா முபாதி யாலே
யகண்டபரம் பொருடானே யிரண்டு போலாம்
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கி யார்த்தம்
பிறங்கியதா லுபாதியெலா நீங்கும் போது
விஞ்ஞான கனமான வத்து வொன்றே
வேறற்ற வகண்டார்த்த மாகி நிற்கும். 7

பிரிவுற்ற வுபாதியுறுஞ் சீவன் ருனே
    பிரஞ்ஞான பதத்தினுடை வாச்சி யார்த்தம்
விரிவுற்ற வுபாதியுறு மீசன் ருனே
    விளம்பியிடும் பிரமபத வாச்சி யார்த்த
மொருமித்த நிருபாதி வத்துத் தானே
    யுபயவித பதத்திற்கு மிலட்சி யார்த்தந்
தெரிவித்த வுபயபத லட்சி யைக்யந்
    திகழுமஹா வாக்கினுடை யகண்டார்த் தங்காண். 8

இன்னவிதம் பிரஞ்ஞானம் பிரம மென்னு
    மிலகுமஹா வாக்கினுடை யருத்தஞ் சொன்னே
முன்னியதா யிங்குரைசெய் நீதி யெல்லா
    மூன்றுமஹா வாக்கினுமே தெரிந்து கொள்வாய்
பின்னையகம் பிரமாஸ்மி யென்ப தாகப்
    பேசுமஹா வாக்கினுடைப் பொருளைக் கேளா
யன்னவகம் பிரமாஸ்மி வாக்கி யத்தி
    லகம்பிரம மஸ்மியெனப் பதமூன் ருமே. 9

முந்துமகம் பதத்துக்குச் சீவ னர்த்தம்
    மொழிபிரம பதத்துக்கவ் வீச னர்த்தம்
அந்தமிலாச் சீவபர வயிக்கியந் தானே
    அஸ்மியெனும் பதத்தினுடை யருத்த மாகும்
இந்தவித மிந்தமஹா வாக்கியத்தி
    னேகரச மாகியுள வகண்டார்த் தத்தைப்
புந்தியிஞ லாய்ந்திதனை யனுப வித்துப்
    புகன்றவகண் டேகரச சொரூப மாவாய். 10

பேதமுறு முபாதியினாற் கிஞ்சிஞ் ஞத்வம்
பிறங்கியசர் வஞ்ஞத்வ மாதி யாவு
மோதியசீ வேசருடைத் தன்மம் போலா
முபாதியெலாம் விசாரித்துத் தள்ளுங் காலை
யாதியிலாச் சீவபர வைக்ய மிஞ்சு
மதுதானே யகண்டார்த்த மாமவற்றை
யோதுமகம் பிரமாஸ்மி வாக்கியத்தா
லுணர்ந்தந்த வகண்டார்த்த வடிவே யாவாய். 11

அனகவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மாசிரிய னருளியவா றறிந்த போதும்
பினையுமதை யுத்தியுடன் மனனஞ் செய்து
பிராந்திதருஞ் சங்கை யெலாம் பெயர்க்க வேண்டுஞ்
சொனவிதமாய்ச் சங்கையெலாம் பெயர்ந்த பின்னர்ச்
சுழல்கின்ற விபரீத மனைத்துந் தீர
வனிசமகம் பிரமாஸ்மி யென்ப தாக
வாதரவோ டப்யாசஞ் செய்ய வேண்டும். 12

இந்தவிதம் விசாரித்த விவேகி யெல்லா
மேகபர பாவனையே யிடைவி டாமற்
சந்ததமுஞ் செய்ததனால் விபரீ தத்தைச்
சற்றேனு மிஞ்சாது நாசஞ் செய்தே
யந்தவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மானவகண் டார்த்தத்தி னனுப வத்தைப்
புந்திதனிற் ப்ரதிபந்த மொன்று மின்றிப்
பூரணமா யெப்போதும் பொருந்த வேண்டும். 13

பலவிதமாம் வாதனையுந் தூரத் தள்ளிப்
பகர்ந்தபடி யகண்டார்த்த மநுப விப்பா
யிலகுமகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மிவ்விதமா யிசைப்புற்றோ மினியு னக்குத்
திலகமதாந் தத்வமசி வாக்கி யார்த்தந்
திடமாகச் சித்தமிசைத் தெளியச் சொல்வாந்
தலைமையதாய்த் தயங்கியவிவ் வாக்கி யத்திற்
றத்வமசி யெனமூன்று பதங்க ளாமே. 14

மாயையெனு முபாதியுறு மீசன் றானே
மருவியதத் பதமுரைசெய் வாச்சி யார்த்த
மாயதன தவித்தையுறுஞ் சீவன் றானே
யறைகின்ற துவம்பதமோர் வாச்சி யார்த்த
மேயமதா முபாதியெலா மிழந்த பின்ன
ரேகவிலக் கணமான வத்துத் தானே
தூயபத மிரண்டிற்கு மிலட்சி யார்த்தந்
தொடர்புற்ற வைக்கியமே யசிப தார்த்தம். 15

சொல்லியவிவ் வைக்கியமா மகண்டார்த் தத்தைச்
சுத்தமதாந் தத்வமசி வாக்கி யத்தாற்
கல்லெனவே திடமாக வறிந்தெப் போதுங்
கலங்காம லகண்டேக ரசமே யாவா
யெல்லையிலா வகண்டவடி வாகு மட்டு
மிதரமுணர் விருத்தியெலாந் தூரத் தள்ளிப்
புல்லுமகண் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியதாற் பூன்ற னுவாய். 16

தற்பதலட் சியமான பிரம ரூபந்
துவம்பதலட் சியமான நீயே யாவாய்
யற்பமுமே யிதிலைய மமைவ தில்லை
யகண்டசிவன் றன்னுணை யறைந்த துண்மை
சொற்பமிலா வகண்டபரி பூன்ற மான
சுத்தமதாம் பரப்பிரம நீயே யென்று
செப்பியிடுங் குருபரனே குருவா கின்றேன்
செப்பியவா றரிந்தவனே சீடனானேன். 17

உச்சமதாங் குருவருளு மகண்டார்த் தத்தை
யுவகையுட னுள்ளபடி கேட்ட பின்னர்
நிச்சலமாம் புத்தியினு னிச்ச யித்து
நிருமலமா யகம்பிரம மானே னென்றே
துச்சமிலா வநுபூதி யடைந்த வன்றான்
றுகளற்ற சற்சீடன் மற்றோ ரெல்லா
மெச்செயலைச் செய்யினுமே சீட ராகா
ரேகபர மறிந்தவனே சீட னாவன். 18

செகம்பரனு னீதெனவே வேறு வேறாய்ச்
செறிகின்ற விஜாதீய விருத்தி யின்றி
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றநவரத மிடையறவே தொடரா நின்ற
தகும்பிரம பாவனையாம் விருத்தி தானே
தடையற்ற சஜாதீய விருத்தி யாகு
மிகும்பிரிய முற்றிதனை யப்யா சிக்கின்
மேவுவிப ரீதமெலா மடைவாய்த் தீரும். 19

இன்னவித மூன்றுமஹா வாக்கி யத்தி
னேகரச மாகுமகண் டார்த்தஞ் சொன்னோம்
பின்னையுனக் கயமான்மாப் பிரம மென்னும்
பேசுமஹா வாக்கினுடைப் பொருளைச் சொல்வா
மன்னியமி லந்தமஹா வாக்கி யத்தி
லயமான்மாப் பிரமமெனப் புதமூன் றாகும்
பன்னுபத மூன்றிற்கு மடைவே யாகப்
பகர்கின்ற வருத்தத்தைப் பரிந்து கேளாய். 20

சித்திரமா முபாதியுறுஞ் சீவன் றானே
செப்புமயம் பதத்துக்கு வாச்சி யார்த்தம்
வித்தரமா முபாதியுறு மீசன் றானே
விளம்பியிடு மான்மபத வாச்சி யார்த்தம்
சுத்தமதாஞ் சீவபர சொரூபந் தானே
சொல்லியவிவ் வுபயபத லட்சி யார்த்த
மத்திரமா முபயபத லட்சி யத்தி
னைக்கியமே பிரமமெனும் பதத்தி னர்த்தம். 21

மற்றுமொரு விதமாயிவ் வாக்கி யத்தின்
மதிக்கின்ற பொருளினையு முரைப்பக் கேளாய்
சற்றுமிருண் மருவாத சுவப்பிர காச
சைதன்ய வடிவான பிரத்ய கான்மா
வுற்றவய மான்மாவென் றுரைக்கப் பட்ட
வுபயவித பதத்திற்கு மருத்த மாகும்
முற்றுமிலா விவ்வுலகின் மூல வத்து
மொழிவுற்ற பிரமபதத் தருத்த மாமே. 22

சுயமதுவாந் தத்வமசி யென்னும் வாக்யம்
சொல்லுமுப தேசமகா வாக்ய மாகு
மியலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்யம்
மிலகுமநு பூதிமஹா வாக்ய மாகு
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்யம்
மனனத்தி னப்யாச வாக்ய மாகும்
அயமான்மாப் பிரமமென வறையும் வாக்ய
மதற்கெல்லாஞ் சம்மதமாம் வாக்ய மாமே. 23

ஆதலினாற் றத்வமசி வாக்கியத்தா
லருளியவா றகண்டார்த்த மறிந்து கொண்டு
பேதமறப் பிரஞ்ஞானம் பிரம மென்று
பேசுமஹா வாக்கதனான் மனனஞ் செய்து
வாதகமி லயமான்மாப் பிரம மென்னும்
வாக்கதனாற் சரியெனவே சம்ம தித்திங்
கோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுரைத்தவகண் டார்த்தத்தை யநுப விப்பாய். 24

அனிசமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லகண்டபர பாவனையே யப்யா சித்து
நனிமருவும் பாவனையா னும ரூப
நாட்டமெலா நன்றாக நாசஞ் செய்து
துனிமருவுந் துவிதத்தின் றொடர்பே யின்றித்
துகளற்ற வகண்டார்த்த மநுப வித்தவ்
வனியமிலா வகண்டார்த்த வடிவே யாவா
யவ்வண்ண மாகுவதே யகண்ட மோட்சம். 25

அகிலசகந் நாயகனும் பரேசன் றன்னை
யநவரத மாதரவா யாரா தித்து
மிகவுமருட் பெற்றவரே மனதின் சுத்தி
மேவினராய் விளம்புமஹா வாக்கி யத்தின்
றகுபொருளைத் தடையறவே யநுப வித்துத்
தன்மயமே யாவரென நிதாக னுக்கு
நிகழ்வுறவே ரிபுமுனிவன் கருணை யாலே
நிகிலமஹா வாக்குகளின் பொருளுஞ் சொன்னன்.

வத்து நிர்ணய சாதக மாமஹா
வாக்கி யங்களி னுற்பர சீவரின்
சுத்த மாயுள வைக்ய மறிந்தவர்
சூழு மிப்பவ லேச மிலாமலே
நித்தி யானந்த வத்துவ தாகவே
நிற்ப ரென்றுர மாவிங்குப் பேசுதல்
சத்தி யாநந்தத் தாண்டவ மாடுநஞ்
சாம்ப மூர்த்தியின் பூரண ரூபமே. 27

பத்தருடைப் பவதாப மனைத்து நீக்கிப்
பரமசுக நல்கியநின் சரணம் போற்றி
சுத்தபர ஞானத்தை யெளிதாய்த் தந்து
சோர்வையெலா நீக்கியநின் சரணம் போற்றி
சித்தமுதற் கப்பாலாய்ச் செறிந்து நின்ற
சிதாகாய வடிவேநின் சரணம் போற்றி
வித்தரமாம் வேதாந்தப் பொருளை யெல்லாம்
விளக்கியசற் குருவேநின் சரணம் போற்றி. 28

அனாதிபவ வாரிதியி லமிழ்ந்த வென்னை
யகண்டபர ஞானமெனு நாவாய்க் கொண்டு
சனாதனமாம் பரப்பிரம தீரத் தின்கண்
சகஜமதா யேற்றியசற் குருவே போற்றி
வினாசமுறுந் தேகாதி நானென் றெண்ணி
விதம்விதமாந் துன்பமிகுந் திருந்த வென்னை
யனாமயமாம் பரப்பிரம நீயென் றோதி
யகண்டசுக நல்கியசற் குருவே போற்றி. 29

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே நீயென்று முபதே சித்துச்
சகமுதலி துண்மையதாஞ் சடநா னென்னுஞ்
சங்கையெலா நீக்கியசற் குருவே போற்றி
விகலமுறுங் கருமத்தால் கதியுண் டென்று
வெகுகால மயக்கமுடன் சுழன்ற வென்னைத்
தகைமைமிகு மகண்டபர ஞானந் தந்து
தற்பரமே யாக்கியசற் குருவே போற்றி. 30

அருள்வடிவா யெழுந்தருளி யென்னை யாண்ட
அகண்டபர வுருவான குருவே போற்றி
சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சால்வுமே யரியபர குருவே போற்றி
நிருமலமாய் நிஷ்களமாய் நிகரில் லாதாய்
நீக்கமற நிறைந்தபர குருவே போற்றி
பரசிவமாய்ப் பராபரமாய்ப் பரமான் மாவாய்ப்
பரப்பிரம மானபர குருவே போற்றி. 31

விமலமதாம் வேறற்ற வகண்டா கார
விருத்தியினில் விளங்கியசற் குருவே போற்றி
யமலமதா யகண்டபர வித்தை யாகி
யவித்தையெலா நீக்கியசற் குருவே போற்றி
நிமலமதாம் வித்தைக்கு மப்பா லாகி
நிச்சலமாய் நின்றபர குருவே போற்றி
சமமதுவாய்ச் சற்றுமொரு சங்க மின்றிச்
சன்மாத்ர மானபர குருவே போற்றி. 32

சத்தியசிற் சுககனமாங் குருவே போற்றி
சலனமிலாச் சாந்தபர குருவே போற்றி
நித்தியநிர்க் குணமான குருவே போற்றி
நிரஞ்சனமாய் நின்றபர குருவே போற்றி
சுத்தபர வெளியான குருவே போற்றி
சூட்சுமமாய் நிறைந்தபர குருவே போற்றி
யத்துவித பூரணமாங் குருவே போற்றி
யகண்டமதாஞ் சற்குருவேபோற்றி போற்றி. 33

திடஞானி தெரிசனமே தீர்த்த மாடல்
திடஞானி தெரிசனமே தேவ பூசை
திடஞானி தெரிசனமே செபத பங்கள்
திடஞானி தெரிசனமே செயும றங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின் சேவை
திடஞானி தெரிசனமே மேவு தற்குத்
திரிவிதமா முலகத்து மரிதா மியார்க்கும். 34

அங்கமுத லணுவுமிலா தகண்டா கார
மாகியுள வத்துவித பரசி வத்தைச்
சங்கமறச் சந்ததமுஞ் சிவோக மென்னுஞ்
சலியாத பாவனையாற் பூசை செய்து
துங்கபர சிவகருணை திடமாய்ப் பெற்றுத்
தொடருமனோ விகற்பமெலா முடனே தீர்ந்து
பங்கமிலாப் பரமசிவ போதங் கூர்ந்து
பரமசிவ பத்தனுநா னேனே யா. 35

ஆக பாடல்-335.

---

## ஞானவாசிட்டம்.

பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
முன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த்
துன்னுவ தப்பொரு டொழுதி றைஞ்சுவாம். 1

### திதிப்பிரகரணம்.

பெறற்கொ ணாதசத் துவகுணப் பிறப்பினர் புவிமே
னிறந்து வாழ்வது வான்றிகழ் நிறைமதி நிகராம்
வறக்குந் துன்பத்தில் வாடல ரிரவுதான் வரினுஞ்
சிறக்கும் பொற்கம லத்தலர் குவியுமோ சிறிதும். 2

பகுத மன்றியே மற்றுள தொழில்களிற் பற்றார்
தகுதி யாகிய மேலவர் நெறியிலே சரிப்பர்
மிகுதி யானிறைந் தசைவறு முளத்தினுன் மிகுவர்
தொகுதி யானநட் பருண்முதற் குணங்களாற் சுடர்வார். 3

இயற்கை யாகிய குணத்தின ரிழிவுயர் விரண்டு
நயக்க லாதவர் சமமுளோர் நன்னெறி நடப்போர்
வியக்கு மாறுதன் கரைகடா வேலையை யொப்போர்
மயக்கி லாதவ ரிரவிபோ னியதியை வழாதோர். 4

கொள்ளற் பாலது துயரிலா தவர்நிலை குறுகத்
தள்ளற் பாலது தீயவர் நெறியெனுஞ் சழக்கே
யெள்ளற் பாலது வுலகமே தியாமெவ னென்றே
தெள்ளற் பாலது குரவரா லறிவினூற் றீர. 5

வருந்து கிற்பது தனையறி நெறியிலே மனத்தாற்
றிருந்து கிற்பது கருமத்தி லழுந்திலாச் செய்கை
பொருந்து கிற்பது தீயவ ரல்லவர் புணர்ச்சி
யருந்து கிற்பது நானென்ப தாக்குகிற் பதுவே. 6

தீர்க்கத் தக்கது நரம்பெலும் பெனுமுடற் றியக்கம்
பார்க்கத் தக்கது முழுதுயிர்க் குள்ளுறை பரமே
யீர்க்கத் தக்கதே ரிரவியி னிடத்தினும் பாரி
னீக்கத் தக்கிலாப் புழுவினுஞ் சித்தொான்றே நிற்கும். 7

தாம தத்துட னிராசதஞ் சாத்திக மென்னு
நாம முக்குணப் பிறவியு முயற்சியா னண்ணுஞ்
சேம முத்தியைச் செய்திடுஞ் சாத்திகச் செய்கை
யிராம வுத்தம ராகவ வென்றுமீட் டுரைப்பான். 8

## உபசாந்திப் பிரகரணம்.

### சனகராசன் கதை.

சுரர்குருவின் மகனுரைத்த படியேயிவ்
வுலகெலாஞ் சொரூப மாகும்
விரவியநீள் பிறப்பிறப்பா மிகுமாயை
யிராசததா மதத்தை மேவும்
புருடார்தரித் திடவற்றாய்த் தூண்சுமக்கு
மண்டபமே போல நிற்குந்
திரமுளசத் துவகுணத்துன் போல்வார்கள்
சநநபயந் தீர்ந்து நிற்பார் 9

வழுவறுசத் துவகுணத்தோர் தோலுரிக்கு
மரவென்ன மாயா பாச
நழுவுமெரெல் லாம்பிரம நாமதுவே
யென்றெண்ணி நாமும் வேறே
முழுதுலகம் வேறென்னு மோகமொழிப்
பாய்பிரம மூலச் சித்தி
லெழுவனகற் பனையெல்லாங் கடலிலலை
போலமெய்யா யில்லை யன்றே. 10

சோகமிலை மோகமிலை பிறப்பில்லை
பிறப்பிறப்பிற் சுழல்வா ரில்லை
யேகமென விங்கென்று முள்ளபொரு
ளேயுள்ள திரங்க வேண்டா

மூகமுற வருவனபோ வனநினையேற்
றெருந்தனைக ளொன்று மில்லா
மாகனசத் துவகுணத்தோ டொருவனு
யிடரெல்லா மாற்றி நிற்பாய். 11

சமமாகிச் சொரூபத்தே நிலையாகித்
திரமதியாய்ச் சாந்த னாகி
யமர்மனன மௌனியாய் நன்மணிபோற்
றெளிந்துதுய ரனைத்துந் தீர்வாய்
நிமலமுற நிகழ்காலத் தொழிற்செய்தி
யாவையினு நேய மின்றி
நமதெனக்கொள் ளுதல்விடுத லிரண்டுமறத்
துன்பமெலா நாசஞ் செய்வாய். 12

இனிப்பிறவா முடிவான பிறப்பிலே
மெய்ஞ்ஞான மெளிதி லுண்டாம்
பனிச்சுடர்வெண் ணித்திலங்க ளுத்தமமா
மூங்கிலல்லாற் படுவ துண்டோ
செனித்தவரின் மேலோ ராய் நல்லோராய்
மித்திரராய்த் தெளிந்தோ ராகி
யனித்தமறு முத்தராய் ஞானிகளாங்
குணமெல்லா மவரைச் சேரும். 13

மெத்தென்ற சரித்திரத்தி னவர்தம்மை
யுலகமெலாம் விரும்புந் தன்மை
கொத்தொன்று வனமூங்கிற் குழலிசையான்
மகிழ்விலங்கின் கூட்டம் போலு

மித்தன்மை யாவருக்கும் பொதுமையினு
லியம்பியதா மிதனில் வேருய்ச்
சத்தென்ற வழியிரண்டேழ் பவந்தீர்ப்ப
வர்க்கவற்றைச் சாற்றக் கேண்மோ. 14

தேசிகன்சொற் பிழையாம லனுட்டிக்கிற்
பையப்பையத் தியக்க நீங்கிப்
பேசியசென் மத்தாத லடுத்தசில
பிறப்பினு லாதல் பேரும்
மாசறுவிற் பத்துசிறி துண்டாகு
மனத்தாற்றன் மனனத் தாலே
யேசறுமா காசபலம் வீழ்வதுபோன்
மெய்ஞ்ஞான மெளிதி லுண்டாம். 15

இவ்விரண்டி லாகாச பலம்போல
மெய்ஞ்ஞான மியைந்த தன்மை
செவ்வியவள் ளான்முன்னோர் கதையாலே
யான்செப்பத் திருந்தக் கேட்பாய்
தெவ்வுலகி லாபத்தென் றுன்றமிலோன்
விதரணத்தோன் செல்வ மிக்கோ
னவ்வியமில் விதேகநா டரசாள்வோன்
சனகனெனு மரசர் கோமான். 16

சற்குணத்தாற் கடலனையான் சக்கரத்தா
னெனவுலகந் தாங்கு நீரா
னற்குணஞ்செய் வசந்தனு ணறுமலர்சூழ்
நந்தனத்தி னயந்து மேவித்

தற்குரிய தந்திரர்கள் புறநிற்பத்
தனியனையச் சரிக்கும் வேளை
சிற்குரிய மனமுடைய சித்தர்கணம்
பாடுவபண் செவியிற் கேட்டான். 17

வெறியாரும் பொருப்புறைவோர் விழிப்புலத்தின்
மேவாதோர் விளம்பு கீத
நெறியார்மன் னவன்கேட்ட படியுரைப்ப
நெடியவனே நினைவிற் கொள்வா
யறிவானு மறிபொருளுங் கூடியகூட்
டரவிலெழு மறிவா நந்தம்
பிறியாத வான்மதத் துவத்தெழுந்த
தாமதனைப் பேணல் செய்வாம். 18

காண்பானுங் காண்பனவுங் காட்சியும்வா
தனையுடனே கழல விட்டுச்
சேண்பாவு காட்சிக்கு முதலொளியா
மச்சொருபஞ் சிந்தை செய்வா
மேண்பாலா முள்ளதில தெனுமிரண்டி
னிடையெய்தி யிறவி லாதாய்
மாண்பான வொளிக்கெல்லா மொளியாமச்
சொரூபத்தை மதித்தல் செய்வாம். 19

அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந்
தனவரத முரைப்ப தாகி
நிகழொளியா யான்மதத் துவமான
சொரூபத்தை நினைத்தல் செய்வாந்

திகழிதய குகையுறையுந் தேவதையை
விட்டயலே தெய்வந் தேடன்
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்துசிறு
மணிதேடும் வேட்கை போலாம் 20

மாளாத காதலெனும் வற்சநா
பிக்கொடியின் வனத்தைச் சுட்டு
நீளாசை யனைத்துமறுத் தவர்க்கன்றே
விப்பயன்று னேரா நிற்குங்
கோளான பொருளனைத்தின் முன்பொடுபின்
பினிமையிலாக் குற்றங் கண்டு
மீளாத பாவனையாற் கட்டுண்பார்
வேசரியே வேறொன் றன்றால். 21

எழுந்தெழுந்து சீறுகின்ற விந்திரியப்
பாம்புகளை யிதயந் தன்னி
லழுந்துவிவே கத்தடியால் வச்சிரங்கொண்
டிந்திரன்வெற் படர்வ தென்ன
விழுந்திடமோ துறவேண்டுஞ் சாந்தியினாற்
சமமேவி யிடர்தீர் நெஞ்ச
முழுந்துசுக வடிவாந்தற் பதநிலையைப்
பெறுமிதுவே முத்தி யென்ன. 22

தெளிவுடைய சித்தர்கணந் திகழ்வுறப்பா
டியகீதந் தெளியக் கேட்டுக்
களிதருவெஞ் சினக்கருட னொலிகேட்ட
பாம்பென்னக் கலங்கி மன்னன்

குளிர்பொழிலின் றகமடைந்தா னனைவரையும்
விடைகொடுத்துக் கோயில் புக்கா
னளிர்சுவைசெய் மேனிலத்தி லொருவனே
யிருந்துநனி நாட லுற்றான். 23

பறக்கின்ற பறவைகளின் சிறகென்ன
வனவரதம் பதைத்து லாவி
யிறக்கின்ற வுலகநடை நோக்கிவாய்
விட்டிரங்கி யியம்ப லுற்றா
னறக்கன்றி யவத்திலுழன் றலமருமிவ்
வுலகிடையா னந்தோ வந்தோ
நிறக்கின்ற மயக்கத்தாற் கல்லிடைக்கற்
போலுருண்டு நெரிந்தே னந்தோ. 24

காலமொரு கான்முடியா திதனிடையெண்
ணூருண்டோர் கணமு மில்லை
சாலவிது தனைமதித்து வன்காத
லிடைவீழ்ந்து தளர்வ தேனுன்
றாலமதி யாற்கெட்ட வெனைப்போல
வீனரார் சொல்லற் பாற்றோ
சீலமறு வாணாளைப் பெரிதாக
நினைவதே சீசீ யந்தோ. 25

எல்லையிலா வண்டத்தி லியாவரும்
புவிநோக்கி விறையு மில்லை
யல்லலுறு மிதுபெரிதா வாதரித்து
நிற்பதே யந்தோ வந்தோ

புல்லிமையற் றினிதாகி யுதாரமாச்
செயப்படாப் பொருளீ தென்னத்
தொல்லுலகி லொருபொருளுங் காணேனித்
தொடர்ச்சிநிலை யென்னே யென்னே. 26

தலைவர்தலை மேலுறைவோர் நாட்களினுற்
ருழ்ந்தோர்க்குந் தாழ வீழ்வர்
நிலையில்பெரு மையையுறுதி நினைக்கின்ற
நெஞ்சேயிந் நினைவீ தென்னே
தொலைவில்பெரும் போகங்கள் பெரியோர்கள்
கிளையோடுந் தோன்றித் தோன்றி
யுலைவுறமாண் டார்முன்னு ளிந்நாளிங்
கிவையனைத்தி லுறுதி யென்னே. 27

மண்ணாடு மன்னவரு மவர்தனமு
மாண்டனநுண் மணலை யொக்கும்
விண்ணாடு மிந்திரரு மவர்வாழ்வும்
போயினவிண் மீனை யொக்கு
மெண்ணாடும் பிரமருமண் டமும்பூதங்
களுமிறந்த வெல்லை யில்லைக்
கண்ணாடு மவையெங்கே நின்வாழ்க்கை
நிலையென்னே கவலு நெஞ்சே. 28

செல்லாத மாயையிரு ளிரவிலே
தேகமயத் தியக்க மான
பொல்லாத நீள்கனவாஞ் சூனியத்தி
லிச்சையிறை பூண்டே னென்னிற்

கல்லாத புல்லியனேன் சிசீநா
னனவரதங் காணு நாட்க
ளெல்லாம்போ யினபோமா லிறவாதொன்
ருய்நன்ரு மெழினாட் காணேன். 29

நடுவின்முடி வினிலடியி னன்ருன
பொருளொன்று ஞாலத் தில்லைப்
படுபொருளெல் லாமிறப்பா மலத்தினு
லேபூசப் பட்ட தன்ரூ
கடுவினைக ளுடோறுங் காய்துயர
நாடோறுங் கரையொன் றில்லாக்
கொடுமைகளே நாடோறுஞ் செய்கின்ரு
ரறிவில்லார் குரம்பைக் கூத்தால். 30

பாலகனு யஞ்ஞானத் தழுந்துவனற்
காளையாய்ப் பாவை மாராற்
சாலவருந் துவன்விருத்தன் ருகிக்
குடும்பத்தாற் றளர்ந்து சாவன்
மேலவிவ னெக்காலத் தென்செய்வான்
மாயக்கூத் திருந்த வாறே
ஞாலமெலா மாடரங்காய்ப் பொறிமேள
மாய்மனப்பேய் நடிக்கு மன்றே. 31

உள்ளத்தின் முடிமேலே யில்லாமை
வீற்றிருக்கு முலகி லென்றுந்
தெள்ளூற்ற நல்லறத்தின் சிரத்திலே
யெப்பொழுதுந் தீமை வாழு

மெள்ளற்ற வின்பத்தின் றலைமேலே
துன்பங்க ளிருக்கு மென்றாற்
கொள்ளத்தக் கனவான குற்றமிலாப்
பொருளேது குறிப்பு ளேற்கே. 32

விழிப்பதுவு மிமைப்பதுவுஞ் சகத்தோற்ற
மொடுக்குமா மேலோ ருண்டாற்
பழிப்பரிய வன்னார்முன் னென்போல்வா
ரென்னென்று பகர லாவ
ரிழிப்பரிய விசித்திரமாஞ் சம்பத்து
மாபத்தா மிதயங் காயி
லொழிப்பரிய விசித்திரமா மாபத்துஞ்
சம்பத்தா முள்ளம் வேண்டில். 33

வெம்மாய வாழ்வன்றோ துயர்க்கெல்லாம்
பிறப்பிடமாய் விளம்பு கின்ற
தம்மாவிங் கிதனிடையே யழுந்துமவர்க்
கின்பமுள தாவ தெங்ஙன்
மைம்மாயை யென்னுமரம் பணையிலைபூ
காய்பழத்தால் வரம்பற் றோங்க
விம்மால்செய் மனம்வேரா மிம்மனந்தான்
சங்கற்ப மென்ப தாகும். 34

சங்கற்ப நாசத்தா லெளிதாக
மனநாசந் தானே யெய்து
மங்குற்ற மனமிறக்கிற் சநநமர
ணங்களெனு மாமு மாயு

மிங்கிப்பா லெனைத்திருடுங் கள்ளனைக்கண்
டேன்கண்டே னிவன்பேர் நெஞ்சம்
பொங்குற்ற நெஞ்சத்தா னெடுநாளொளுந்
தேனின்று பொன்று விப்பேன். 35

இத்தனைநாண் மனமுத்தைத் துளைத்திலே
னின்றுதுளைத் தியைந்த நூலாற்
சித்திரமாய்க் கோத்தணிவன் முழுதுணர்ந்த
தேசிகராற் றெளிந்தே னெல்லாஞ்
சுத்தபர மாநந்தந் தோற்றுவிக்கு
நல்லறிவாஞ் சோதி பெற்றேன்
மெத்தவிவ ஞானெனதிங் கிவையெனும்பொய்
யுள்ளொழித்தேன் மீண்டு நாடேன். 36

பேதிக்கு மனமென்னும் பெரும் பகையை
முழுவலியாற் பிளந்து வென்றேன்
வாதித்த துயரெல்லா மாற்றினே
னுபசாந்த வாழ்வு பெற்றேன்
சாதித்த விவேகமே யுனைவணங்கி
னேனென்று சனகர் கோமான்
சேதித்த மனவலைவெல் லாமொழித்துத்
தானேசித் திரம்போ னின்றான். 37

வாளாசித் திரம்போல நெடிதிருந்து
சனகர்பிரான் மாய்த்து நெஞ்சை
மீளாநல் லுபசாந்த நிறைநெஞ்சா
லுலகியல்பை மேவிப் பார்த்தான்

ருளாண்மை யாலியற்றும் பொருளேது
கைக்கொள்ளத் தக்க தேது
கோளான கற்பனையென் சுபாவவறி
வாமெனக்குக் குறிக்குங் காலே. 38

சுத்தமாய்ச் சொரூபமா மென்னுருவ
லால்வேறு தோன்றக் காணேன்
வத்தியான் வாராத பொருணையவேன்
வந்தபொரு ளனைத்துந் தள்ளே
னித்தமாய்த் தன்னிலையி னிற்குமென
தறிவுருவி னிலையா நிற்பே
னுத்தவா றேதுவரு மதுவருக
வென்றழுந்தி யொருமை யானான். 39

வானேகு கதிரிரவி நாளியற்றும்
வாறென்ன வந்து வந்து
தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச்
செய்துமெனச் சனக னெண்ணித்
தீனேய வருகாலஞ் செல்கால
மிமையளவுஞ் சிந்தை செய்யா
னானேறு நிகழ்காலத் தோரிமைப்பி
னகைதலோ டுலாவ லுற்றான். 40

பேசியதன் விசாரத்தாற் சனகர்பிரான்
பெரும்பேறு பெற்ற தல்லாற்
வாசியுள மற்றொன்றால் வந்ததல்ல
வாரீச மலர்க்கண் மாலே

யாசிலதாய்ச் செவ்வியதாய்த் தனதான
விசாரத்தா லடைவ தல்லாற்
றேசிகரில் லாவீனர் செய்தொழிலாற்
பெறலாமோ சிற்சொ ரூபம். 41

புறப்பேறு களைவேண்டி யியற்றுகின்ற
புண்ணியத்தைப் புவியி லுள்ளோர்
சிறப்பான நல்லறிவு மிகவேண்டு
மென்றுமுதற் செய்யிற் பேறு
மிறப்பான வாபத்து விளைநிலமா
யிருந்துதுயர் வேலை யாகிப்
பிறப்பான நச்சுமர வித்தாகும்
பேதைமையைப் பிளக்கல் வேண்டும். 42

இலங்கியசிந் தாமணியா மிதயமெனுஞ்
சரக்கறையி லிருக்கும் போதங்
கலங்கலிலா விவேகியர்க்குக் கருதுபொருள்
கற்பகம்போற் கணத்தி னல்குந்
துலங்குவிசா ரம்படைத்துப் பேதைமைபோய்
நல்லறிவு தோன்றி னோரை
விலங்குகவ சத்தோரை யம்புகள்போற்
காமாதி விகற்பந் தாக்கா. 43

பரமாதித் தனைமறைத்துக் கறுத்தறிவற்
றுக்களித்துப் படர்ந்து மீண்டு
திரமான வகங்கார முகில்விவே
கக்காற்றாற் சிதறிப் போகும்

வரமான பதம்வேண்டிற் றன்மனத்தி
ஞைசைமுதன் மாற்ற வேண்டு
முரமான புவியைமுத லுழுதன்றோ
விளைபயன்க ளுறுகின் றூரே. 44

## தேவபூசை.

தீவினையெல் லாமறுத்து மங்கலமெல்
லாமுதவுந் தேவ பூஜை
யாவதெனக் கேட்டலுமே யருள்செய்வான்
தெய்வந்தான் யாதென் றோதிற்
கேவலமே யரியல்ல வரனல்ல
பூதவுடற் கிடைத்த தல்ல
வோவுமன மன்றடியு முடிவுமிலாச்
செயப்படா வுணர்வே தெய்வம். 45

பாசமின்றி யுள்ளுணர்வைப் பதினெங் கடிகை பூசிக்கி
லிராசசூய விலக்கநிக ரிவ்வா றொருநா ளர்ச்சிக்கி
லாசிலாத பரவெளியி லமர லாகுமிது தானே
யேசில்பரம யோகமிது தானே பரம கிரியையுமே. 46

ஆக பாடல் 354

ஸ்ரீ சங்கராசாரியர் அருளிய

# விவேக சூடாமணி.

எவ்விறை யகனை முன்ன மியாவரும் பூசைசெய்து
தவ்வறத் தங்க ளிட்டந் தரணியிற் றமடைந்தார்
செவ்விய கருணை கூர்ந்த சிவனருள் குமரனை
வவ்விறை யகனையென்று மகத்தினு ளனுசந் திப்பாம். 1

திருசியத் தோற்றந் தன்னைத் திருக்குமாத் திரமேயாகப்
பிரவிலா பித்துநின்னை பிரமமாத் திரமாய்ப் பார்த்திங்
கரியனே வெளியிலுள்ளி லாவது சமாதி பெற்றுக்
கருமபந் தம்வரைக்கும் காலநீ தள்ளு வாயே. 2

பூதகா லத்திறந்த பொருளினைச் சிந்தியாமை
யோதிய வருகாலத்தி லுறுபொரு ளோர்ந்திடாமை
யேதுமே நிகழ்காலத்தி லெய்தினு மதிலுபேட்சை
யீதெலாஞ் சீவன்முத்த னிலக்கண மாகுமைந்தா. 3

சுத்தசத் துவகுணத்தின் சூக்குமத் தெளிவினாலே
நித்தியான் மாநுபூதி நிகழ்ந்திடும் பரமசாந்தி
சித்தியாந் திருப்திமேவுஞ் சேர்ந்திடு மிகக்களிப்பு
நித்தமு மானந்தஞ்செய் நின்மல நிட்டைகூடும். 4

சகலவா சையுமேயற்றுச் சாரமாம் புத்திபெற்றுப்
புகல்கலி தோடமொன்றும் பொருந்திடா முமுட்சுத்தன்னைச்
சகமிதி னீசோதித்து சாற்றுமிப் பொருளையெல்லாம்
மகனேயவ் வதிகாரிக்கே மயலற வுபதேசிப்பாய். 5

சந்தத மான்மநிட்டை சார்ந்ததா லியோகியர்க்குத்
தொந்தமா மனமிறக்குந் துட்டவா தனையடங்கு
மைந்தனே யதனினுலே மயங்கிய வத்தியாசப்
பந்தனை யாவுந்தீர்த்துப் பரமமாம் பதமாய்நிற்பாய். 6

ஆக பாடல்—360.

---

## ஆத்மானு சந்தானக் கிரமம்.

### த ச க ம்.

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை யொளிருந்தேசிலை காலிலை
பூதவிண்ணிலை யிந்தியமிலை புகன்றவைகளின் றிரளிலை
யேதுமேவிப சாரமேவி யிறப்பதாலிச் சுழுத்தியின்
மீதியாயுள பூரணனந்த மேனியான சிவோகமே. 1

சாதியுமிலை யாஸ்ரமமிலை சாதியாஸ்ரம தருமமா
நீதியுமிலை தாரணையிலை நிதித்தியாசன யோகமே
யாதியுமிலை கற்பனையப வாதவாஸ்ரய மாதலாற்
சோதியாய்நிலை நின்றபூரண சுத்தரூப சிவோகமே. 2

தந்தைதாயிலை தேவருமிலை தங்குலோகங் களுமிலை
சந்தவேதங்க ளில்லையாகங்கள் சகலதீர்த்தங் களுமிலை
தொந்தமற்ற சுழுத்தியிற்றொட ராதுநீங்குத லான்மகா
னந்தபூரண சத்யகேவல ஞானநித்த சிவோகமே. 3

பன்னுசாங்கிய சைவமுமிலை பாஞ்சராத்திர முமிலை
யுன்னுசைனமீ மாஞ்சையுமிலை யுலகுண்மற்ற மதமிலை
துன்னுஞானிக ளநுபவப்பிர சித்ததூய சொரூபமாய்ப்
பின்னமேயற நின்றபூரண பிரமமென்ற சிவோகமே. 4

பகருமேலிலை கீழிலைப்பர வுள்ளிலைப்புற முமிலை
யகலமேனடு வில்குறுக்கிலை யாகிழக்கிலை மேற்கிலை
ககனமென்ன நிறைந்தகண்டசிற் ககனகேவல ரூபமாய்ச்
சுககனச்சுக தாதிபேத விகீனசுத்த சிவோ கமே. 5

வெள்ளையுமிலை கருமையுமிலை வேறுபீத சிவப்பிலை
குள்ளமுமிலை நெடியதுமிலை குறைபெருத்தலு மில்லையே
தள்ளியித்தனை ரூபமுந்தவி ராதசோதி சொரூபமா
யுள்ளபூரண ஞானவின்ப வுபாதிகீன சிவோகமே. 6

சாத்திரந்தனைப் போதிப்பானிலை சாத்திரம்படிப் பானிலை
சாத்திரமிலை பாடமுமிலை சாற்றுநீயிலை நானிலை
சாத்தியாதி சகத்திலைச்சல மற்றுமிஞ்சுத லான்மகா
சாத்திரப்பொரு ளானபூரண சாந்தபோத சிவோகமே. 7

சாக்கிரமிலை சொப்பனமிலை சார்சுழுத்தியி லையிதிற்
றுக்குவிசுவனிற் றைசதனிலை தங்குபிராஞ்ஞனு மில்லைமூன்
றுக்கையுமிலை யவையவித்தை விகாரமாதலி ஞலிவை
நீக்கிநின்றிடு துரியபூரண நித்தபோத சிவோகமே. 8

அதிவியாபக மாதலாலழி வற்றதத்துவ மென்ற
தாற், சுதசிதப்பொரு ளானதாற்றனில் வேறொன்
றைத்தொட ராததாற், சததமாயுள சிவமொழிந்திவண்
சகமெனும்பொரு ளேயிலை, யதுவிதென்றுரை செய்வ
தற்கரி தாமகண்ட சிவோகமே. 9

இல்லையேக மெனுஞ்சொலுமிரண் டென்றுசொல்
லுவ தெங்ஙனே, யில்லைகேவல மோடகேவல மில்லை
சூனியா சூனிய, மெல்லையற்ற வகண்டசிற்சுக வேக

97438

பூரண வத்துவாற், றெல்லைவேத முடிப்பொருடனைத்
தோன்றவெப்படி யோதுவாம். 10

ஆக பாடல்-370.

---

## விவேக ஷட்கம்.

அனித்திய பூதத் தேகநா னன்று
விந்தியத் தரங்கநா னன்று
நனித்தவாங் காரப் பிராணவர்க் கங்க
ளன்றுநற் புந்தியு மன்று
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத்
தூரமாஞ் சாட்சிநா னென்றுந்
தனித்துநித் தியமாய்ப் பிரத்தியகான் மாவாந்
தற்பதப் பொருளதாஞ் சிவோகம். 1

உற்பவன் விருத்த னன்றுநா னோர்கா
லத்தினு நசிப்பவ னன்று
அற்பமாந் தேக காரிய மான
வவையெலா மகங்கரத் தல்லாற்
றற்பத வடிவாஞ் சின்மய மான
வெனக்கிலை சகளநிட் களமா
யெப்புறத் தேனு மெல்லையற் றிருக்கு
மின்பசிற் சொரூபமாஞ் சிவோகம். 2

சத்திய ஞான னந்தமாம் பிரமத்
துதித்திடு மாயையிற் சனித்த
மெத்துமிவ் வுலகஞ் சேதனத் திடையே
நசிக்கும தேதென விளம்பிற்

றத்துசொப் பனமுஞ் சுழுத்தியி லசத்தாந்
தன்மைபோற் சத்திலா திருக்குஞ்
சுத்தபூ ரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூபமாஞ் சிவோகம். 3

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற்
பரப்பிர மத்திடை யதனிற்
கழிதரு மஞ்ஞா னத்தினாற் சீவ
னுதித்திடக் கண்டவ னொருவன்
பழுதையென் றதனாற் சர்ப்பமோ கமும்போய்ப்
பழுதையாய்க் கண்டது போல
வழுவிறே சிகனார் சீவனீ யன்றென்
றறைந்திட வாகினேன் சிவோகம். 4

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை
யெவ்வுல கங்களெம் மிடத்திற்
சமித்துவுற் பவமா மாதலான் மாயை
வடிவம தேதெனிற் சாற்ற
வமைத்தகண் ணாடி விம்பமா நிழல்போ
லடங்கியெம் மிடத்தினில் விளங்குந்
தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த
தற்பத விமலமாஞ் சிவோகம். 5

சாக்கிர மதனி லிந்திரி யங்க
டமக்குமேற் சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச்
செய்மனச் சாட்சியாஞ் சிவோகம்

தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ் சிவோகம்
நீக்கமி றுரியா னந்தமாஞ் சர்வ
நிர்மல சாட்சியாஞ் சிவோகம். 6

ஆக பாடல்-376.

---

## வைராக்கிய டிண்டிமம்.

காம:குரோதஸ்ச லோபஸ்ச
தேஹேதிஷ்டந்தி தஸ்கரா:
ஜ்ஞாநரத்நாப ஹாராய
தஸ்மாத்ஜாக்ரத ஜாக்ரத 1

ஜந்மதுக்கம் ஜராதுக்கம்
ஜாயாதுக்கம் புந:புந:
ஸம்ஸார ஸாகரம் துக்கம்
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத 2

மாதா நாஸ்தி பிதாநாஸ்தி
நாஸ்திபந்து ஸஹோதர:
அர்த்தம்நாஸ்தி க்ருஹம்நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத 3

ஆஸாபாபத்ததே லோகே
கர்மணு பஹுசிந்தயா
ஆயுக்ஷீணம் நஜாநாதி
தஸ்மாத்ஜாக்ரத ஜாக்ரத 4

ஆக பாடல்-380.

---

# சொரூபசாரம்.

சிற்சொருபந் தானே செகசொருப மானவெலாந்
தற்சொருப சாரமாய்ச் சாற்றவே—பொற்சொருப
மச்சுரு வாம்போல வதுவதுவாய்த் தோற்றுமொரு
சொச்சொருபந் தானே துணை. 1

சித்தம் பிறந்து செகம்பிறந்து நானெனவோர்
கத்தன் பிறந்தவழி கண்டோமே—சித்த
மடங்காமை யேமாயை யம்மாயை மாய்ப்பார்
திடந்தானே சாயுச் சியம். 2

வெட்டென வும்பேசார் வெகுளார் முகங்கோணு [ளாச்
ரிட்டபதார்த் தம்பெரியோர்க் கேற்றுவைப்பார் — துட்டர்க
சேரா ரியாவர்க்குந் தீங்குரையார் கண்சிவந்து
பாரார் பிறவிதீர்ப் பார். 3

ஞானநூல் கற்றாலு நற்றுறவு பூண்டாலு
மோன சமாதி முயன்றாலுந் —தானாகி
யெல்லாக் கவலையுமற் றின்புற் றிருப்பதுவே
சொல்லாரு முத்திச் சுகம். 4

உன்னுருவாய் நானிருந்த வுண்மைபோ லென்மனமே
யென்னுருவாய் நீவந் திசைந்தாயே—செய்ந்நன்றி
பாராட்டு வாருனைப்போ லுண்டோ பரமபதச்
சீராட்டின் மாறா திரு. 5

எங்கும் பொதுவா யிருக்குமொரு சீவன்முத்தர்
தங்குமிடந் தானே தலவாச—மங்கவர்கள்
பார்வையே தீர்த்தமவர் பாதார விந்தமலர்ச்
சேவையே சாயுச் சியம். 6

நனவிற் றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போங்
கனவின் மனக்கூத்துங் காண்போ—நினைவிற்
சுழுத்தியிலே யில்லாத சூனியக்கூத் தாடி
விழுப்பொருளாய் நாமிருப் போமே. 7

என்னைநான் கண்டபடி யிப்புவியி லெல்லோருந்
தன்னையே காணத் தகுங்காணுஞ்— சொன்னே
ளெளிநாட்ட மோடுமன முண்ணாட்டம் பெற்று
வெளிநாட்ட மாகா விடின். 8

ஐங்கணையும் பூவா மறுகா லளிநாணு
மென்கரும்பாம் வில்லனங்கன் வீரனும்—வன்காத
லேற்றுவனு மெல்லாம்பொய் யிப்படியே பாழுலகத்
தோற்றமெலா மெய்தானு சொல். 9

மெத்தென்ற சொல்லும் விருப்பமற்ற நோக்குமெலாஞ்
சத்தென்றி நெஞ்சுந் தளர்நடையுஞ்— சித்தத்
தடங்கா மகிழ்வு மனவரதம் பெற்ற
திடந்தானே ஞானி செயல். 10

பருவசா ரத்தாற் பலிக்குமறு பூதிச்
சொருபசா ரத்தின் சுவையை—யிருசெவியா
லுண்டிருக்க வல்லா ருலகமெலாந் தாமாகக்
கண்டிருக்க வல்லார்கள் காண். 11

ஆக பாடல்-391.

தத்துவராய சுவாமிகள் அருளிய

# பாடு துறை

## ஆத்மானுபவத்தின் அருமை யுரைத்தல்.

நான்மறை யோதிப் பொரு ளுரைத்து
நாடறி யக்கல்வி சாற்றி னாலுந்
தானது வாகை யரிது காணுஞ்
சலிப்பற நிற்கை யரிது காணும். 1

இணங்காமை யெல்லா மறத் துறந்தே
யிருட்டற வேதாந்த மோதி னாலும்
பிணங்கா திருக்கை யரிது காணும்
பேரின்ப மாகை யரிது காணும். 2

எல்லையி லாகம மேற வோதி
யேதுக்க ளெல்லா மியம்பி னாலு
மல்ல லறுக்கை யரிது காணு
மறிவா யிருக்கை யரிது காணும். 3

பற்றற விட்டுத் தலைப றித்துப்
பாணியைப் பண்ணிப் பயின்றக் காலு
முற்றநிலை நிற்கை யரிது காணு
முடியநிலை நிற்கை யரிது காணும். 4

ஆறு சமயப் பொருளுங் கற்றே
யங்குள்ள தர்க்கங்கள் சாற்றி னாலும்
ஆறி யிருக்கை யரிது காணு
மதுவிது வாகை யரிது காணும். 5

வேறு பிறிதிலா மெய்ம்மை தன்னை
வித்தார மாக விளம்பி னாலும்
ஆறி யிருக்கை யரிது காணு
மவிரோத மாகை யரிது காணும். 6

தேறி யுகல மனைத்தி னையுஞ்
சிற்பர மாகநாஞ் செப்பி னாலும்
ஆறி யிருக்கை யரிது காணு
மவிரோத மாகை யரிது காணும். 7

## குரு தரிசனம் விரும்பல் - பல்லி.

அருவுருவ லானுருவ மாகிவரு மாகி
லாதிமறை தேடரிய வண்ணல்வரு மாகிற்
சொருபனெனை யுடையநல தோழன்வரு மாகிற்
றுளக்கமற நல்லதிசை சொல்லுசிறு பல்லி. 8

ஓடுமன நம்மினுட னுறவுசெயு மாகி
னுள்ளநிலை மெள்ளவுணர் வாகிவரு மாகி
னாடுமிட மெங்குமறி வாகிவிடு மாகி
னல்லகுர னல்லதிசை சொல்லுசிறு பல்லி. 9

செப்பமுடி யாதபொருள் செப்பவரு மாகிற்
சிலுப்பற விழுத்தவல தீரன்வரு மாகி
லிப்பவ மறுத்தகழ லிங்ஙன்வரு மாகி
லின்னமொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. 10

ஆறவடி வைக்கவல வாதிவரு மாகி
லருஞ்சிவமெ னக்கெளிய வையன்வரு மாகில்
வேறுமொழி யாவிரகன் வீதிவரு மாகின்
மீளவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. 11

இரவுபக லொழியவரு மிரவிவரு மாகி
லின்பவடி வானசிவ மிங்ஙன்வரு மாகில்
விரவியெனை யாளவல வீரன்வரு மாகின்
மீளவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. 12

என்னுளமிர் தூறிநிறை யின்பம்வரு மாகி
லென்றுமொழி யாதபர மேசன்வரு மாகின்
மன்னுமுணர் வாகியம ணாளன்வரு மாகில்
வாழவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. 13

உம்பர்கட மக்கரிய வும்பன்வரு மாகி
லுரையுணர்வி றந்தவுணர் வுருவன்வரு மாகி
லெம்பர மறத்திகழு மின்பம்வரு மாகி
லின்னமொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. 14

வேறு

போகாத மாயையைப் போக்கிட லாவதும்
புண்ணியம் பாவம் புறத்திட லாவதும்
ஆகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. 15

என்னிலே யாவையுங் கண்டிட லாவதும்
யாவையு ளென்னையுங் கண்டிட லாவதும்
அன்னியங் கண்டிலோ மென்றிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. 16

மோகாதி யெல்லா முறித்திட லாவது
மற்றுமுற் கன்மங்க ளற்றிட லாவதும்
ஆகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. 17

இந்தப் பிறப்பினின் றேறிட லாவது
மேகாந்த மாகி யிருந்திட லாவதும்
அந்தக் கரண மறுத்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. 18

ஆக பாடல்-409.

---

## ஸ்ரீ குமாரதேவர் அருளிய
## அத்துவிதவுண்மை.

மேலாஞ் சதுட்ட சாதனங்கண் மேவிநிறைந்த பேர்க்கு ரைக்கின், மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மவையில் லாதவர்க்கு, மேலாம் பரமன் மான் மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது, மேலாஞ் சாத னங்கள்வர மேவ வேண்டுஞ் சாது சங்கம். 1

மரத்தை நோக்கின் மதகரியு மறைந்து விளங்கு மதைநோக்கின், மரத்தை மறைத்துத் தான்விளங்கும் வாறு போலச் சகமுழுதும், பரத்தை நோக்கி னதின் மறைந்து பரமாய் விளங்குஞ் சகநோக்கில், பரத்தை மறைத்துத் தான்விளங்கும் பரமே யனைத்து மாதலினல். 2

நாம ரூபந் தனைநோக்கி நாடன் மனமும் புறமுக மும், நாம ரூபந் தனைநீக்கி நாடல் அறிவு முண்முக மும், நாம ரூபத் தெவ்வளவு நாட்டஞ் சொரூபந் தோன்ருது, நாம ரூப நாட்டம்விடி னமது சொரூபந் தோன்றியிடும். 3

விருத்தி யொன்று மில்லாமல் விளங்கு நிலையே நாமதனில், விருத்தி தோன்றின் முன்பினின்றி விளங் குஞ் செகசீ வபரங்கள், விருத்தி நீங்கின் முப்பொரு ளும் விளங்கி டாமற் றதனாலே, விருத்தி தானே பந்த மதாம் விருத்தி யொழிவே வீடாகும். 4

வேறு

தானாய்ப்பார்த் திடுமிடத்திற் சகலமுந்தா னாய்த்தோன்றுந்
தானாய்ப்பா ராவிடத்திற் சகலமும்வே றாய்த்தோன்றும். 5

தன்னினைவி னாலே சகமாய் விரிந்ததெனத்
தன்னினைவை நீங்கித் தானா யிருந்தனமே. 6

உண்டா யொடுங்குவது முண்டான தன்னிடத்தே
யுண்டாகு மென்றே யொடுங்கி யிருந்தனமே. 7

படித்தறிந்த போதே பலகலையா கமங்களெலா
மெடுத்தெறிந்து விட்டே னெனைவிடவே றிலையென்றே. 8

ஆக பாடல்-417.

---

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர் அருளிய
அத்துவிதரசமஞ்சரி.

வானிறம்போற் றிகழத்தி யாசபே
தத்தினன் மறைபட் டாலு
ஞானகன மானபொருள் கண்டவொரு
தற்சுவையை நணிநீங் காதா
லூனமுறு பற்பலச ராசரவி
சித்திரத்தோ டொன்றி னாலுந்
தானமரும் படவியல்பைச் சித்திரவத்
திரமென்றுந் தணந்தி டாதே. 1

தன்னியல்பிற் றற்சுவையாய்ச் சச்சிதா
னந்தமதாய்த் தயங்கு மென்பாற்
றுன்னியமா மோகத்தா லுண்டெனச்சொற்
றிடுமிந்தத் தொன்மை ஞால
மன்னியவோ ரிடத்திலுங்கா ணப்படா
தருவுருவே வடிவ மாகு
மன்னியவிண் ஞேயமே போலுமென
வையமற மதித்து மியாமே. 2

ஞாலமதி லுறுவிபவ நனிபரம
வற்புதமாய் நண்ணு மேனுஞ்
சாலவத னதுவாய்மை தனையறிந்த
மாதீரன் றனைம யக்கா
கோலமட வரல்வேடங் குரம்பையின்மே
லலங்கரித்துக் கொள்ளா நின்றோன்
கேலவினத் தாற்றனைத்தேர் விடலையையா
யினுமயக்கக் கிட்டா னீடே. 3

பிரமவனு பூதிதரு மொருசுவையா
னிறைவுபெறு பெரியோர் தம்பாற்
கருமவறு பந்தத்தால் வருவிதிக
ளெல்லாமுங் கழன்று போமே
வரமருள்சித் தர்கடெரிவித் திடுமிரசா
யனமருந்தி மகிழ்வார்ந் தோர்பாற்
றாமுறுபா கத்தால்வந் துறுமருந்தின்
விதிகளெலாந் தங்குங் கொல்லோ. 4

## ஆத்மவித்யாவிலாசம்.

எவ்வுருவ மதுதனையும் பார்த்திலனாய்
வார்த்தையொன்று மியம்பா னாகிச்
செவ்வியநல் வசனமதைச் சிறிதேனும்
சிரவணமே செய்யா னாகி
யொவ்விலவின் பூமியினி னிட்டையினை
யெப்பொழுது முற்றா னாகித்
தெவ்விலவில் வருந்தவனென் மாயோகி
காட்டமெனச் செறிகின் றானே. 5

சென்றவெவை தனையுமொரு சிறிதேனு
நினையானாய்ச் செறிப வாகி
நன்றுவரு பவையினையுஞ் சிறிதுமுளத்
தெண்ணானாய் நயன நோக்க
நின்றவிவை யெவைதனையு நோக்கலொடு
நினைத்தலின்றி நிமல னாகி
வென்றசமத் தார்த்தசம ரசனான
வோரொருவன் விளங்கு வானே. 6

ஆகபாடல்—423.

---

## நிஷ்டானுபூதி.

ஆதனத் திருந்தே சாதனை செயும்போ
தலைதரு மனமடங் காமற்
போதுமே யெனினுங் கேவல மயக்கம்
புரியுமே யெனினுமங் கெழுந்து

நீதியி னையி ரடியுலா வந்தே
நிலவுமா தனத்தினிற் பொருந்தி
யோதுசா தனையி லுறுதியோ டிருப்ப
தியோகியர்க் கியல்பதா மன்றே. 1

ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா
லடங்கிடாப் பொறிபுல னடங்கும்
ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா
லடங்கிடு மனேவிட யங்கள்
ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா
லறிவறி யாமைகளொழியும்
ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா
லகண்டவீ டடைவது நிசமே. 2

ஆக பாடல்—425.

---

## தாயுமானசுவாமிகள்.

அங்கிங் கெனுதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக் கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்

றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய் குவாம். 1

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத பெரிய மோனம், வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப மயமாய் ஞானக், குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத் தறவிழுங்கிக் கொண்டப் பாலுந், தெரி வரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப் பொருளினை யாஞ் சிந்தை செய்வாம். 2

எந்நாளு முடலிலே யுயிரா முனைப்போ லிருக்க விலை யோமனதெனு, மியானுமென் னட்பாம் பிரா ணனு மெமைச்சடம தென்றுனைச் சித்தென்றுமே, யந் நாளி லெவனோ பிரித்தா னதைக்கேட்ட வன்றுமுத லின்றுவரையு, மநியாய மாயெமை யடக்கிக் குறுக் கே யடர்ந்தரசு பண்ணியெங்கண், முன்னாக நீயென்ன கோட்டைகொண் டாயென்று மூடமன மிகவுமேச, மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன் முறை மையோ பதினுயிரஞ், சொன்னாலு நின்னரு ளிரங்க விலை யேயினிச் சுகம்வருவ தெப்படிசொலாய், சுத்த நிர்க் குணமான பரதெய்வ மேபராஞ் சோதியே சுக வாரியே. 3

புத்தமிர்த போகமுங் கற்பகந னீழலிற் பொலிவுற விருக்குமியல்பும், பொன்னுலகி லயிரா வதத் தேறு வரிசையும் பூமண்ட லாதிக்கமு, மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ மாலுமொரு சுட்டுமறவே. வைக்கின்ற வைப்பாளன் மௌனதேசிகனென்ன வந்தநின் னருள்வாழிகாண், சுத்தபரிபூரண வகண்டமே யேகமே சுருதிமுடி வானபொருளே, சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள் சுரந்துபொழி கருணைமுகிலே, சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே தேடரிய சத்தாகியென், சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோமயானந்தமே. 4

வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா வெடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞானமாகும்
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள்சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்கநான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்கமுறலாம்

ஏதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினினு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே. 5

துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேனருட்
டோயநீ பாய்ச்சல் செய்து
நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப் பட்டியு
நமனை தீப்பூடு மனுகாமன் முன்னின்று
நாடுசிவ போக மான
பேற்றைப் பகுத்தருளி யெனையாள் வல்லையோ
பெரியவகி லாண்ட கோடி
பெற்றநா யகிபெரிய கயிலைமா நகர்மருவு
பெரிநா யகி யம்மையே. 6

நினைவொன்று நினையாம னிற்கினக மென்பார்
நிற்குமிட மேயருளா நிட்டையரு ளொட்டுந்
தனையென்று மறந்திருப்ப வருள்வடிவா னதுமேற்
றட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமே யதுவாம்
பினையொன்று மிலையந்த வின்பமெனு நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்மற் றுந்தான்
மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த
வாதனையா மாசையொழி மன்றொருசொற் கொண்டே. 7

வேதாவை யிவ்வணம் விதித்ததே தென்னினுன்
        வினைப்பகுதி யென்பனந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
        விளைந்ததான் மனதைநாடில்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
        போதமு நிஞல்விளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று
        போக்குவர வறநிகழ்த்தும்
ஆதார வாதேய முழுதுநீ யாதலா
        லகிலமீ தென்னை யாட்டி
ஆடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ
        யருளுநீ மௌனஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
        தமருநீ யாவுநீகாண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
        சச்சிதா னந்தசிவமே. 8

நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்ட மின்றிக், கிடக்கினுஞ் செவ்வி திருக்கினு நல்லருட் கேள்வியிலே, தொடக்குமென் னெஞ்ச மனமற்ற பூரணத் தொட்டிக்குளே, முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே. 9

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல் லாம், அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின் றியே, பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால், வெம்மாயக் காட்டி லலைந்தேனந் தோவென் விதிவசமே. 10

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம். 11

# சிவஞானவள்ளலார்.

கல்லா லமர்ந்தாரைக் கண்மூன் றுடையாரைச்
சொல்லாமற் சொல்லவந்த தூயாரைப்--பல்காலுஞ்
சிந்தி சிவோகஞ் சிவோகஞ் சிவோகமென
வந்தி பிறப்பறு மாறு. 1

நிராமயமாய் நிட்களமாய் நித்தியமாய் நின்மலமாய்ப்
புராதனமா யசஞ்சலமாய்ப் பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய்ச் சாக்கியாய்ச் சத்தியமாய்ச் சித்துருவாய்ப்
பராபரமாய் வெறுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம். 2

அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றி
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க் களிப்பன்கண்கட்
கிருளினை யொளியாலோட்டு மிரவியைப் போலவீசன். 3

சத்திதா னதமாதி தானகுஞ் சிவமுமந்தச்
சத்திதா னதியாகுந் தரும்வடி வானவெல்லாஞ்
சத்தியுஞ் சிவமுமாகுஞ் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன்வேண்டிற்றெல்லாமாஞ் சத்திதானே. 4

என்று மிருந்த படியிருக்கு மியல்பே யென்னு மொருவதே, மொன்றே யொழிய விரண்டாம்வத் தில்லை யென்னு மொருவேதம், வென்றிப் பரமு நீ யும்வே றில்லை யென்னு மொருவேதந், துன்று மது வே நீயானு யென்றே சொல்லு மொருவேதம். 5

ஓமாதி வாக்கிய மொன்றைப் பிடித்தவ ருத்தமர்கள்
சாமாறு மந்நிலை நிற்பவர் சத்தியர் சற்குருவா
லாமா றறிந்தவ ரந்தண ரியோகிக ளஞ்சடக்கிக்
காமாதி குற்றங் களைந்தவர் காண்கச்சி யேகம்பனே. 6

காமமா திகளை நீத்துக் கரணவா தனைக டந்து, நாமது
வெனுஞ்சம் பந்த ஞானமே ஞான மாகி, ஓமொழிப்
பொருளைத் தேறியுணர்வுண ராமை போக்கி, யாமைபோ
லைந்த டக்கி நிற்பதே யமல யோகம். 7

ஆகையாற் கருத்தடங்கி யசைவற வியோகமாகு
நாகமார் முழைஞ்சுபூங்கா நதிபாழுங் கோயிலாதி
யோகதா னங்கள்புக்கி யுயர்சிவோ கம்பாவித்துத்
தேகமா திகளுனல்ல வென்றுசித் திரம்போனிற்பாய். 8

சாந்தமு நோன்புந் தவமு மடக்கமுந் தண்ணளியும்
வாய்ந்த குருசொலும் வாக்கியங் கேட்டு மனமவன்பால்
காந்தமு மூசியுங் கண்ணுங் கதிருங் கலப்பதுபோ
லேய்ந்தது வேமுத்தி யென்று னெழிற்கச்சி யேகம்பனே. 9

பாலையுந் தேனையும் வேம்பாக்கு மானந்தப் பாதையிலே
சால நடத்தியென் மும்மத வாய்தற் றடையகற்றி
நாலு மறைசொலு நாதாந்த முத்தியை நண்ணுவித்தா
னேலக் குழலிக் கினியபி ரான்கச்சி யேகம்பனே. 10

மெய்யைப் பொய்யென்றான் வெளியைநல்ல வீடென்றான்
சைவத் துறைகாழி சம்பந்தன்—ஐயமற
நின்போதம் போமிடத்தே நீயே சிவமென்று
னென்போதத் துள்ளே யிருந்து. 11

ஆலயமே காய மறிவே சிவலிங்க
மாலயனுங் காணாத வள்ளலுக்குச்—சீலமுறு
மன்பே யபிடேக மன்பேநல் லர்ச்சனையு
மன்பேநை வேத்தியமு மாம். 12

காயந் துவளாமற் கரண மசையாமல்
வாயும் பதையாமன் மாற்றியே—நேயத்
தறிவா நந்தத்தி லரைக்கணநின் றாலும்
பிறவார் சிவனாணை பின். 13

ஆக்கறக்கு மந்நேர மம்புவிழு மந்நேர
நோக்கிமைக்கு மந்நேர நுண்ணறிவா—னீக்கமற
நானென்னும் போத நழுவிச் சிவமானார்க்
கீனப்பிறப் புண்டோ வினி. 14

அறியா தனவெல்லா மாங்காங் கறியப்
பிறியா தனவெல்லாம் பேசி—நெறியாரும்
பக்குவத்தின் மெய்ஞ்ஞானப் பாலருத்து விக்குமொரு
சற்குருவைப் போலுமுண்டோ தாய். 15

உள்ளமெனு மானந்த வோங்கன் மிசையேறி
வெள்ளவெளிக் குள்ளே விளையாடும்—பிள்ளை
யுலகமெனுஞ் சேரிக் கொருகாலும் வாரா
கலகம் விளையுமெனக் கண்டு. 16

ஒருகோடி சூரியர்க ளொக்கவுதித் தாலும்
குருடர்க் கிருளகலாக் கொட்போல்—மருமலா
வாசா னுரைத்தாலு மஞ்ஞானச் சித்தர்க்குப்
பாசாதி நீங்காது பார். 17

சத்தம் பிறந்திடத்தே சகலகலை யும்பிறக்கு
மத்தனுரைத்த தறியாயோ—வன்றுரைத்த
சத்தமே சத்தமாஞ் சஞ்சலமொன் றில்லாத
சித்தமே சுத்த சிவம். 18

இந்திரியக் கள்வ ரிருட்காலம் பேருறக்கம்
வந்திடுமோ வென்று வழிபார்ப்பர்—முந்தி
யமையாம ஞுரு மகல்ஞானக் கண்ணி
லிமையாம னோக்கி யிரு. 19

## கண்ணுடைய வள்ளலார்.

நீர்க்குப் பதமு நெருப்புச் சுடுந்தொழிலும்
காற்றைச் சலிக்கவுமார் கற்பித்தார்—ஆர்க்குமிது
போகா மனுதி புதைக்குநிழல் போலாநீ
யாகாயம் போற்பா ரறும். 20

என்னுணை என்னுணை என்னுணை யேகமிரண்
டென்னுமற் சும்மா விருவென்று—சொன்னுன்
திருஞான சம்பந்தன் சீர்காழி நாடன்
அருளாளன் ஞானவினோ தன். 21

ஆக பாடல்—455.

## ஔவையார்.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. 1

## திருப்போரூர் சந்நிதிமுறை.

அலையி லாத சாகரம்போ லனிலஞ் சேரா விளக்கதுபோல், அருங்க விரும்பொன் சமமாகி யான தராசினுனியதுபோல், நிலையொன் றியநற் சமாதியுற்று நின்ருட் கமலத் தெழும்பிரச, நிறைவா ரிதியிற் புகுந்ததனி னேசித் தடியே னிருப்பேனே, விலையின் மகுடத் திருமுடியாய் மிளிர்குண் டலங்கள் செறிகாதா, வியன்கே யூரத் திருத்தோளா விஞ்சுஞ் சதங்கை சூழ்தாளா, புலையுங் கொலையுங் களவுமிலாப் புனிதத் தவத்தோர் தொழுதேத்தும், புராரி குமரா வுமைசிறுவா போரூர் முருகப் பெருமானே. 2

## குகைநமசிவாயர்.

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நன்னூ லறிந்தாலு—மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெலாம் வீணிலே கற்று. 3

## குருநமசிவாயர்.

சற்குருவைப் போற்ருமற் சற்குருவைச் சாற்ருமற்
சற்குருவைச் சந்ததமுஞ் சாராமற்—சற்குருவை
நின்ரு தரியாம னீள்பிறவி நீங்கிடுமோ
மன்ரு சிதம்பர தேவா. 4

## சிவபோகசாரம்.

எத்தனைதான் கற்ருலு மெத்தனைதான் கேட்டாலு
மெத்தனைசா தித்தாலு மின்புருர்— சித்தமே
மெய்யாகத் தோன்றி யிடுமுலக வாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்ருத போது. 5

### ஞானசுகாதீத வெண்பா.

நூறுகோடி நாளிருந்து நூல்கள்பல கற்றாலு
மாறுகோடி சித்தி யடைந்தாலும்—பேறில்லை
நித்தன் மலரடிக்கே நீக்கமற வேநின்று
அத்துவிதங் காணா தவர். 6

### பிரத்தியட்சானுபூதி விளக்கம்.

உள்ளும் புறம்பு மொழியா வெளியன்றி யொன்று மிலை, உள்ளும் புறம்பெனச் சொல்லாத தெப்பொரு ளொன்றுமிலை, உள்ளும் புறம்பெனச் சொல்லல் வெளி பற்றி யோர்ந்திலமோ, உள்ளும் புறம்பும் வெளிநாட்டங் கொண்டுய்ம்மி னுத்தமரே. 7

எதுவுந் தனதுரு வன்றென நிற்பது மிவ்வறிவே, எதுவுந் தனதுரு வாகியு நிற்பது மிவ்வறிவே, எதிலுங் கலந்துங் கலவாது நிற்பது மிவ்வறிவே, எதுவென்று சொல்லப் படுவது மென்பது மிவ்வறிவே. 8

கல்வியுஞ் செல்வமுங் கர்வத் தழுத்திடக் காரண மாம், கல்வியுஞ் செல்வமும் நன்கே புரிதற்குக் காரண மாம், கல்வியுஞ் செல்வமுந் தன்னைத் தெளிதற்குக் காரணமாம், கல்வியுஞ் செல்வமு மென்செயு நஞ்செயல் காரணமே. 9

### இராமலிங்க சுவாமிகள் அருட்பா.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே. 10

ஆயாக் கொடியேனுக் கன்புடையாய் நீயேயிங்
கீயாக் குறையே யிலைகண்டாய்—மாயார்க்கும்
மிள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்ப மொன்றுசெய்து
கொள்ளாக் குறையே குறை. 11

ஆக மொத்தப்பாடல் 466.

---

## ப்ரஹ்ம நாமாவலீ

ஸகிர்ச்சிரவண மாத்ரேண ப்ரஹ்மக்ஞாநம் யதோபவேத் |
ப்ரஹ்மக்ஞாநா வலீமாலா ஸர்வேஷாம் மோக்ஷசித்தயே ||
அஸங்கோஹ மஸங்கோஹம் அஸங்கோஹம் புந:புந: |
ஸச்சிதாநந்த ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 2
நித்யசுத்த விமுக்தோஹம் நிராகாரோஹ மவ்யய: |
பூமாநந்த ஸ்வரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 3
நித்யோஹம் நிரவத்யோஹம் நிராகாரோஹ மச்யுத: |
பரமாநந்த ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 4
சுத்தசைதந்ய ரூபோஹ மாத்மாராமோஹமேவச |
அகண்டாநந்த ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 5
ப்ரத்யக்சைதந்ய ரூபோஹம் சாந்தோஹம் ப்ரகிருதே:பர: |
சாஸ்வதாநந்த ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 6
தத்வாதீத: பராத்மாஹம் மத்யாதீத: பர: சிவ: |
மாயாதீத: பரம்ஜ்யோதி ரஹமேவாஹ மவ்யய: || 7
நாமரூபவ்ய தீதோஹம் சிதாகா ரோஹ மச்யுத: |
ஸுகரூபஸ்வ ரூபோஹம் அஹமேவாஹ மவ்யய: || 8
மாயாதத் கார்யதேஹாதி மமநாஸ்த்யேவ ஸர்வதா |
ஸ்வப்ரகாசைக ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 9
குணத்ரயவ் யதீதோஹம் ப்ரஹ்மாதீநாம் ஸாக்ஷ்யஹம் |
அநந்தாநந்த ரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 10

அந்தர்யாமி ஸ்வரூபோஹம் கூடஸ்த: ஸர்வகோஸ்மியஹம் |
பரமாத்ம ஸ்வரூபோஹ மஹமேவாஹ மவ்யய:|| [தந:

நிஷ்களோஹம் நிஷ்க்ரியோஹம் ஸர்வாத்மாத்ய: ஸநாதந: |
அபரோக்ஷ ஸ்வரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 12

த்வந்த்வாதி ஸாக்ஷிரூபோஹம் அசலோஹம் ஸநாதந: |
ஸர்வஸாக்ஷி ஸ்வரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 13

ப்ரக்ஞாந கநஏவாஹம் விக்ஞாந கநஏவச |
அகர்த்தாஹ மபோக்தாஹ மஹமேவாஹ மவ்யய: || 14

நிராதார ஸ்வரூபோஹம் ஸர்வாதா ரோஹமேவச |
ஆப்தகாம ஸ்வரூபோஹ மஹமேவாஹ மவ்யய: || 15

தாபத்ரய விநிர்முக்தோ தேஹத்ரய விலக்ஷண: |
அவஸ்தாத்ரய ஸாக்ஷ்யஸ்மி சாஹமேவாஹ மவ்யய:|| 16

த்ருக்த்ருஸ்யௌ த்வௌ பதார்த்தௌ ஸ்த: பரஸ்பர விலக்ஷணௌ |
த்ருக்ப்ரஹ்ம த்ருஸ்யம்மாயேதி ஸர்வவேதாந்த டிண்டிம: || 17

அஹம்ஸாக்ஷீ தியோவித்யாத் விவிச்யைவம் புந:புந: |
ஸஏவமுக்த: ஸோவித்வா நிதிவேதாந்த டிண்டிம: || 18

கடகுட்யதி கம்ஸர்வம் ம்ருத்திகா மாத்ரமேவச |
தத்வத்ப்ரஹ்ம ஜகத்ஸர்வ மிதிவேதாந்த டிண்டிம:|| 19

ப்ரஹ்மஸத்யம் ஜகந்மித்யா ஜீவோப்ரஹ்மைவ நாபர: |
அநேநவேத்யம் ஸச்சாஸ்த்ர மிதிவேதாந்த டிண்டிம:|| 20

அந்தர்ஜ்யோதிர் பஹிர்ஜ்யோதி:
ப்ரத்யக்ஜ்யோதி: பராத்பர: |
ஜ்யோதிர்ஜ்யோதி: ஸ்வயம்ஜ்யோதி:
ஆத்மஜ்யோதி: சிவோஸ்ம்யஹம். ||

# அக்ஷரமாலிகா ஸ்தோத்திரம்.

ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப ஸதாசிவ
ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப சிவாஹர ஸாம்ப

1 அத்புத விக்ரஹ வமரா தீஸ்வர
அகணித குணகண அம்ருத சிவாஹர ஸாம்ப

2 ஆநந் தாம்ருத ஆஸ்ரித ரக்ஷக
ஆத்மா நந்த மஹேச சிவாஹர ஸாம்ப

3 இந்து கலாதர இந்த்ரா திப்ரிய
ஸுந்தர ரூப ஸுரேச சிவாஹர ஸாம்ப

4 ஈச ஸுரேச மஹேச ஜநப்ரிய
கேசவ ஸேவித கீர்த்தி சிவாஹர ஸாம்ப

5 உரகா திப்ரிய பூஷண சங்கர
நரக விநாச நடேச சிவாஹர ஸாம்ப

6 ஊர்ஜித தாநவ நாச பராத்பர
ஆர்ஜித பாப விநாச சிவாஹர ஸாம்ப

7 ருக்வே தஸ்ருதி மௌலி விபூஷண
அர்க்கசந் த்ராக்நி த்ரிநேத்ர சிவாஹர ஸாம்ப

8 ரூப நாமாதி ப்ரபஞ்ச விலக்ஷண
தாப நிவாரண தத்வ சிவாஹர ஸாம்ப

9 லிங்க ஸ்வரூப ஸர்வேச புதப்ரிய
மங்கள மூர்த்தி மஹேச சிவாஹர ஸாம்ப

10 வேதா தீஸ்வர ரூப ப்ரியசிவ
வேதாந் தப்ரிய வேத்ய சிவாஹர ஸாம்ப

11 ஏகாநேகா ஸர்வேச ஜன ப்ரிய
போகா திப்ரிய பூர்ண சிவாஹர ஸாம்ப

12 ஐஸ்வர் யார்ச்சித சிந்மய சித்கந
ஸச்சிதா நந்த மஹேஸ சிவாஹர ஸாம்ப

13 ஓங்கா ராதிப வுரக விபூஷண
ஹ்ரீங்கா ரப்ரிய யீஸ சிவாஹர ஸாம்ப

14 ஔரஸ லாளித அந்தக நாஸந
கௌரீ ஸஹித கிரீஸ சிவாஹர ஸாம்ப

15 அம்பர வாஸ சிதம்பர நாயக
தும்புரு நாரத ஸேவ்ய சிவாஹர ஸாம்ப

16 ஆஹா ரப்ரிய அஷ்ட திகீஸ்வர
யோகி ஹ்ருத்பிரிய வாஸ சிவாஹர ஸாம்ப

வாழ்க சங்கரன் மலரடி யென்றுமே
வாழ்க நங்குரு வழிவழி யடியவர்
வாழ்க விந்நூல் வையத்து ளோங்கியே
வாழ்க வோதுவார் வான்பத மெய்தியே.

# ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய சுவாமிகளின் ஸ்தோத்திரம்.

பவசங் கரதே சிகமே சரணம்
பவசங் கரதே சிகமே சரணம்
பவசங் கரதே சிகமே சரணம்
பவசங் கரதே சிகமே சரணம்

1 விதிதா கிலஶாஸ்த் ரஸுதா ஜலதே
மஹிதோ பநிஷத் கதிதார்த் தநிதே
ஹிருதயே கலயே விமலம் சரணம்.— பவசங்.

2 கருணா வருணா லயபா லயமாம்
பவஸா கரது:க்க விதூந ஹிருதம்
ரசிதா கிலதர் சநதத் வவிதம். — பவசங்.

3 பவதா ஜநதா ஸுஹிதா பவிதா
நிஜபோ தவிசா ரணசா ருமதே
கலயேஶ் வரஜீ வவிவே கவிதம். — பவசங்.

4 பவயே வபவா நிதிமே நிதராம்
ஸமஜா யதசே தஸிகௌ துகதா
மமவா ரயமோ ஹமஹா ஜலதிம். — பவசங்.

5 ஸுகிருதே அதிகிருதே பஹுதா பவதோ
பவிதா பததர் சநலா லஸதா
அதிதீ நமிமம் பரிபா லயமாம். — பவசங்.

6 ஜகதீ மவிதும் கலிதா கிருதயோ
விசரந் திமஹா மஹஸச் சலத:
அஹிமாம் ஸுரிவாத் ரவிபா ஸிகுரோ.—பவசங்.

7 குருபுங் கவபுங் கவகே தநதே
ஸமதா மயதாம் நஹிகோ பிஸூதீ:
சரணு கதவத் ஸலதத் வநிதே. — பவசங்.

8 விதிதா நமயா விஶதை ககலா
நசகிஞ் சநகாஞ் சநமஸ் திகுரோ
திருதமே வவிதேஹி கிருபாம் ஸஹஜாம். — பவசங்.

---

சுருதிஸ்மிருதி புராணும் ஆலயம் கருணுலயம்
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம் 1

சங்கரம் சங்கரா சார்யம் கேசவம் பாத ராயணம்
ஸூத்ரபாஷ்ய கிருதௌவந்தே பகவந்தௌ புந:புந: 2

நமஸ்தே நாதபகவந் சிவாய குருரூபிணே
வித்யாவதார ஸம்ஸித்யை ஸ்வீகிருதா நேகவிக்ரஹ 3

அநாயாஸேந மரணம் விநா தைந்யேந ஜீவநம்
தேஹிமே கிருபையா சம்போ த்வயிபக்திம் அசஞ்சலாம் 4

## அர்ச்சனை நாமங்கள்.

### ஸ்ரீ விநாயகர் சோடச நாமங்கள்.

ஓம் ஸுமுகாய நம:
,, ஏகதந்தாய நம:
,, கபிலாய நம:
,, கஜகர்ணிகாய நம:
,, லம்போதராய நம: 5
,, விகடாய நம:
,, விக்நராஜாய நம:
,, கணுதிபதயே நம:
ஓம் தூமகேதவே நம:
,, கணுத்யக்ஷாய நம: 10
,, பாலசந்த்ராய நம:
,, கஜாநநாய நம:
,, வக்ரதுண்டாய நம:
,, ஸூர்ப்பகர்ணுய நம:
,, ஹேரம்பாய நம:
,, ஸ்கந்தபூர்வஜாய நம: 16

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

## ஸ்ரீ விநாயகர் அஷ்டோத்ர ஸத நாமங்கள்

ஓம் விநாயகாய நம:
,, விக்ந ராஜாய நம:
,, கௌரீபுத்ராய நம:
,, கணேஸ்வராய நம:
,, ஸ்கந்தாக்ரஜாய நம: 5
,, அவ்யயாய நம:
,, பூதாய நம:
,, தக்ஷாய நம:
,, அத்யக்ஷாய நம:
,, த்விஜப்ரியாய நம: 10
,, அக்நிகர்வபிதே நம:
,, இந்த்ரஸ்ரீப்ரதாய நம:
,, வாணீபலப்ரதாய நம:
,, ஸர்வஸித்திப்ரதாய நம:
,, ஸர்வதநயாய நம: 15
,, ஸர்வப்ரியாய நம:
,, ஸர்வாத்மகாய நம:
,, ஸ்ருஷ்டிகர்த்ரே நம:
,, தேவாய நம:
,, அநேகார்ச்சிதாய நம: 20
,, சிவாய நம:
,, ஸுத்தாய நம:
,, புத்திப்ரதாய நம:
,, சாந்தாய நம:
,, ப்ரஹ்மசாரிணே நம: 25
,, கஜாநநாய நம:
,, த்வைமாத்ரேயாய நம:
,, முநிஸ்துத்யாய நம:
,, பக்தவிக்நவிநாசகாய நம:
,, ஏகதந்தாய நம: 30
,, சதுர்பாஹவே நம:
,, சதுராய நம:
,, சக்திஸம்யுதாய நம:
,, லம்போதராய நம:
,, ஸூர்ப்பகர்ணாய நம: 35
,, ஹரயே நம:

ஓம் ப்ரஹ்மவிதுத்தமாய நம:
,, காலாய நம:
,, க்ருஹபதயே நம:
,, காமிநே நம: 40
,, ஸோமஸூர்யாக்நிலோசநாய நம:
,, பாஸாங்குஸதராய நம:
,, சண்டாய நம:
,, குணாதீதாய நம:
,, நிரஞ்ஜநாய நம: 45
,, அகல்மஷாய நம:
,, ஸ்வயம் ஸித்தாய நம:
,, ஸித்தார்ச்சிதபதாம்புஜாய நம:
,, பீஜபூரபலாஸக்தாய நம:
,, வரதாய நம: 50
,, ஸாஸ்வதாய நம:
,, க்ருதிநே நம:
,, த்விஜப்ரியாய நம:
,, வீதபயாய நம:
,, கதிநே நம: 55
,, சக்ரிணே நம:
,, இக்ஷுசாபத்ருதே நம:
,, ஸ்ரீதாய நம:
,, அஜாய நம:
,, ஸ்ரீபதயே நம: 60
,, உத்பலகராய நம:
,, ஸ்துதிஹர்ஷிதாய நம,
,, குலாத்ரிபேத்ரே நம:
,, ஜடிநே நம:
,, சந்த்ரசூடாய நம: 65
,, அமரேஸ்வராய நம:
,, நாகயஜ்ஞோபவீதிநே நம:
,, ஸ்ரீகண்டாய நம:
,, ராமார்ச்சிதபதாய நம:
,, வ்ரதிநே நம: 70

ஓம் ஸ்தூலகண்டாய நம:
,, அக்ரகண்யாய நம:
,, க்ராமணயே நம:
,, கணபதயே நம:
,, ஸ்திராய நம: 75
,, வ்ருத்திதாய நம:
,, ஸுபகாய நம:
,, ஸூராய நம:
,, வாகீசாய நம:
,, ஸித்திதாய நம: 80
,, தூர்வாபில்வப்ரியாய நம:
,, காந்தாய நம:
,, பாபஹாரிணே நம:
,, க்ருதாகமாய நம:
,, ஸமாஹிதாய நம: 85
,, வக்ரதுண்டாய நம:
,, ஸ்ரீப்ரதாய நம:
,, ஸௌம்யாய நம:
,, பக்திகாங்க்ஷிததாயகாயநம:
,, அச்யுதாய நம: 90
,, கேவலாய நம:

ஓம் ஸித்தாய நம:
,, ஸச்சிதாநந்த விக்ரஹாய [நம:
,, ஜ்ஞாநிநே நம:
,, மாயா யுக்தாய நம: 95
,, தாந்தாய நம:
,, ப்ரஹ்மிஷ்டாய நம:
,, பயவர்ஜிதாய நம:
,, ப்ரமத்த தைத்யபயாய [நம:
,, வ்யக்தமூர்த்தயே நம: 100
,, அமூர்த்திகாய நம:
,, பார்வதீசங்கரோத்ஸங்க கேலநோத்ஸவலாலநாய நம:
,, ஸமஸ்தஜகதாதாராய நம:
,, வரமூஷகவாஹநாய நம:
,, ஹ்ருஷ்டஸ்துதாய நம:
,, ப்ரஸந்நாத்மநே நம:
,, ஸர்வஸித்திப்ரதாயகாய [நம:
,, ஸித்தி புத்தி ஸஹித ஸ்ரீ கணாதிபதயே நம: 108

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

---

## ஸ்ரீ ஸுப்ரமண்யர் சோடச நாமங்கள்.

ஓம் ஸ்கந்தாய நம:
,, குஹாய நம:
,, ஷண்முகாய நம:
,, பாலநேத்திரசுதாய நம:
,, பிரபவே நம: 5
,, பிங்களாய நம:
,, கிருபாளவே நம:
,, ஸிகிவாஹநாய நம:

ஓம் துவிஷட்புஜாய நம:
,, திரிஷணேத்ராய நம: 10
,, பக்தவத்ஸலாய நம:
,, உமாஸுதாய நம,
,, கிரௌஞ்சதாரணாய நம:
,, விசாகாய நம:
,, பார்வதீப்ரியநந்தநாய நம:
,, ஸர்வஸ்வாமிநே நம: 16

ஓம் ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸ்வாமிநே நமோ நம:

---

## ஸ்ரீ ஸுப்ரமண்யர் அஷ்டோத்ர ஶத நாமங்கள்.

ஓம் ஸ்ரீ ஸுப்ரமண்யேஸ்வராய நம:
,, அசிந்த்யசக்தயே நம:
,, அநகாய நம:
,, அக்ஷோப்யாய நம:
,, அபராஜிதாய நம: 5
,, அநாதவத்ஸலாய நம:
,, அமோகாய நம:
,, அசோகாய நம:
,, அஜராய நம:
,, அபயாய நம: 10
,, அநிருத்தாய நம:
,, அகஹராய நம:
,, அக்ரகண்யாய நம:
,, அத்ரிஜாஸுதாய நம:
,, அநாதமஹிமாய நம: 15
,, அபராய நம:
,, அநந்தஸௌக்யாய நம:
,, ஆநந்தாய நம:
,, அவ்யாய நம:
,, அநுத்தமாய நம: 20
,, அக்ஷயாய நம:
,, அதிர்வியாய நம:
,, கமலேக்ஷணாய நம:
,, கிருதகிருத்யாய நம:
,, குணாதீதாய நம: 25
,, குணாசிரயாய நம:
,, கதிப்ரதாய நம:
,, கம்பீராய நம:
,, கிரிஜாத்மஜாய நம:
,, கதாஹராய நம: 30
,, க்ரஹாதீசாய நம:
,, குணாக்ரகண்யாய நம:
,, கோபதிப்ரியாய நம:
,, கஹநாய நம:
ஓம் கர்மஜ்ஞாய நம: 35
,, குப்தாய நம:
,, குணவர்தநாய நம:
, குஹாய நம:
,, கதஜ்ஞாய நம:
,, கததந்த்ராய நம: 40
,, குணாஸ்ரயாய நம:
,, கத்யபத்யப்ரதாய நம:
,, குஹ்யாய நம:
,, கோவ்ருத்தாய நம:
,, ககநசராய நம: 45
,, சராசராய நம:
,, கதக்லேசாய நம:
,, கணநீயசரித்ராய நம:
,, குணார்ணவாய நம:
,, கூர்ணிதாக்ஷாய நம: 50
,, கநகம்பீராய நம:
,, கோரப்ரியாய நம:
,, கநாநந்தாய நம:
,, கர்மஹந்த்ரே நம:
,, குணவதே நம: 55
,, புஷ்பராகாய நம:
,, கோணீகராய நம:
,, கோஷாய நம:
,, கோரதைத்யப்ரஹாரகாய நம:
,, கடிதைஸ்வர்ய ஸந்தோஹாய நம: 60
,, சித்ரக்ருதே நம:
,, சிந்மயாய நம:
,, சித்ஸ்வரூபாய நம:
,, சிதாநந்தாய நம:
,, ஸுப்ரமண்யாய நம: 65
,, விலயக்ருதே நம:
,, சோரக்நே நம:

ஓம் சதுராய நம: [நம:
,, சந்த்ரார்க்க லோசநாய
,, சக்ரசாமீகராபூஷணாய நம:
,, சந்த்ரமௌலி தநூத்பவாய நம:
,, சரித்ராங்காய நம:
,, சர்மஹந்த்ரே நம:
,, சித்ரிதாகில பாதகாய நம:
,, சலீக்ருததம:க்லேசாய நம: 75
,, சித்ரீக்ருத மஹாயசஸே நம:
,, ஜபிகாம்ருதஸத்ராய நம:
,, கடிகாம்ருதஸாகராய நம:
,, சின்மாத்ராய நம:
,, குமாராய நம: 80
,, சாத்ராய நம:
,, சிந்நஸம்ஸயாய நம:
,, சந்தோகம்யாய நம:
,, சந்தோகாமிநே நம:
,, ஜகஜ்ஜ்யேஷ்டாய நம: 85
,, ஜகந்மாயாய நம:
,, ஜநகாய நம:
,, ஜாஹ்நவீஸூநவே நம:
ஓம் ஜிதாமித்ராய நம: 90
,, ஜகத்குரவே நம:
,, ஜயிநே நம:
,, ஜிதேந்த்ரியாய நம:
,, ஜராமரணவர்ஜிதாய நம:
,, ஜகந்நாதாய நம:
,, ஜகஜ்ஜீவாய நம: 95
,, க்ஷேத்ரஜ்ஞாய நம:
,, க்ஷாமவர்ஜிதாய நம:
,, க்ஷமாதராய நம:
,, க்ஷேமாய நம:
,, க்ஷேத்ராய நம: 100
,, கருணாகராய நம:
,, க்ரூரக்நாய நம:
,, க்ஷிதிதாய நம:
,, உமாபுத்ராய நம:
,, க்ஷிதிபூஷணாய நம: 105
,, க்ஷமாஸ்ரயாய நம:
,, தேவஸேநாபதயே நம:
,, ஸ்ரீ வல்லீ தேவ ஸேநா ஸமேத ஸ்ரீ ஸுப்ரமண்யேஸ்வரஸ்வாமிநே நம: 108

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

---

## ஸ்ரீ ஶிவாஷ்டோத்ர ஶத நாமங்கள்.

ஓம் ஶிவாய நம:
,, மஹேச்வராய நம:
,, சம்பவே நம:
,, பிநாகிநே நம:
,, சசிசேகராய நம: 5
,, வாமதேவாய நம:
,, விரூபாக்ஷாய நம:
,, கபர்த்திநே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
,, சங்கராய நம: 10
,, சூலபாணயே நம:
,, கட்வாங்கிநே நம:
,, விஷ்ணுவல்லபாய நம:
,, சிபிவிஷ்டாய நம:
,, அம்பிகாநாதாய நம: 15
,, ஸ்ரீகண்டாய நம:

ஓம் பக்தவத்ஸலாய நம:
,, பவாய நம:
,, ஸர்வாய நம:
,, த்ரிலோகேசாய நம: 20
,, ஶிதிகண்டாய நம:
,, சிவாப்ரியாய நம:
,, உக்ராய நம:
,, கபர்த்திநே நம:
,, காமாரயே நம: 25
,, அந்தகாஸுர ஸூதநாய நம:
,, கங்காதராய நம:
,, லலாடாக்ஷாய நம:
,, காலகாலாய நம:
,, கிருபாநிதயே நம: 30
,, பீமாய நம:
,, பரஸுஹஸ்தாய நம:
,, ம்ருகபாணயே நம:
,, ஜடாதராய நம:
,, கைலாஸவாஸிநே நம: 35
,, கவசிநே நம:
,, கடோராய நம:
,, த்ரிபுராந்தகாய நம:
,, வ்ருஷாங்காய நம:
,, வ்ருஷபாரூடாய நம: 40
,, பஸ்மோத்தூளித விக்ர
ஹாய நம:
,, ஸாமப்ரியாய நம:
,, ஸ்வரமயாய நம:
,, த்ரயீமூர்த்தயே நம:
,, அநீஸ்வராய நம: 45
,, ஸர்வஜ்ஞாய நம:
,, பரமாத்மநே நம:
,, ஸோமஸூர்யாக்நிலோச
நாய நம:
,, ஹவிஷே நம:
,, யஜ்ஞமயாய நம: 50
,, ஸோமாய நம:

ஓம் பஞ்சவக்த்ராய நம:
,, ஸதாசிவாய நம:
,, விஸ்வேஸ்வராய நம:
,, வீரபத்ராய நம: 55
,, கணநாதாய நம:
,, ப்ரஜாபதயே நம:
,, ஹிரண்யரேதஸே நம:
,, துர்த்தர்ஷாய நம:
,, கிரீசாய நம: 60
,, கிரிசாய நம:
,, அநகாய நம:
,, புஜங்கபூஷணாய நம:
,, பர்க்காய நம:
,, கிரிதந்விநே நம: 65
,, கிரிப்ரியாய நம:
,, க்ருத்திவாஸஸே நம:
,, புராராதயே நம:
,, பகவதே நம:
,, ப்ரமதாதிபாய நம: 70
,, ம்ருத்யுஞ்ஜயாய நம:
,, ஸூக்ஷ்மதநவே நம:
,, ஜகத்வ்யாபிநே நம:
,, ஜகத்குரவே நம:
,, வ்யோமகேசாய நம: 75
,, மஹாஸேநஜநகாய நம:
,, சாருவிக்ரமாய நம:
,, ருத்ராய நம:
,, பூதபதயே நம:
,, ஸ்தாணவே நம: 80
,, அஹிர்புத்ந்யாய நம:
,, திகம்பராய நம:
,, அஷ்டமூர்த்தயே நம:
,, அநேகாத்மநே நம:
,, ஸாத்விகாய நம: 85
,, ஶுத்தவிக்ரஹாய நம:
,, சாஸ்வதாய நம:
,, கண்டபரசவே நம:

ஓம் அஜாய நம:
,, பாசவிமோசகாய நம: 90
,, ம்ருடாய நம:
,, பசுபதயே நம:
,, தேவாய நம:
,, மஹாதேவாய நம:
,, அவ்யயாய நம: 95
,, ஹரயே நம:
,, பகநேத்ரபிதே நம:
,, அவ்யக்தாய நம:
ஓம் தக்ஷாத்வரஹராய நம:
,, ஹராய நம: 100
,, பூஷதந்தபிதே நம:
,, அவ்யக்ராய நம:
,, ஸகஸ்ராக்ஷாய நம:
,, ஸஹஸ்ரபதே நம:
,, அபவர்க்கப்ரதாய நம;
,, அநந்தாய நம:
,, தாரகாய நம:
,, பரமேஸ்வராய நம: 108

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

---

## ஸ்ரீ அம்பிகை அஷ்டோத்ர ஶத நாமங்கள்.

ஓம் மஹாமநோன்மநி சக்த்யை நம:
,, சிவசக்த்யை நம:
,, சிவசங்கர்யை நம:
,, இச்சாசக்த்யை நம:
,, க்ரியாசக்த்யை நம: 5
,, ஜ்ஞாநசக்தி ஸ்வரூபிண்யை நம:
,, சாந்தாதீதகலாநந்தாயை நம:
,, சிவமாயாயை நம:
,, சிவப்ரியாயை நம:
,, ஸர்வஜ்ஞாயை நம: 10
,, ஸௌந்தர்யை நம:
,, ஸௌம்யாயை நம:
,, ஸச்சிதாநந்தவிக்ரஹாயை நம:
,, பராத்பராயை நம:
,, பாலாயை நம: 15
,, த்ரிபுராயை நம:
,, குண்டல்யை நம:
,, ஜயாயை நம:
,, சிவாயை நம:
,, பவாந்யை நம: 20
,, ருத்ராண்யை நம:
ஓம் ஸர்வாண்யை நம:
,, புவநேஸ்வர்யை நம:
,, கல்யாண்யை நம:
,, சூலிந்யை நம: 25
,, காந்தாயை நம:
,, மஹாத்ரிபுர ஸுந்தர்யை நம:
,, மாலிந்யை நம:
,, மாநிந்யை நம:
,, ஸர்வாயை நம: 30
,, மதநோல்லாஸ மோஹிந்யை நம:
,, மஹேஸ்வர்யை நம:
,, மாதங்க்யை நம:
,, சிவகாமிந்யை நம:
,, ஹிதாத்மிகாயை நம: 35
,, காமாக்ஷ்யை நம:
,, கமலாக்ஷ்யை நம:
,, மீநாக்ஷ்யை நம:
,, ஸர்வஸாக்ஷிண்யை நம:
,, உமாதேவ்யை நம: 40
,, மஹாகாள்யை நம:
,, ஸமாயை நம:

ஓம் ஸர்வஜநப்ரியாயை நம:
,, ஸித்வராயை நம:
,, ஸித்கநாநந்தாயை நம: 45
,, ஸிந்மயாயை நம:
,, ஸித்ஸ்வரூபிண்யை நம:
,, மஹாஸரஸ்வத்யை நம:
,, துர்க்காயை நம:
,, பாலதுர்க்காயை நம: 50
,, அதிதுர்க்காயை நம:
,, லகுள்யை நம:
,, ஸுத்தவித்யாயை நம:
,, ஸாரதாநந்த விக்ரஹாயை
,, ஸுப்ரபாயை நம: [நம:
,, ஸுப்ரபாஜ்வாலாயை நம:
,, இந்த்ராக்ஷ்யை நம:
,, ஸர்வமோஹிந்யை நம:
,, மஹேந்த்ரஜால மத்யஸ்
தாயை நம:
,, மாயாயை நம: 60
,, மதுவிநோதிந்யை நம:
,, மந்த்ரேஸ்வர்யை நம:
,, மஹாலக்ஷ்ம்யை நம: [நம:
,, மஹாகாலபலப்ரதாயை
,, சதுர்வேத விசேஷஜ்ஞா
யை நம: 65
,, ஸாவித்ரியை நம:
,, ஸர்வதேவதாயை நம:
,, மஹேந்த்ராண்யை நம:
,, கணாத்யக்ஷாயை நம:
,, மஹாபைரவமோஹிந்யை
,, மஹாமாயாயை நம: [நம:
,, மஹாதேவ்யை நம:
,, மஹாபஹாயை நம:
,, மஹிஷாஸுர ஸம்ஹாரி
ண்யை நம: [நியை நம:
,, சண்டமுண்ட குலாந்தக்
,, சக்ரேஸ்வர்யை நம:

ஓம் சதுர்வேத்யை நம: [நம:
,, சக்ராதிஸுரநாயிகாயை
,, ஷட்சாஸ்த்ரநிபுணாயை
,, நித்யாயை நம: [நம: 80
,, ஷட்தர்சந விசக்ஷணாயை
,, காளராத்ரியை நம: [நம:
,, கலாதீதாயை நம: [நம:
,, கவிராஜ மநோஹராயை
,, ஸாரதாதிலகாகாராயை
,, ருத்ராயை நம: [நம: 85
,, பக்தஜநப்ரியாயை நம:
,, உக்ரமார்யை நம:
,, மஹாமார்யை நம:
,, க்ஷிப்ரமார்யை நம: 90
,, ரணப்ரியாயை நம:
,, அந்நபூர்ணேஸ்வர்யைநம:
,, மாத்ரே நம: [யை நம:
,, ஸ்வர்ணகாரதடித்ப்ரபா
,, ஸ்வரவ்யஞ்ஜநவர்ணக்யா
யை நம: 95
,, கத்யபத்யாதி காரணாயை
நம:
,, பதவாக்யார்த்தநிலயாயை
நம:
,, பிந்துநாதாதி காரணாயை
நம:
,, மோக்ஷசமஹிஷ்யைநம
,, நித்யாயை நம: 100 [நம:
,, புத்திமுக்திபலப்ரதாயை
,, விஜ்ஞாநதாயிந்யை நம:
,, ப்ரஜ்ஞாயை நம: [நம:
,, ப்ரஜ்ஞாநபலதாயிந்யை
,, அஹங்காரகலாசக்த்யை
,, பராசக்த்யை நம: [நம:
,, பராத்பராயை நம:
,, ஸ்ரீ சிவகாமஸுந்தர்யை
நம: 108

A ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

## ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்

### அஷ்டோத்ர ஶத நாமங்கள்.

ஓம் சங்கராசார்யவர்யாய நம:
,, பிரஹ்மாநந்தப்ரதாயகாய நம:
,, அக்ஞாந திமிராதித்யாய நம:
,, ஸுக்ஞாநாம்புதி சந்த்ரமஸே நம:
,, வர்ணாஸ்ரம பிரதிஷ்டாத்ரே நம: 5
,, முக்திப்ரதாயகாய நம:
,, சிஷ்யோபதேசநிரதாயநம:
,, பக்தாபீஷ்டப்ரதாயகாய நம:
,, ஸூக்ஷ்ம தத்வரஹஸ்யக்ஞ்ஞாய நம: [நம:
,, கார்யாகார்யப்ரபோதகாய நம: [நம: 10
,, ஜ்ஞாந முத்ராஞ்சிதகராய
,, சிஷ்யஹ்ருத்தாபஹாரகாய நம:
,, பாரிவ்ராஜகாஸ்ரமோத் தர்த்ரே நம:
,, சர்வதந்ர ஸ்வதந்த்ரதியே நம:
,, அத்வைத ஸ்தாபநாசார்யாய நம: 15
,, சாக்ஷாத் சங்கரரூபப்ருதே நம: [ய நம:
,, ஷண்மத ஸ்தாபனாசார்யா
,, த்ரயீ மார்க்கப்ரகாஸகாய நம:
,, வேதவேதாந்த தத்வஜ்ஞாய நம:
,, துர்வாதிமதகண்டநாயநம:

ஓம் வைராக்கிய நிரதாய நம:
,, சாந்தாய நம: [நம:
,, ஸம்ஸாரார்ணவ தாரகாய
,, ப்ரஸந்நவதநாம்போஜாய நம:
,, பரமார்த்தப்ரகாசகாயநம:
,, புராணஸ்மிருதி ஸாரஜ்ஞாய நம: 25
,, நித்யத்ருப்தாய நம:
,, மஹதே நம:
,, முநயே நம:
,, நித்யாநந்தாய நம:
,, நிராதங்காய நம: 30
,, நிஸ்ஸங்காய நம:
,, நிர்மலாத்மகாய நம:
,, நிர்மமாய நம:
,, நிரஹங்காராய நம:
,, விஸ்வவந்திய பதாம்புஜாய நம: 35
,, ஸத்தியவ்ரதாய நம:
,, ஸத்பாவாய நம:
,, சங்க்யாதீத குணோஜ்வலா
,, அநகாய நம: [ய நம:
,, ஸாரஹ்ருதயாய நம: 40
,, ஸுதயே நம:
,, ஸாரஸ்வதப்ரதாய நம:
,, ஸத்தியாத்மநே நம:
,, புண்ணியசீலாய நம:
,, ஸாங்கியயோக விசக்ஷணாய நம: 45
,, தபோராசயே நம:
, மஹாதேஜஸே நம:
,, குணத்ரய விபாகவிதே
,, கலிக்நாய நம: [நம:

ஓம் காலகர்மஞ்ஜ்ஞாய நம: 50
,, தமோகுணநிவாரகாய நம:
,, பகவதே நம:
,, பாரதீஜேத்ரே நம:
,, சாரதாஹ்வான பண்டிதா
ய நம:
,, தர்மாதர்ம விபாவஜ்ஞாய
நம: 55
,, லக்ஷ்யாலக்ஷ்ய பேதப்ரதர்
சகாய நம:
,, நாதபிந்து களாபிஜ்ஞாய
நம:
,, யோகி ஹ்ருத்பத்ம பாஸ்க
ராய நம:
,, அதீந்த்ரியஜ்ஞாந நிதயே
,, நித்யாநித்ய விவேகவதே
,, சிதாநந்தாய நம: [நம:
,, சிந்மயாத்மநே நம:
,, பரகாயப் பிரவேசக்ருதே
நம:
,, அமாநுஷ சரித்ராட்யாய
நம:
,, க்ஷேமதாயிநே நம: 65
,, க்ஷமாகராய நம:
,, பவ்யாய நம:
,, பத்ரப்ரதாய நம:
,, பூரிமஹிம்நே நம:
,, விஸ்வரஞ்சகாய நம: 70
,, ஸ்வப்ரகாசாய நம:
,, ஸதாதாராய நம:
,, விஸ்வபந்தவே நம:
,, ஸுபோதாய நம:
,, விசாலகீர்த்தயே நம: 75
,, வாகீசாய நம:
,, ஸர்வலோக ஹிதோத்ஸு
காய நம:
,, கைலாச யாத்ரா ஸம்ப்ரா
ப்த சந்த்ர மௌலி ப்ரபூ
ஜகாய நம:
ஓம் காஞ்ச்யாம் ஸ்ரீ சக்ர ரா
ஜாக்ய யந்த்ர ஸ்தாபந
தீக்ஷிதாய நம:
,, ஸ்ரீ சக்ராத்மக தாடங்க
தோஷிதாம்பா மநோர
தாய நம: 80
,, ஸ்ரீ ப்ரஹ்ம ஸூத்ரோப
நிஷத் பாஷ்யாதி க்ரந்த
கல்பகாய நம:
,, சதுர்த்திக் சதுராம்நாய
ப்ரதிஷ்டாத்ரே நம:
,, மஹாமதயே நம:
,, த்விஸப்ததிமதோச்சேத்
ரே நம:
,, ஸர்வதிக்விஜயப்ரபவே நம:
,, காஷாய வஸநோபேதாய
நம:
,, பஸ்மோத்தூளித விக்ர
ஹாய நம:
,, ஜ்ஞாநாத்மைக தண்டாட்
யாய நம:
,, கமண்டலுலஸத்கராய நம:
,, குரு பூமண்டலாசார்யாய
நம:
,, பகவத்பாத ஸம்ஜ்ஞகாய
நம: [ய நம:
,, வியாஸஸந்தர்சனப்ரீதா
,, ரிஷ்ய சிருங்க புரேஸ்வ
ராய நம:
,, ஸௌந்தர்ய லஹரீ முக்ய
பஹுஸ்தோத்ர விதாய
காய நம: [ஜ்ஞாய நம:
,, சதுஷ் ஷஷ்டிகளா பிஜ்
,, ப்ரஹ்ம ராக்ஷஸ தோஷ
காய நம:

ஓம் ஸ்ரீ மண்டன மிஸ்ராக்ய
ஸ்வயம்புஜயஸந்நுதாயநம:
,, தோடகாசார்ய ஸம்பூஜ்
யாய நம: [காய நம:
,, பத்ம பாதார்ச்சிதாங்கிரி
,, ஹஸ்தாமலக யோகீந்த்ர
பிரஹ்மஜ்ஞாந ப்ரதாய
காய நம:
,, ஸுரேஸ்வராக்ய ஸச்சி
ஷ்ய ஸந்யாஸாஸ்ரமதா
யகாய நம:

ஓம் ந்ருஸிம்ஹபக்த ஸத்ரத்ந
கர்ப்பஹேரம்ப பூஜகாய
நம:
,, வ்யாக்யாந ஸிம்ஹாஸநா
தீசாய நம:
,, ஜகத்பூஜ்யாய நம: 105
,, ஜகத்குரவே நம:
,, ஸ்ரீமத் சங்கராசார்ய ஸர்
வலோக குரவே நம:
,, பராய நம: 108

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதாநந்த அத்வைத
ஜோதி ஸ்வரூப ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய
ஸ்வாமிநே நமோ நம:

---

## ஸ்ரீ ஸரஸ்வதி அஷ்டோத்ர ஶத நாமங்கள்.

ஓம் ஸரஸ்வத்யை நம:
,, மஹாபத்ராயை நம:
,, மஹாமாயாயை நம:
,, வரப்ரதாயை நம:
,, ஸ்ரீப்ரதாயை நம: 5
,, பத்மநிலயாயை நம:
,, பத்மாக்ஷியை நம:
,, பத்மவக்த்ராயை நம:
,, சிவாநுஜாயை நம:
,, புஸ்தகஹஸ்தாயை நம: 10
,, ஜ்ஞாநமுத்ராயை நம:
,, ரமாயை நம:
,, காமரூபிண்யை நம:
,, மஹாவித்யாயை நம: [நம:
,, மஹாபாதக நாசின்யை
,, மஹாஸ்ரயாயை நம:
,, மாலிந்யை நம:
,, மஹாபோகாயை நம:
,, மஹாபுஜாயை நம:

ஓம் மஹாபாயை நம: 20
,, மஹோத்ஸாஹாயை நம:
,, திவ்யாங்காயை நம:
,, ஸுரவந்திதாயை நம:
,, மஹாகாள்யை நம:
,, மஹாபாசாயை நம: 25
,, மஹாகாராயை நம:
,, மஹாங்குஸாயை நம:
,, பீதாயை நம:
,, விமலாயை நம:
,, விஸ்வாயை நம: 30
,, வித்யுந்மாலாயை நம:
,, வைஷ்ணவ்யை நம:
,, சந்திரிகாயை நம:
,, சந்த்ரலேகாவிபூஷிதா
,, ஸாவித்ரியை நம: [யைநம:
,, ஸுரஸாயை நம:
,, தேவ்யை நம: [நம:
,, திவ்யாலங்காரபூஷிதாயை

ஓம் வாக்தேவ்யை நம:
,, வஸுதாயை நம: 40
,, தீவ்ராயை நம:
,, மஹாபத்ராயை நம:
,, மஹாபலாயை நம:
,, போக்தாயை நம:
,, பாரத்யை நம: 45
,, பாமாயை நம:
,, கோவிந்தயை நம:
,, கோமத்யை நம:
,, ஜடிலாயை நம:
,, விந்த்யவாஸாயை நம: 50
,, ஷண்டிகாயை நம:
,, பரமவைஸ்ணவ்யை நம:
,, ப்ராஹ்ம்யை நம: [நம:
,, ப்ரஹ்மஜ்ஞாந ஸாதநாயை
,, ஸௌதாமிந்யை நம:
,, ஸுதாமூர்த்யை நம:
,, ஸுபத்ராயை நம:
,, ஸுரபூஜிதாயை நம:
,, ஸுவாஸிந்யை நம:
,, ஸுநாஸாயை நம: 60
,, விநித்ராயை நம:
,, பத்மலோசனாயை நம:
,, வித்யாரூபாயை நம:
,, விஸாலாக்ஷ்யை நம:
,, ப்ரஹ்மஜாயாயை நம: 65
,, மஹாபலாயை நம:
,, த்ரயீமூர்த்யை நம:
,, த்ரிகாலஜ்ஞாயாயை நம:
,, த்ரிகுணாயை நம:
,, சாஸ்த்ரரூபிண்யை நம: 70
,, ஸும்பா ஸும்பப்ரமதிந்
,, ஸுபதாயை நம: [யை நம:
,, ஸ்வராத்மகாயை நம:
,, ரக்தபீஜ நிஹந்த்ரியை நம:
,, சாமுண்டாயை நம: 75

ஓம் அம்பிகாயை நம: நம:
,, முண்டகாயப்ரஹரணாயை
,, தூமலோசநமர்த்தநாயை
[நம:
,, ஸர்வதேவஸ்துதாயை
,, ஸௌம்யாயை நம: [நம:
,, ஸுராஸுர நமஸ்க்ருதா
யை நம:
,, காளராத்ரியை நம:
,, கலாதராயை நம:
,, வாக்தேவ்யை நம:
,, வராரோஹாயை நம: 85
,, வாராஹ்யை நம:
,, வாரிஜாஸநாயை நம:
,, சித்ராம்பராயை நம:
,, சித்ரகாந்தாயை நம: [நம:
,, சித்ரமால்ய விபூஷிதாயை
,, காந்தாயை நம:
,, காமப்ரதாயை நம:
,, வந்த்யாயை நம: [நம:
,, ரூபஸௌபாக்ய தாயிந்யை
,, ஸ்வேதாநநாயை நம: 95
,, நீலபுஜாயை நம:
,, ஸ்வேதஸ்தந ஸுபூஜிதா
யை நம:
,, ரக்தமத்யாயை நம:
,, நீலஜங்காயை நம:
,, நிரஞ்ஜநாயை நம: 100
,, சதுராநந ஸாம்ராஜ்யாயை
நம: [நம:
,, சதுர்வர்க்க பலப்ரதாயை
,, ஹம்ஸாஸநாயை நம:
,, பிரஹ்ம விஷ்ணு சிவாத்
மிகாயை நம:
,, சர்வமங்களாயை நம: 105
,, வேதமாத்ரே நம:
,, சாரதாயை நம:
,, ஸரஸ்வத்யை நம: 108

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

## ஸ்ரீ சோரூப அஷ்டோத்ரஸத நாமங்கள்.

ஓம் அகண்டாய நம:
,, அகர்த்ரே நம:
,, அகாமாய நம:
,: அகாரணாய நம:
,, அஹேயாய நம: 5
,, அக்ரோதாய நம:
,, அஸங்காய நம:
,, அஸம்சாரிணே நம:
,, அசரீரிணே நம:
,, அசலாய நம: 10
,, அச்சுதாய நம:
,, அக்ஷராய நம:
,, அணவே நம:
,, அத்வையாய நம:
,, அநந்தாய நம: 15
,, அநாதயே நம:
,, அநாதிமுக் தாய நம:
,, அநாவிருதாய நம:
,, அநுபாதேயாய நம:
,, அநூதநாய நம: 20
,, அநேகரூபாய நம:
,, அபயாய நம:
,, அபரிச்சிந்நாய நம:
,, அபரோக்ஷாய நம:
,, அபேதாய நம: 25
,, அபோக்த்ரே நம:
,, அப்ரமேயா நம:
,, அப்ரவிருத்தாய நம:
,, அப்ராணாய நம:
,, அமநஸே நம: 30
,, அம்ருதாய நம:
,, அலோபாய நம:
,, அவ்யாகிருதாய நம:
,, ஆதயே நம:
,, ஆத்மநே நம: 35
,, ஆநந்தரூபாய நம:

ஓம் உந்நதாய நம:
,, ஏகரூபாய நம:
,, காரணாய நம:
,, கூடஸ்தாய நம: 40
,, ஸத்தியாய நம:
,, ஸத்ரூபாய நம:
,, ஸங்பவே நம:
,, ஸர்வகாரணாய நம:
,, ஸர்வகதாய நம: 45
,, ஸர்வசமாய நம:
,, ஸர்வக்ஞாய நம:
,, ஸர்வதோமுகாய நம:
,, ஸர்வாகாராய நம:
,, ஸர்வாதாராய நம:
,, ஸர்வாதிஷ்டாநாய நம: 50
,, ஸர்வாத்மநே நம:
,, ஸர்வாபாவாய நம:
,, ஸாக்ஷிணே நம:
,, சாந்தாய நம: 54
,, சிந்மாத்ராய நம:
,, சிவாய நம:
,, ஸுத்தாய நம:
,, ஸ்வப்ரகாசாய நம:
,, ஸ்வயம்பிரகாசாய நம: 50
,, ஸ்வயாய நம:
,, சூந்யாய நம:
,, க்ஷேத்ரக்ஞாய நம:
,, க்ஞாநஸ்வரூபாய நம:
,, ஸ்தாணவே நம: 65
,, த்ருக்ஸ்வரூபாய நம:
,, நாநாரூபாய நம:
,, நிஷ்கிரியாய நம:
,, நிஷ்ப்ரகிருதயே நம:
,, நிஷ்ப்ரபஞ்சாய நம: 70
,, நித்யமுக்தாய நம:
,, நித்யாநந்தாய நம:

ஓம் நித்யாய நம:
,, நிரஞ்சநாய நம: 
,, நிரவயவாய நம: 75
,, நிராகாராய நம:
,, நிராதாராய நம:
,, நிரிந்த்ரியாய நம:
,, நிரீஸ்வராய நம:
,, நிருபத்ரவாய நம: 80
, நிருபாய நம:
,, நிர்க்குணாய நம:
,, நிஸ்ஸம்பந்தாய நம:
,, நிர்ஜ்ஜீவாய நம:
,, நிர்த்தோஷாய நம: 85
,, நிர்ப்பத்தாய நம:
,, நிர்மலாய நம:
,, நிர்லேபாய நம:
,, நிர்விகல்பாய நம:
,, நிர்விகாரிணே நம: 90

ஓம் நிர்விசேஷாய நம:
,, நிர்விஷயாய நம:
,, நிர்விருதாய நம:
,, பரமாநந்தாய நம:
,, பரமார்த்தாய நம: 95
,, பரிபூரணாய நம:
,, ப்ரத்தியக் ஸ்வரூபாய நம:
,, ப்ரத்யக்ஷாய நம:
,, ப்ரஹ்மணே நம:
,, புத்தாய நம: 100
,, புராதநாய நம:
,, மஹதே நம:
,, மஹாஸூந்யாய நம:
,, மநோவாசா மகோசராய நம:
,, முக்தாய நம: 105
,, யதார்த்தவஸ்துநே நம:
,, வஸ்துநே நம:
,, விபவே நம: 108

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதாநந்த அத்வைத
ஜோதிஸ்வரூபாய நம:

## ஸ்ரீ பரமகுரு பரம்பரை வணக்கம்.

நாராயணம் பத்மபவம் வஸிஷ்டம்
சக்திம்ச தத்புத்ர பராசரம்ச |
வியாஸம் சுகம் கௌடபதம் மஹாந்தம்
கோவிந்த யோகீந்த்ர மதாஸ்ய சிஷ்யம்|| 1
ஸ்ரீ சங்கராசார்ய மதாஸ்ய பத்மபாதம்ச
ஹஸ்தா மலகம்ச சிஷ்யம் |
தம்தோடகம் வார்த்திககாரம் அந்யாந்
அஸ்மத்குரூந் ஸந்தத மாநதோஸ்மி|| 2

---

பாராயண சிந்தாமணி முற்றிற்று.

உ

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மநே நம:



## ஸ்ரீ கண்ணபிரான் துதி.

கையி லாழி யெடுத்தருள் கண்ணனை
மையு லாமழை வண்ணனைப் பாண்டவ
ருய்ய வந்துத யஞ்செய்த பானுவை
வைய முண்டசெவ் வாயனை வாழ்த்துவாம்.

ஸர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

உ

சிவமயம்.

சமிவன க்ஷேத்திர மென்னும்

கோயிலூர் சிவஸ்தலத்தில்

எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ

# முத்துராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந் தருளிய

# சுவாநுபவத் திருவாக்கு.

இது

ஸ்ரீ கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ மஹாதேவ ஞானதேசிக சுவாமிகள்

அனுமதியின்மீது

பனையப்பட்டி

புண்ணியசீலர்

சி. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார்

அவர்கள் குமாரர்

**சி. மு. சி. சின்னையா செட்டியாரால்**

அச்சியற்றப் பெற்றது.

யுவ௵ 1935 ஆவணி ௴

சிவமயம்.

ஓம் பரப்பிரஹ்மணே நம:

# சிறப்புப் பாயிரம்.

சமிவன க்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்

அடியார் குழாத்துள் ஒருவரியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

பொன்னார் கமலப் பூவினி துறையு
மன்னுந் திசைமுகன் வளைந்தவான் புவியின்
மந்தா நிலந்தவழ் மலயமா மலைமேற்
சிந்தா மணியாய்த் திகழும் பெருந்தவக்
குறுமுனி மலர்வாய்க் குமுதநின் றெழுகு
மறுவறு நறவாம் வண்டமிழ்ப் பாண்டி
வளநா டதனின் மாதவ முனிவரு
முளநா டரியசத் துதிதவா னந்த
சுயம்புவா யொளிருஞ் சோமசுந் தரனு
நயம்பரா பரைச்சே ணயனநா யகியுஞ்
சுயஞ்சித் துருவாஞ் சுடர்வே லிறையும்
வயம்பெறு முலகின் மன்னுயிர் தழைப்பப்
பொன்மணி மௌலி புனைந்தமன் னவராய்
நன் முறைச் செங்கோ னடாத்திய வதனாற்
சதமகன் பூமகன் சனார்த்தன னுலகின்
முதன்மையாங் கைலையின் மூலநற் சிவனே
முறைசெலுத் தியவோர் முறைமையாற் கைலயி

னறமிகச் சிறந்த தந்நா டேயாம்
பல்வள நிறைந்தவப் பாண்டிநன் ஞட்டின்
மல்குஞா னத்தவர் மன்னுநற் றலமதாய்ப்
பராவுத லுறுஞ்சிவன் பன்னிய காந்த
புராணயுக் தமதாம் புராதன ஸ்தலமாய்த்
தாரணி சோமசுந் தரபாண் டியனருள்
வீரவுக் கிரன்சுதன் வீரபாண் டியனு
விராசகட் கேச னெனப்பெயர் புனைந்த
பராபர ஞேடும் பைம்பொஞர் வணிக
நேரிழை யாற்றிரு நெல்லையென் பெயர்புனை
வார்முலை யம்பிகை மன்னிவீற் றுறுவதாய்ச்
சிமிமணிக் கோபுரஞ் செம்பொன்மா ளிகைசூழ்
சமிவன மென்னத் தயங்குகேத் திரமாய்ப்
பணவணிப் பரனே பல்வினை யாடல்செய்
மணநிறை கடம்புசூழ் மதுரைமா நகர்க்குக்
குணபான் மூன்றரை கொண்டயோ சனைக்கு
மிணரார் குருந்தடி யினிலிறை வாதவூர்த்
திடமா தவர்க்கரு ளிருப்பெருந் துறைக்குக்
குடபா லொன்றரை கொண்டயோ சனைக்கு
நாப்ப ணிலமக ணகைமுகத் திலகமென்
மாப்பண் புறுவதாய் மலிபுனி தமதாய்க்
குலவுநற் பதியாங் கோயிலூ ரதனின்
மலர் மணம் போல மன்னிவீற் றிருக்கு
மாரணம் பல்கலை யாகம முறைப்பருங்
காரண கற்பனை கடந்தொளிர் பரமா
யுருவரு வொன்று முறுதநின் மலமாய்ப்
பெருவெளி யாகிப் பிறங்குசித் துருவாய்

நித்திய நிர்க்குண நிராமய நிறைவாய்ச்
சத்திய சிற்சுக தாணுவாய் நினைவென்
களங்கமற் றொளிருங் கதிரொளி வடிவா
யளந்தறி தற்கொணு வகோசரப் பொருளாய்
முப்பதங் கடந்த முதற்பிர மமதாய்ச்
செப்புத லுறவொளிர் சிவமே யருளா
லூனமி லாலியா யுற்றிடு நீர்போன்
மாநுட வடிவாய் வந்தவ தரித்த
சீர்முத்து ராம லிங்கமெய்த் தேசிகன்
கார்முகில் போலக் கருணையே பொழியு
ஞானமே யுருவா நற்றிரு நெல்லை
யானவம் பிகையி னருண்மிகப் பெற்றுத்
தனதுரு வானசிற் சாகர மதனிற்
றினமுமே குளித்துந் திருந்திழை மிகவுஞ்
சோரநா யகன்மேற் றோய்மன மிருத்தி
வாரநா யகற்கு வரிசையாய் நடக்குஞ்
செய்கைபோற் பூரண சின்மயப் பொருளில்
வைகுறத் திருவுளம் வைத்துல குய்வான்
கொற்றவா ளீசனெங் கோமா னருண்மிகப்
பெற்றவர் புகழப் பிறங்குபொற் குவடிவட்
கொணர்ந்துவைத் ததினிலைக் கோபுரம் பைம்பரி
புணர்ந்ததோ ரிரவி போலொளிர் விமானந்
திரண்மணித் தூணிறுத் தியபல மண்டபந்
தரளவெண் சங்கந் தவழ்வா லன்னப்
புட்பொலி வசனப் பொய்கைவண் பரிமளங்
கட்பொலி மலர்ப்பூங் காவிருங் கிளிபயி
றென்னஞ் சோலைசூழ் திருவீ திகணிலை

மன்னுஞ் சுருதியின் வான்பொரு ளுணர்ந்தோ
ரிதயதா மரையுறை யோர்தரு மிரதம்
புதையநீண் முகிலுலாம் புரிசையோ டிராப்பகல்
வந்தவர்க் கெல்லாம் வானு ரமுதங்
கந்தமில் வேம்பாக் கைப்புறு மாறிங்
கன்னதா னம்புரி யறச்சாலை கண்மறை
சொன்னவா தமையுணர் தொன்முனிக் குழாங்கண்
மன்னுமா றணிமிகு மடாலயம் பிறவு
மின்னவா மெனமனோ ரியம்புதற் கரிதா
வகைவகை செம்பொன் மாரிபோல் வழங்கி
மிகநவ நவமா விளங்குறப் புரிந்து
மிச்சமி வனத்தி லியற்றிய முறைபோன்
முச்சகம் புகழ்தர மொழிதலங் களினுங்
கோபுர மாதி குறைவற வியற்றியு
மாபுரம் பூதன மாதர்சே யோடுங்
கூடுறு மலர்போற் குலாவியு மகத்திற்
பாடுறு மாசைப் பற்றிலா தவராய்
மேனியிற் றரித்த வெண்கலை போலத்
தானியல் வழாத தனிநெஞ் சினரா
யநித்தியஞ் செல்வமென் றறிந்துகற் பகம்போற்
றனிப்பெருங் கொடையராய்ச் சாதன நிறைந்த
சித்தரா யில்லறஞ் சேர்ந்தினி திருக்கும்
பத்தரா மளப்பரும் பரமசீ லர்க்குந்
தனிவளர் பரமே சத்திய மற்றவை
யினிதறு மநித்திய மென்றுணர் விவேகமு
மிகநகர் ஞாளிகால் வெண்சோ றதனி
லிகபர போகத் திச்சையில் விராகமுஞ்

சமதம முதலாஞ் சட்குணச் செல்வமு
முமலமி றீவிர மோட்சா பேட்சையும்
பூரண மாகப் பொருந்தியித் தேக
மாரண மாமுன் மறைப்பொரு ளுணர்வா
னாதனந் துன்புக் காமட வாரு
மாதனக் குவையு மழலைவாய் மகவுந்
தடையெனப் பட்டினத் தார்போற் றுறந்து
கடைதொறு மேற்றுண் கரபாத் திரனாய்த்
திகம்பரி யாகித் தில்லையில் வைகுஞ்
சகம்புக ழருணா சலசீ டன்முதற்
றுறவுறு மெண்ணிலாத் தொண்டர்க டமக்குந்
திறமிகு மறைகளுட் சிறந்துறுஞ் சாம
வேதவந் தத்தில் விளங்குதத் துவமசி
போதமா வாக்கியம் புகலுறு மிலக்கியச்
சுத்தசிற் சொரூப சுவாநுபூ தியினைக்
கைத்தல மணிபோற் கணிப்பிலத் துவித
சுருதியுத் திகளாற் றேமற வுணர்த்திப்
பெருகுதுன் பமிலப் பிரதிபந்த மாகச்
சாட்சாத் கார சகசாநு போகங்
காட்சிய தாகக் கருத்துற விளக்கியுந்
தற்கொடை வழங்குந் தன்மைபோ லெவர்க்கும்
பொற்கொடை பொழியும் பொருவிலா வள்ளலாய்க்
கருவினை யுயிர்கள் கழற்றிட வனந்தந்
திருவிளை யாடல் செய்தது மன்றி
யுற்பவ மினியுறு முயிர்களுக் கிரங்கி
யற்புத மாமுளத் தருண்மிகச் சுரந்து
கடனிகர் பிறவிக் கரையேற் றிடனங்

கடனென நினைந்து கவிகளிற் சிறந்த
வெண்பா கலித்துறை விருத்த முதலாப்
பண்பா வியலுறப் பலபா வினங்களாற்
றெய்வ வணக்கமுந் தெய்வநிச் சயமு
நைவறு முத்தி நன்னிச் சயமு
மஞ்சுறு நெஞ்சிற் கறிவுறுத் துதலு
மஞ்சுகப் பத்து மலமரு நெஞ்சோ
டிரங்கலு மருளிறை யிணையடி வணக்கமும்
வரம்பெறு சொரூப வணக்கமு மிவைமுதற்
பொருவார் நாமம் புனைந்து
திருவாய் மலர்ந்தருள் செய்தனன் மாதோ.

ஓம் தத் ஸத்.

சர்வஞ் சின்மயம்.

---



சிவமயம்.

# குரு பரம்பரை வணக்கம்.

சமிவன க்ஷேத்திரமென்னும்

கோயிலூர்

அடியார் குழாத்துள் ஒருவரியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பரமாக வொளிர்சச்சி தானந்த மாம்விண்டு
பங்கயன் வசிட்டர் சித்தி
பராசமா முனிமகா வியாசர்சீர் சுகர்கௌட
பாதர்கோ விந்த யோகி
யருளுருவ மாஞ்சங்க ராசாரி யாமிறைக
ளமர்பத்ம பாத ருயரத்
தாமலகர் தோடகா சிரியர்வாத் திகர்வித்
தியாரண்ய ராகு முரவோ
ரிருளுருவ மற்றவவர் மரபதனில் வந்தசுப்
பிரமணிய தேவ னயின
வீசனழ கப்பவா ரியன்வீர பத்திரகுரு
வின்பமுத் தைய வடிக
டெருளுருவ மாமுகந் தையனன் மைகளிலாத்
தீயனேன் றனையு மாண்ட
சீர்முத்து ராமலிங் கேசதே சிகனிவர்க
டிகழ்பத மிறைஞ்சு வோமே.

திருநெல்லை அம்மை துணை.

# சுவாநுபவத் திருவாக்கு.

நேரிசை வெண்பா.

தோலா நநமுந் துணைப்பதமு மைங்கரமு
நாலாம் புயமருப்பு நாடியே—மேலோர்கள்
கள்ளமறப் போற்றுங் கணபதியை நன்மனமே
யுள்ள நிலையுறைக்க வுன்னு. 1

கட்டளைக் கலித்துறை.

சத்தே யென்சித்தத் தொளியாய் விளங்குஞ் சதாசுகமே
பத்தே பிறந்து பிறந்தேயிந் நாள்வரைப் பட்டதுன்பக்
கொத்தே யகற்றுங் குருவேபிறக்குங் குணகுணிக்கும்
வித்தே கழனிச் சிதம்பர மென்னும் விநாயகனே. 2

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

முற்பவத்தி லியான்புரிந்த தீவினைகண் முழுதகற்று முகத்தி னானை, யற்பசுகத் தெனையழுத்தா வைங்கரனைப் பிற்பவமு மகற்றுங் கோவைச், சொற்பழுது புரியாத வணிகர்குலந் தினம்பணியுந் துணைத் தாளானைக், கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமா நாயகனைக் கருத்தில் வைப்பாம். 3

## சுப்பிரமணியர் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பையா டரவப் பணிபுனையும் பரமன் றனது திருச்செவியிற், கையார் நெல்லிக் கனியெனவே ககனு ககன மிலதான, மெய்யாம் பிரம மிதுவென்று விளம்பற் குரிய வேலோனே, பொய்யா மொழிய ரிடத்துறைவாய் போற்றி போற்றி மிகப்போற்றி. 4

## திருப்பெருந்துறை.

அறுசீர் விருத்தம்.

தொந்தமுங் கடந்த தூயோர் துதித்திடற் குரிய பாத
மந்தமு நடுவு மின்றி யமர்ந்திடு மம்பொற் பாதஞ்
சந்ததஞ் சுகசிற் சத்தாய்ச் சதோதித மான பாதஞ்
சிந்தனைப் படியே தோன்றுந் திருப்பெருந் துறையான் பாதம்

---

## கொற்றவாளீசர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

கருக்குழியில் வீழ்ந்து கசடருற வாகிப்
பெருக்கமாம் பொய்ப்பொருளைப் பேண-மருக்கமழுந்
தென்கழனி யூரிற் சிறந்தகொற்ற வாளீசர்
பொன்கமலத் தாளிணையே போற்று. 6

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சுவருறையு மோவியங்கள் சுவரே யென்றல்
சுபாவமதி போற்பரத்திற் றோன்று நின்ற
பவமுதலாஞ் சங்கற்ப விகற்ப மெல்லாம்
பரவடிவாய்க் கண்டுபர வடிவ மான
தவருறையுங் கழனிநகர்க் கொற்ற நாதன்
றனதருளாற் பேதமதி நாயி னேனுக்
கிவனவனு னதுவென்னும் பேதமின்றி
யெவ்வுருவுஞ் சின்மயமா யிருந்த வாறே. 7

---

உபாசன மூர்த்தியாகிய

## திருநெல்லையம்மை வணக்கம்.

வெண்பா.

அருவா யுருவா யருவுருவாய் மேலாந்
திருநெல்லை யம்மையுருச் செப்ப—வுருநாம
மாரணங்க ளோத வரியபரா சத்திபெற்ற
வாரணமே தந்தாள் வரம். 8

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆறு றகன்ற பரசிவமா யறிவா யழிவில் சுகவடியாய்
வீறுர் பரிபூ ரணவுருவாய் வெளியாய் நிறைந்த விநாயகனே
நூறு யிரக்கால் வணங்கிடுவா நுவலற் கரிய பூரணியை
யாறு விழிகண் ணீரொழுக வகத்தே துதிக்க வருளென்றே. 9

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஓராறு சமயருளத் துணராய் போற்றி
யுணர்விலியே னுணர்வுதனக் குணர்வே போற்றி
காராரு மிடற்றேனு மயனு மாலுங்
காண்பரிய வொளிபோற்றி கரியே போற்றி
தாராருங் குலிசன்முதற் றேவ ரெல்லாந்
தாவரிய பரஞ்சுடரே தாயே போற்றி
சீராருங் கழனியில்வாழ் சிவையே போற்றி
திருநெல்லை நாயகியே போற்றி போற்றி. 10

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

அருளொடு பரையாய்ச் சிவமய மாகு
மம்மையே யெனதகத் திருந்து

தெருளொடு மருளுந் தியக்கறத் தெளித்த
தெய்வமே யன்பிலே னுனது
திருவடி நிழலிற் றிரிபுடி மறந்து
திரமொடுஞ் சேருநா ளுளதோ
விருளற விளங்குங் கழனியம் பதிவா
ழேகமே திருநெல்லை யம்மே. 11

கண்டதே திரமாக் கவர்ந்திடுங் கருத்தைக்
கழலிணை நிழலிலே யிருத்திக்
கொண்டிட வெனக்கோர் திரமிலை கவரா
திருக்கவு மருளது கொடுப்பாய்
தண்டற விளங்குஞ் சச்சிதா னந்தத்
தையலே சகத்துளோர் களுமே
லண்டரு மிறைஞ்சுங் கழனியம் பதிவா
ழம்மையே திருநெல்லை யம்மே. 12

வேண்டுவ தொழிந்தும் வினையிருள் கடிந்தும்
விழுப்பொரு ளிதுவெனக் கண்டு
மீண்டுறு நாம வுருவெலாஞ் சிவமா
விதயத்தி லுணர்ந்திவை மறந்துங்
காண்டகு நினது திருவடி கதியாக்
கலந்தன ரடியர்யா னின்ன
மீண்டிருந் தந்தோ விடருற லழகோ
வென்னையா டிருநெல்லை யம்மே. 13

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சகலமெனுந் தொந்தமெலாஞ் சிவத்தி னுண்டாய்த்
தனக்கென்ன வடிவின்றித் தானுண் டான

சுகவடிவே வடிவாக விருந்தத் தொந்தஞ்
சுகரூப மாதலநு பவமாக் கண்டு
மகமுடலென் றனுதினமு நாடி நாடி
யகமிதமென் றனவரத நைந்து நைந்து
மிகமிருந்தே மனதுமிக வாடல் கண்டு
மின்னமிரங் காதிருத்த லென்னே யம்மே. 14

ஓராகந் தனையசைக்கு மாவே சத்தை
யொருகர்த்தா வுண்டென்னு தலகில்சொல்லும்
பேராத சோதிடத்தைக் கால மென்னுப்
பித்தாகும் வைபித்தியத்தைப் பிறங்குஞ் சித்
யோராது சடங்களையுந் தெய்வ மென்றே [தை
யுணர்ந்திடுமிம் மார்க்கமெலா முணர்வாக் காணுஞ்
சீராகுந் துணிவுதனை யருள்வாய்த் தெய்வத்
திருநெல்லை நாயகியே யம்மே யம்மே. 15

கொச்சகக் கலிப்பா.

சும்மாவிருந் தறியேன்சுக மிதுவா மெனத்தொடரே
னிம்மாநிலத் துறுகாண்பன விவையே சுகமென்னு
மிம்மாமய றீரும்படி யேழை முகம்பாரா
யம்மாவறி வுருவேதிரு நெல்லை யகமிதமே. 16

பேயாயினுந் தருவிற்கண நிலைபெற் றிடும்பேயி
னேயா துழ றமியேன்மன தொன்றி னிலையின்றி
நோயாலய தனுவாயனு தினநை வதுநோக்கா
யாயேயரும் பொருளேதிரு நெல்லை யகமிதமே. 17

ஏகாவிரு ளகமாயிருந் ததனு லிதமகிதத்
தாகாதிக ளாலேதின மறவுந் துயருற்றே
னேகோவின முனைநானடைந் துய்யும் வகையுளதோ
வாகாவகை யாகுந்திரு நெல்லை யகமிதமே. 18

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வந்தே புவியின் மதியவித்தை
வசமாய்க் காய வசமாக
வந்தே வருத்துஞ் சுகாசுகத்தை
மாய்க்கும் வழியே தெனத்தேடி
வந்தே னுனது திருநெல்லை
மகத்தாம் பதிவந் துன்னருளால்
வந்தேன் வந்தேன் பரிபூர்ண
வனச மலர்த்தா டாளுக. 19

வேறு.

அறிவறியா மைகளிரண்டு மறிபவளை யகமிதமு மாகி யெங்குஞ், செறியொளியா யிருந்தகில சிருட்டி திதி சங்காரச் செயலுள் ளாளைப், பிறிவறியா வடியருளம் பிறங்குமிரும் பூரணியைப் பேதா பேதக், குறியிறந்த நிலையாளைக் குணக்கடலை யருட்குன்றைக் குறித்து வாழ்வாம். 20

ஆசையெனும் விடமகற்று மருமருந்தை யம்பரத் துக் கடங்கா தந்த, வாசகனு மம்பரத்தை யணு வினுக்கு மணுவாகி யனந்த மாகுந், தேசுருவ வடிவாளைச் சித்தமுத லாறறியாத் திறத்தி னாளைக், கோசமெனு மைம்பூதக் குரம்பையுறைந் துறை யாளைக் குறித்து வாழ்வாம். 21

படியளந்த மாலயனு மரனுமென தியானென்னும் பாவத் தாலே, மடியவது வின்றியன வரதமொரு நிலையாகும் வடிவத் தாளை, முடிவறியாப் பெரும் பாழை யகமிதமும் விளக்கியெனை முடித்திட்டாளைக், கொடியமன வேட்கையற வருமரிய பூரணியைக் குறித்து வாழ்வாம். 22

தீங்கிடர்க ளில்லாளைச் சிதம்பரமாம் வடிவாளைச் சிந்தை யாதி, யோங்கிருமூன் றுனை யுன்னரிய வடிவாளை யுணர்வி லேனைத், தாங்குதிரு வுளத்தாளைச் சந்ததந்தன் மயத்தாளைத் தாம மூன்று, நீங்காது விளக்குவளை நெடுங்கழனிப் பதியாளை நினைத்தல் செய்வாம். 23

அல்லலெனும் பிணியகற்று மருமருந்தை யெனதகத்து ளமர்ந்த தாயைச், சொல்லரிய பரஞ்சுடரை யகம்புறமுஞ் சுகமளிக்குந் துரிய வாழ்வைப், பல்லுருவும் படைப்பாளைப் படைத்தவையா யிருப்பாளைப் படையா தாளைச், செல்லாத விருளகற்றுந் திருநெல்லை நாயகியைச் சிந்தை சேர்ப்பாம். 24

## எண்சீர் விருத்தம்

நானவனீ ததுவெனலு மாயி னாளை
  நாடரிய விவற்றகண்ட மாய்நின் றாளை
யானசகம் வரநிமித்த மாயி னாளை
  யதுவொடுபா தானமென வாயினாளை

யீனமன மில்லிதயத் தெய்து வாளை
யீனருளத் திருந்துமவர்க் கெய்தா தாளைத்
தீனமறச் சேடமதாந் திருக்கா வாளைத்
திருநெல்லை நாயகியைச் சிந்தை செய்வாம். 25

வேறு.

வானுடர் மணம்பொருந்தும் வாழ்வுநினை யாதே
மண்ணுடர் பதியடையும் வாழ்க்கைநினை யாதே
நானெனன் றில்வாழ்வி னண்ணியுழ லாதே
நாலிரண்டு சமயநெறி நாடியலை யாதே
யானலு மத்துவித நிலையைமற வாதே
யகம்புறமு மோருருவை யன்றியுண ராதே
தேனுடுங் காவின்மலர்த் தேனுறு பாயுந்
தென்கழனித் திருநெல்லை மின்பாத நாடே. 26

இன்னலுறு முடலிருக்க வெண்ணுமெணம் போது
மிருநான்கு சித்திகளி லிச்சைவைத்தல் போதும்
நன்னயமாஞ் சோதிடத்தி னுட்டமினிப் போதும்
நல்லிரும்பு பொன்னுக்கு நசையதுவும் போதும்
பின்னமுறும் வைத்தியத்தைப் பெறுமாசை போதும்
பேதமுறு மிவைமுதலாம் பிராந்தியினை விட்டுத்
தென்னனுக்கு மலையனுக்குஞ் செல்வியென லாகுந்
தென்கழனித் திருநெல்லை மின்பாத நாடே. 27

பார்க்கவொணு வல்குறனைப் படமெனலும் போதும்
பகரவொணு வூருவினை யரம்பையெனல் போது
மார்க்கவரு மிருகரத்தைக் காந்தளெனல் போது
மக்கிசையுங் கால்கடமை வராலெனலும் போதும்

பார்க்குணிதந் தேய்பதத்தைப் பதுமமெனல் போதும்
பலநாளும் பெண்ணாலே பட்டதுயர் போதுந்
தீர்க்கரிய விவ்வரந்தை தீரும்வழி யாகத்
தென்கழனித் திருநெல்லை மின்பாத நாடே. 28

கட்டளைக் கலித்துறை.

சீரா விருக்கும் பரமான வின்பச் சிறப்படைய
நாரா விருக்க வரவாக் குறித்து நலிவதுபோல்
வாரா திருக்க வுருநாம நாடி வருநலிவு
பாரா திருக்க வரந்தா திருநெல்லைப் பைங்கிளியே. 29

தீண்டா திருக்குஞ் சவம்போ லிருக்குமித் தேகத்திலே
யாண்டாண் டிருந்து மழிந்தோ மதுதிண்ண மாகையினுன்
மாண்டே சனித்தது வாகாம லுன்னடி வைத்ததனை
வேண்டா திருக்க வரந்தா திருநெல்லை மெல்லியலே. 30

விடந்தாங்கு கண்டத்தர் மெய்யினிற்பாதி விடாம லுறைந்
தடங்கா தழகுரு வானவ ளேயடி யேனுமிந்தச்
சடந்தான் சுமந்துஞ் சலியாம னின்பொற் சரணின்மன
மடங்கா தரந்தையுற் றேனபி ராமி யடைக்கலமே. 31

நேரிசை வெண்பா.

உன்னுருவி லிவ்வுலக முண்டா யிருந்தொ டுங்க
முன்னும் பினுமிருந்த மூலமே—பின்னமற
வெவ்வுலகுந் தானு யிருந்தமௌ னத்தலைவி
தவ்வுமனந் தீரவரந் தா. 32

இந்த வுடற்சுமையை யேன்சுமந்து நொந்தலைந்தேன்
பந்தங் கடந்த பராபரையே—சுந்தரியே
வாங்குதற்கு நீயொருத்தி வல்லாளே வந்தசுமை
தாங்குவது மில்லைமெய்தந் தால். 33

சித்த மிரங்கிலையோ சீர்நெல்லை நாயகியே
நித்தந் திருவடியை நீங்கினனோ—சத்தமுதற்
பஞ்சவிடயப் பழம்பகையைத் தீர்ப்ப தென்றோ
துஞ்சுமுட றீர்வதென்றோ சொல். 34

இன்னங் கிருகப் பிரவேச மெய்தாமன்
முன்னம் புகுந்தபுர மேமுடிய—வன்னமே
யன்ன மளிப்பா யதுவின்றேற் சூழ்காடி
யென்னத்தாற் பேத மெனக்கு. 35

தொன்று வருமாயா துவந்துவமாஞ் சொப்பனம்விட்
டென்று தொலையுமெனக் கென்றாயே—யன்றுவரை
நஞ்சுண்டோன் போலிருந்து நான்மெலிந்து வாடுதலிற்
றுஞ்சித் தொலைதல் சுகம். 36

ஆகாத விவ்வுடலுக் காருதவி யம்மம்மே
போகாத துக்கம் பொருந்தியிடி—லோகோகோ
வுன்னை நினைத்தறிண்ண முன்னருளா லிவ்வுடம்பு
பின்னப் படுவதென்றோ பேசு. 37

சுற்றத்தா ரின்னந் தொலைந்தா னிலையெனவே
பற்றற்றே னைந்திருத்தல் பண்பாமோ—கொற்றனுடல்
பாதி பரித்திருக்கும் பண்ணவியே யுன்னையடைந்
தீதிருக்க ஞாய மிலை. 38

இருப்பதுபோ லேகரையு மிவ்வுடம்போ டென்று
மிருக்கச் சகிக்க விலையென்று—யுருத்தெரியா
திவ்வுடலி னீயிருந்த தின்றறிந்தே னின்னமெனக்
கிவ்வுடலா லெப்பயனு மில். 39

தன்னைமறந் துன்மத்தன் றனடிக்க வந்ததுபோ
லென்னைமறந் தித்தேக மெய்தியதே—யின்னமிதாய்ப்
போவதழ கோவுனது பொன்னடிக்கே யாளாக
வாவ தழகோ வறை. 40

இராகத் துவேடமுடன் யானுக்கை யோடிருந்து
மோகப் பிசாசாய் முடிவேனோ—பாகமற
வெங்குஞ் சிதம்பரமா யின்புருவா முன்வடிவிற்
றங்கி யிருக்கவரந் தா. 41

சருமாதி யாரோடுஞ் சந்ததநா னாக
மருமையென வெண்ணி யலைவேனோ—வொருமையுட
னல்லலெல்லா நீக்குமுன தம்பொற் றிருவடியிற்
புல்லுவது மென்றோ புகல். 42

அவ்வியமாய் நீங்கா வரந்தைசட மேவடிவா
மிவ்வுடம்போ டின்னு மிருப்பேனோ—பவ்வமற
வுன்னோ துரையாதே யுள்ளமழிந் துன்னுருவாய்ப்
பின்னமற நிற்பதென்றோ பேசு. 43

என்றும் பிணியுளதா யெந்நாளு நைவுளதாய்ப்
பொன்று முடன்மயமாய்ப் போவேனோ—நன்றுதீ
தாமென் றுணர்வரிய வம்மையின தம்பதத்தி
லேமுறவே யானிருப்ப தென்று. 44

மெய்போ லிருந்தழியு மின்போலும் பொய்யுடலை
மெய்யாக வெண்ணி மெலிவனோ—வையோவீ
தென்னமய லைவைத்தா யின்ன மிரங்கலையோ
வுன்னுருவே நானாக வுன்னு. 45

பாருளோ ரெல்லோரும் பார்த்துநிந்தை பண்ணுமிடஞ்
சோருமனத் தோடிருந்து சோர்வேனோ—சாருமிட
மின்னதெனச் சுட்டறிவோ டெய்திலரி தாந்துரியந்
தன்னிலியான் சேர்வதென்றோ சாற்று. 46

நாறுமுட லியானெனவு நாடுமனை யென்னதென்று
மாறுபட வெண்ணி மயங்காதே—தேறரிய
வம்மை திருநெல்லை யம்போ ருகவடியை
யிம்மையிலே நாடி யிரு. 47

ஆறாறும் பொய்யா மதிற்பயனும் பொய்யாகு
மாறாறும் பொய்யா வறிவதும்பொய்—யாறாறு
கையானைத் தந்த கழனித் திருநெல்லை
மெய்யா மவள் சரண மேவு. 48

அன்புசற்று மில்லாத வாயிழையார் மாமாயைத்
துன்பமுற்ற வாழியிலே தோயாம—லின்பரசத்
தேனார் கழனித் திருநெல்லை யம்மைபத
நீநாளு நெஞ்சே நினை. 49

ஆறாறு நாடுமிடத் தப்பாலுக் கப்பாலா
யாறாறு மோடி யறிவரிதா—யாறாறுங்
காணற் கினனாகுங் காரணியைக் கன்னெஞ்சே
பேணற் குறித்தாப் பிடி. 50

பிடியா யகநாட்டம் பேறுகு மின்பம்
விடியா விருள்போய் விழிப்பா—மடியந்த
மில்லா வெளியா யிருந்த படியிருக்க
நில்லா யதுவே நிலை. 51

நிலையாமோ வில்ல நிலையாமோ செல்வ
நிலையாமோ மைந்தர்மனை நெஞ்சே—நிலையாமோ
வாகங் கரணுதி யத்தனையுஞ் சொப்பனமென்
றேக நினைவா யிரு. 52

இருக்கா திகடோர்ந்து மின்புருவாந் தேவி
திருப்பாதஞ் சேருந் திறமாப்—பெருக்காகச்
சொல்லி னெறிகற் றுருவனிடம் போயிடினு
மல்லலற மாட்டா தறி. 53

அறிவே திருவுருவா மம்மை சரணுப்
பிறியாது நின்றார் பெரியோர்—குறியாது
நின்றுயென் னெஞ்சே நெடுநாளியா னென்னதென்று
நன்றே சிவைவடிவை நாடு. 54

நாடிப் பொறிகளைந்தி ஞடோறு நாணும
லோடி யெடுத்தபல ஞென்றென்றே—கேடுதரு
முற்பத்தி நாசமுட ஞேகோகோ துக்கசுக
மற்பமல வெண்ணிறந்த வாம். 55

ஆமே யவாவறுத்த லாமே யரந்தையொழி
வாமே யிரண்டுவினை யற்றிடுத—லாமேகாண்
வாசி யகமிறத்தல் வந்துவிடும் பேரின்பஞ்
சீசீ யகமுகமே செல். 56

செல்லா யிடர்நெஞ்சே தீநெறியி னூடோறுஞ்
செல்லிற் குறைபோந் திறமுண்டோ—நல்லோர்க
டேடற் குரித்தான தென்கழனி யம்மைபதங்
கூடி லுனக்கென் குறை. 57

---

## பஞ்சாக்கர நாயகி வணக்கம்.

கட்டளைக் கலித்துறை.

கண்ட பொருளல்ல காணும் பொருளல்ல கண்டபொருண்
மண்டு மிருளல்ல மாயு மொளியல்ல மன்னுமொளி
பண்டென் பதமல்ல வின்றென்ப தல்ல பராபரமா
மண்ட மடங்க வடங்காப் பெருவெளி யையுளியே. 58

---

## கொப்புடையாள் வணக்கம்.

அறுசீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பின்னு பின்ன மொன்றிலதாய்ப் பெரிதாஞ்சத்தா சத்திலதாய், முன்னு நின்ற நிரவயமாய் முடியா திருந்த சாவயமாய்ப், பன்ன வேது மில்லாமற் பகரு மநுடக் கொம்பாகு, மன்ன மாயை தனையகற்று யம்மே கொப்பை யுடையாளே. 59

மூர்க்க ரிணக்கந் தவிர்ந்திடென முன்னே யுரைத்த மாற்றமதைப், பார்க்கி லுலகத் தொருவ ரிலை * பாவி மனமே மிகமூர்க்கன், றீர்க்கு முனது பதமகன்றே தீன விடயத் தழுந்துகின்ற, தார்க்கு முயிரே யிதையகற்று யம்மே கொப்பை யுடையாளே. 60

---

* பாவிமனமே மிக மூர்க்கம் என்றும் பாடம்.

ஆலோ னிறந்து முமைபாகத் தண்ண லிறந்துங் கமலமுறை, நாலா னனத்தோன் முடிந்திறந்து நாரதாதி யோரிறந்துங், காலா திகளு மொழிந்திறந்துங் ககன மாதி யழிந்திறந்து, மாலோ கங்களிறந்துநின்று யம்மே கொப்பை யுடையாளே. 61

வே று.

ஓங்குதனி மருப்பானை யொருபாகன் கைவசமா யுழன்ற தந்தோ, தூங்குபனைக் கரசயிலந் தனைப்பாக னெற்றாலோ துன்பஞ் செய்தான், றூங்குமிரு நிலத் தின்வினை யிரண்டென்னும் வல்லியினாற் றகைத்துப் பின்னு, மோங்கிவள ரிச்சையெனுந் தாம்பதனான் மலக்குகையி லிறுக்கிக் கட்டி, 62

நல்லறிவு முதல்வீர மெலாமடங்க நாரியரா நாகங் கவ்வ, வல்லையினிற் செலுத்தியபின் மகத் தான பெருந்தன்மை மறக்கப் பொல்லாப், புல் லறிவா மங்குசத்தான் மத்தகத்தி லடித்தடித்துப் புன்மை செய்ய, வல்லலுறு மக்கயந்தா னியாதென் னில் யானுகு மந்தோ வந்தோ. 63

அப்பாகன் யாரென்னி லஞ்ஞான மென்பவனே யவனை வெல்ல, விப்பாரி லெவ்விடத்துச் சென்றாலு முனையன்றி யேதுங் காணே, னொப்பாரு மில்லாளே பூரணியே காரணியே யோங்கு மேன்மைக், கொப் பாளே யுன்னிடத்தில் வந்தேனென் பகை நீங்கக் குறிக்க வேண்டும். 64

வே று.

தூசே தரிக்கி லொடியுமெனுஞ்
சொல்லே புனேயுந் துடியிடையா
ராசைச் சுமையைச் சுமக்கவெனக்
கந்தக் கரணச் சும்மாடு
மாசி லாளே நீதந்து
மாருச் சுமையாச் சுமக்கவைத்தா
யாசா மிந்தச் சுமையிறக்கா
யம்மே கொப்பை யுடையாளே. 65

உன்னேக் கதியென் றடையாம
லோகோ வுலக வாஞ்சையிரு
லென்னே யிற்றை நாள்வரைக்கு
மிழிவாந் தொழிற்கே யிழுத்தல்கண்டாய்
பின்னே யெனக்கோர் கதியில்லே
பேசா திருந்தா லென்செய்வே
னன்னே யிந்த மதியகற்ரு
யம்மே கொப்பை யுடையாளே. 66

நேரிசை வெண்பா.

அப்பாய் நிலமா யனலாய் வளியாகிச்
செப்புங் ககனமாய்ச் சித்தாகிக்—கொப்புடையா
ணின்ற நிலேயறியா நெஞ்சகமே யேன்பிறந்தாய்
பொன்று முடம்புறவோ போ. 67

## விஷ்ணு வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

நடந்து விடுங்கா ணிருவினைக
ளாரா யணாய நமவென்னி
னடந்து விடுங்காண் பிறப்பிறப்பு
நாரா யணாய நமவென்னி
னடந்து விடுங்காண் பகையுறவு
நாரா யணாய நமவென்னி
னடந்து விடுங்கா ணகங்கரப்பேய்
நாரா யணாய நமவென்னில். 68

இருபத்தெண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆசுற்ற குருதியது வீசவே சருமம
தடர்ந்தது திரண்டு வீழ
வத்தியது முண்டுமுண் டாகவே நின்றதுவு
மனவரத மெனே யுறுத்த
நாசத் தசைகளவை மாசுச் சுமையாகு
நடுமச்சை யூழ னுறு
நாஞச ஞயுவவை யூனை தைச்சுற்று
நாடிற் பழிப்பா குமே,
யோசைத் தொழிலாதி யோரைந்து புள்ளுக்கு
முறைகின்ற கூட தாகு
மோரொன் பதுவாச லீரைந்து வாயுக்க
ளோடித் திரிந்து லாவுங்
கேசப் புழுக்களவை கூடிப்ப லவுண்டு
கிருமிக ளனந்த கோடி

கீழ்வாச லோடிவரு மேல்வாச லேறியது
கீழேவி ழுந்து நெளியும்,
வாசிக் குரங்கென்ப தோடிக்கு தித்திடவும்
வன்பான தருவ தாகும்
வானத்தி னீலமென மேகத்தின் மின்னலென
வாரியதின் மொக்கு ளெனலா
மூசச்ச தாநாறு மாசுற்ற மலமென்ப
தொழியா திருக்கு மிடமா
மோங்குகக னத்தினிடை பாங்கான விந்திரதனு
வுண்டாயொ டுங்கல் போலா,
மாசைக் கழுகென்ப தோடிப் படிந்திடவு
மசைவற்ற கட்டை யாகு
மாங்கார மென்றமுனி வாங்கா திருந்திடவு
மாலயம தாகு மிந்த
நீசத் தொழிலுடைய பாவக்கு டிலிதுவை
நினையா தகற்ற நினைவாய்
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 69

விஞ்சுநா கப்பதுமம் வந்ததென வெப்பொழுதும்
வீயாத சித்தி னிடமாய்
வெளியாகி யல்லல்வடி வாகியே சந்ததமும்
வேறாகி நின்ற மனதே
வஞ்சத் துவம்பேசு மிஞ்சத்தொ டார்ந்தோடும்
வன்பாச கூவ முறையும்
வாராதி லிச்சையுமுன் வந்ததில னிச்சையும்
வைத்துநித மாயு மாயுஞ்,

சஞ்சலம தாகவே பஞ்சப் புரங்களவை
தம்மில்விளை யாடி நிற்குந்
தானேசெ காகிருதி யாகியே நிற்குமிது
தானேசெ கத்தை யெல்லாந்
துஞ்சும் படிச்செய்யு மிங்கார் தடுப்பரிது
. சொன்னமலை தூக்கி விடலாஞ்
சுழல்கின்ற வுததியும் பருகலாம் வெங்கனற்
றெட்டேவி மூங்கி விடலா,
முஞ்சலென வுலைகின்ற நெஞ்சமதை யொருவரு
முழலா தடக்க வரிதா
மோகோ விதன்பெருமை யொன்றோ வனந்தவித
மொருபிரம சாக ரத்தி
னெஞ்சுருவ வயனாதி யானவிவ் வகிலமெனு
நேரான திரைக ளாக்கி
நிமிடத் தழித்துவிடு மிந்தவலு மனதைநா
னிலையா தறுக்க வெளிதோ
கொஞ்சத் துவமான தஞ்சுகொடி கட்டுவது
கூடாது கூட்டு விக்குங்
குறையன்றி நிறையாது மறை சென்ற வழிசென்று
குறையாத தாகு மிந்த
நெஞ்சப் பகையுமித னஞ்சுத் தொழில்களையு
நிலையா தறுக்க நினைவாய்
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச் சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 70

வாங்காது சீறுபணி தாங்காது கிட்டினரை
வாய்நின்ற தந்த மதனால்

வன்பாய் நலிந்தவுடன் முன்பாய் நடந்தகதி
மாண்டுவிட மேல தாகித்
தாங்காது வந்துவிட மோங்கா திறங்குபடி
தக்கதொரு மந்தி ரங்க
டம்மா லழிப்பதென வென்னையொரு பெண்ணரவு
தாவிக் கடித்த தந்தோ,
வாங்கால நீங்கிவிடி லழிகாலம் வருவதென
வந்தோ வடர்ந்த விடமு
மடியான வதுதொட்டு முடிவரையு மிகவேறி
யல்லலொடு போரா டுதே
யீங்கார் பொறுப்பரிதை யென்று லிறக்கரிது
லிந்தவிட மாற்ற வுரியா
ளிவனென்ன வெண்ணியுனை யின்றடைந் தேனிந்த
விடையூறு ரூப மாகி,
நீங்காத காமனுயிர் தாங்காது கொல்வனவ
னிந்தையை யறுக்க நினைவாய்
நினையா திருந்துவிடி லெனையா தரிப்பதெவர்
நீதா னொருத்த னின்றிப்
பாங்கான தந்தையிலை நீங்காத வன்னையிலை
பார்க்கிலுற வொன்று காணேன்
பட்சத் துடன்றேடி ரட்சிப்ப துன்னுடைய
பாரமிதி லைய மில்லை,
தூங்காது தூங்குவது தாயோர் தமக்குளது
சொல்கின்ற காம னுடனே
தூங்கப் பிறர் செல்வம் வாங்கக் கொடிக்கட்டிச்
சுற்றிச் சுழன்ற வென்னை

நீங்காத வுன்னருகில் லெந்நேர மெப்பொழுது
நிலையாக வைக்க நினைவாய்
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 71

ஆரொருவ ரிணையற்ற சீருடைய வத்துவிடை
யாங்கார மென்ற வலகை
யல்லிற் பழுதையிடை பல்லிற்கொ டியவிட
வரவுவரு மாறு வந்து
சீருடைய வேதத்தை யாராய வஞ்சமது
தீரர்க ணடப்ப தெல்லாஞ்
சிறுமையென வெண்ணியே தன்னுடைய தொழிலையே
திரமாக வெண்ணி நாடிப்,
பேர்பெரிய ரென்னுநஞ் சீர்பெரிய தென்னுநம்
பேராத வாழ்வ தென்னும்
பெண்ணிலொரு மலடிகைப் பிள்ளையெனும் ரூபமாய்ப்
பிரித்தறியி லில்லை யாகு
நேரான வகிலத்தி லுறைகின்ற சீவர்களை
நிலையா தலைத்து விட்டு
நீநா னெனப்பேசி யானுத துன்பமதி
னிமிடத் தழுத்து விக்கு,
மாரோ விதற்கிந்த வனியாய வதிகார
மளித்திட் டகன்ற தந்தோ
வாவா விதன்பெருமை யயனாதி தேவர்களு
மறியவரி தாகு மாகும்
பாரதனி னம்மைவிட வார்பெரிய ரென்றுமிகு
பாழான நட்ட மிட்டுப்

பங்கேரு கன்பாலு மங்கேச வன்பாலும்
பாராதி கொல்வ னிடமுஞ்,
சாராது சார்ந்தவர்க டமைமயக் காதுறையுந்
தமியே னுளங் காணியாய்த்
தன்னரசு நாடுபெற் றென்னையு மயக்கியது
தாழ்விக்கு நரகி லிந்த
நேராத ராவணனை நின்கருணை யம்புகொடு
நிலையா தறுக்க நினைவாய்
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 72

பண்டில்ல மேவியதி லுண்டான தொழில்களவை
பண்பாய் நடத்தி வருகிற்
பரிவான தந்தையனை மக்களொடு சுற்றமிவள்
பாரியென வந்த விந்த
வண்டக் கயவருட னென்றிடிற் சந்ததமும்
வலுநரகில் வீழ்வ மென்று
மனதிலொரு மித்திதனை விட்டுநா மோட்சமடை
மார்க்கமெது வென்று தேடி,
யண்டரொடு முனிவரரு மேத்தற் குரித்தான
வருளுருவ மான குருவுக்
கன்பென்னு மலரெடுத் தர்ச்சனை நிதஞ்செய்து
வடியிணைகள் போற்றி நின்று
தொண்டரென வவரேவ லெப்போது முடிசூடித்
துகளற்ற சித்த னாகித்
தூய்தான குரவரவர் சித்தபரி பாகமது
சோதித் தறிந்து பின்பு,

கொண்டாடி யிவருக்கு வானவரு மறிவரிய
குறைவற்ற பொருளை யீயக்
குணமதுடன் வாங்கியதை யிப்புருட ரானவர்கள்
கோதின்றி நின்று மதனைக்
கண்டார்க ளிந்த வித நாயிற்க டையான
கசடனிறு மாப்ப டைந்து
கண்கெட்ட பகடாகி யனவரத மாதருடை
காலிடைக டேடி நைந்தும்,
வெண்டிங்கள் வதனமுடை மின்னார்கள் சொன்னபடி
விலகாது செய்து நின்றும்
வெகுகால மிந்தவிதம் வீணாள் கழிக்கின்ற
வினையேனை யாள்வ தென்றோ
ஞெண்டுபோ லலைவுற்ற மனமிலா வடியாக
நீங்கா திருந்த வறிவே
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 73

ஓரில்வரு பூதங்க ளோரைந்து மனமாதி
யோரைந்து சத்தா தியா
மோரைந்து வாக்காதி யோரைந்து பிராணாதி
யோரைந்து சரும மாதி
நேரிலிரு மூன்றாகு மிவைமூன்று பத்தொன்று
நிகழுபிர மாதி யைந்து
நிகழுமிவை யாறுறி னிச்சயம தொன்றாகு
நிலையாத வேழைந் துமாம்,
பாரிலொரு சற்புருடர் சீரிலிவை யேழைந்தும்
பாழென வறிந்து விட்டுப்

பதியான வொருபொருளை மதியா லறிந்துணர்வு
பற்றிநிலை நிற்பரம மாஞ்
சீருடைய சின்மயனை மேருவென வசையாத
சித்தாந்த மான பொருளைத்
தீரா டமக்குரிய மூடா டமக்கரிய
சின்மயா னந்த வடிவை,
யாருமறி யாதபொரு ளாய்நின்ற பேரறிவை
யண்டபகி ரண்ட நிறைவை
யத்துவித மானவனை யெத்திசையு நின்றவனை
யணுவி லணு வாகினனைப்
பேரா திருந்தபரி பூரணம தாகின்ற
பேச்சற்ற மோன வடிவைப்
பெற்றும் பெருமலே கத்தித் திரிந்துநான்
பெரிதான குருட னாகி,
யாரொருவ ரிணையின்றி நாரிவச மெந்நேர
மல்லுபக னட்ட மாகி
யலைகின்ற வீனனுனை யென்றைக் கடைந்துநிலை
யதுவாவ தெந்த நாளோ
நேரொருவ ரில்லாத பேரறிவு தனுவான
நின்மலா னந்த மயனே
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 74

ஆழமொரு மட்டின்றி நீளமதி லக்கின்றி
யகலங் கணக் கற்றதா
மறிவென்ற வானந்த வாரியினி லனவரத
மயனாதி முனிவோர் களு

மாழியொரு சத்தவித மென்பனவு மட்டகய
மவையோ டுமோதி சேட
னகிலாண்ட பிண்டங்க ளாகாய வீதிவரு
மாதபனும் வெண்டிங் களுந்
தாழ்வொன்று மில்லாத வட்டகுல வெற்புமொரு
தடையற்ற ககனு தியுந்
தண்ணென்ற கங்கையது முதலான நதிகளுந்
தாழ்வற்ற துருவ விறையுங்
கீழான சரவசர வுயிர்கள்பல யாவையுங்
கெம்பீர வுததி தன்னிற்
கிளர்கின்ற வலைகள்போற் றேன்றியே வருமிவை
கிளத்தவொரு வேது வற்று,
வாழ்கின்ற விவையலைகள் போலவே தோன்றியதின்
மாயுமென வேத மறையில்
வந்தவொரு வயனுதி முந்தவா னந்தகன
மயமாவ தைய மில்லை
பாழான துன்பமதி லாழும்பி ராந்திகொடு
பார்க்கிலிப் போது சுகமாம்
பண்டையுண் டானசுக மதின்மீண் டடங்குமது
பார்க்கிலப் போது சுகமாங்,
கேழ்கிளரு மிந்தநெறி நில்லாது தேகமது
கெடுகாலம் வந்த போது
கீழான புத்திகொடு துன்பமய மாகியுங்
கெட்டே னெனப் பகர்ந்து
நீழலென வறியாது வீணுட் கழித்தவெனை
நின்னடிய ருக்க நினைவாய்

நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 75

நிர்ச்சீவ ஞகியக றற்போத மாகிநவி
னிர்நாம ரூப ஞகி
நிர்லேப ஞகிநித நித்தியா னந்தமெனு
நிராதார மோன வடிவாய்
நிர்த்தோஷ ஞகியனு வாகியே யெப்பொழுது
நிஷ்கிரிய ஞகி நின்று
நித்தியாப ரோட்சமாய் முக்கால ரகிதமாய்
நிரவயவ மான பொருளாய்,
நிர்க்குண விலாசமா யெச்சருவ கதஞகி
நிருபத்திர ஞகி நின்று
நிரிந்தியா காரமாய்ப் பொருந்தலரி தாகிய
நிரானந்த ரூப மாகி
நிஷ்கார ணஞகி யப்பிரவிர்த் தஞகியே
நிர்விஷய சுத்த ஞகி
நிறைவான விபுவாகி யசலஞ யகேயஞய்
நிரஞ்சஞ னந்த வறிவாய்,
நிர்மலா னந்தஞ யெம்மாசு ரகிதஞய்
நீண்மன தகோ சரமதாய்
நெஞ்சமொடு தெவ்வற்ற தேகமொரு ரூபமாய்
நிரதிசய மான பொருளாய்
நிர்ச்சங்க வடிவமா யெச்சங்க நாஸ்தியாய்
நீங்கா தசத்து வடிவாய்
நெடிதான திருசிய வதீதஞ யனவரத
நிர்மூட வஸ்து வடிவாய்,

நிர்ப்பூத வாகமா யெப்போது மழியாது
நிலையான பிரம வடிவாய்
நீநா னெனக்கூறு பேதமது வின்றியே
நிர்த்தொந்த மான பொருளாய்
நிர்த்தரங் கப்புணரி யாய்நின்ற ராமனே
நீசனையு மாள்வ தென்றோ
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
நீண்மா யையுடை மாயனே. 76

அறிகின்ற விசுவாதி யபிமானி மூன்றெனவு
மாகமொரு மூன்று வது
மவத்தைதிரி விதமெனவு மாகநவ விதமான
வவையோடு கூடு புருடன்
பிறியாத விடமுதற் பதவாச்சி யார்த்தமாம்
பேராத வுயிரி லட்சியம்
பேதமது வின்றிய விராட்டாதி மூன்றுதநு
பெரிதாஞ் சிருட்டி யாதி,
யறைகின்ற மூன்று மவத்தையொடு வைசுவா
னரனாதி யான மூன்று
மபிமானி யாமென்ப ராகநவ விதமான
வவையோடு கூடு மீச
னறைகின்ற திவைநடுப் பதவாச்சி யார்த்தமா
மழியாத பிரமம் லட்சிய
மாதார பரனாதி யானவொரு மூன்றனையு
யபிமானி யாகு மென்பர்,
நிறைகின்ற சர்வசுக மாதியா மூன்றனையு
நிலையா மவத்தை யென்பர்

நீங்காத வஸ்திபா திப்பிரிய மூன்றுமிவை
　　நிகழுஞ் சரீர மென்ப
ருறைகின்ற விந்தவித மென்பதுட னுங்கூடு
　　மொருபரப் பிரம மென்ப
தொன்று யிருந்தவசி பதவாச்சி யார்த்தமா
　　மொருசர்வ சாட்சி லட்சிய,
முறையா லெடுத்திங்ங னைறமூன்று வாச்சியமு
　　முழுமித்தை யென்று தள்ளி
மூன்றான லட்சியமு மொன்றென வறிந்துபினு
　　மோனத்தி லவையும் விட்டு
நிறைகின்ற பூரணம தாகின்ற வாரியர்க
　　ணிலையிலெனை வைக்க நினைவாய்
நிர்ச்சுதந் தரமாகு மெய்ச்சுதந் தரமாகு
　　நீண்மா யையுடை மாயனே. 77

---

## போற்றி சங்கீர்த்தனம்.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

அந்நாளி விராக்கதரை யறுத்தாய் போற்றி
　　யம்பரத்தி லும்பர்களுக் ககமே போற்றி
யிந்நாளி லெனதகத்துட் டிமிர வீன
　　மீடழிக்கக் கோடியின னுனைய் போற்றி
பன்னாளு மடியார்கள் பவத்தை நீக்கும்
　　பரிசாகத் திகிரிக்குப் பணித்தாய் போற்றி
நன்னாளு மிடர்நாளு மடியா ருக்கு
　　நற்சுகமா மென்றுசங்கை நவிந்தாய் போற்றி. 78

எவ்விடமு மசுத்தமென வெண்ணி நீயு
 மெழுவாரி தனிலொன்றி லிருந்தாய் போற்றி
யவ்விடமு மசுத்தமதாம் பிரள யத்தி
 லழிவதினு லெனவெண்ணு மய்யா போற்றி
யிவ்விடமு மிப்படியோ வென்று விட்டே
 யிரவுபக லற்றவகத் திருப்பாய் போற்றி
யவ்விடமே யெல்லாமாய் நின்ற தாலே
 யதற்கசுத்த மிலையென்றே யமர்ந்தாய் போற்றி. 79

ஆனைகண்ட குருடரைப்போ லறிந்த பேர்க்கு
 மப்பாலா மேகனு மறிவே போற்றி
தானையது விரணியத்தாற் றரித்தாய் போற்றி
 சராசரமா முலகமெலாந் தந்தாய் போற்றி
யானையதின் கோடதுபோற் கொங்கை யுள்ள
 வணிமடவார் வாஞ்சையெலா மறுப்பாய் போற்றி
யூனையபி மானித்தே யுழல்வேன் றன்னை
 யொப்பிலா வுனக்கேயா ளாக்காய் போற்றி. 80

காண்பானுங் காண்பவையு மானுய் போற்றி
 கருத்தனுமொண் கருமமுமாய் நின்ருய் போற்றி
பூண்பானும் பூண்பனவு மானுய் போற்றி
 பொல்லாத மயையிலாய் புணர்ந்தாய் போற்றி
மாண்பான மாயவனுய் நின்ருய் போற்றி
 மகாசூர குலாந்தகனுய் நின்ருய் போற்றி
வீண்பயிலும் விழற்கிறைத்து வீணு டள்ளும்
 விரகிலேற் கருள்புரியும் விறலாய் போற்றி. 81

ஓருருவாய் மூவுருவா யுறைந்தாய் போற்றி
யும்பர்கடம் பெருமானே யுயிரே போற்றி
காருருவாய் நிறைந்தபெருங் கடலே போற்றி
கண்முதலாம் பொறியாலுங் காணாய் போற்றி
பாருருவாந் தந்தியது பதைத்த போது
பதைப்பறவே யங்கராப் படுப்பாய் போற்றி
யாருமறி யாதவிட மகமாய் நின்ற
வாதவனே யடியனையாள் போற்றி போற்றி. 82

மனமாதி யாருறு மதியா தான
மாயோனே மகத்துக்கு மகத்தே போற்றி
யினனாதி புழுவரையு மிருப்பாய் போற்றி
யிருக்காதி வேதங்கட் கெட்டாய் போற்றி
யினமாகி யயினமுமாய்ப் பேரா தாகிப்
பேச்சிறந்து பிறங்குகின்ற பிரானே போற்றி
கனமான வரக்கரெலா மடியற் றேகக்
கைப்பாண மெடுத்தெய்த காரே போற்றி 83

*திறிபுடியாந் திமிரத்துக் கப்பா னின்ற
திவாகரனே யடிபோற்றி திருக்கே போற்றி
யறிவறியா மையுமாகி யதீத மாகு
மப்பனே பூரணமா மருளே போற்றி
தறியாகு மாகமதை யசைத்தல் செய்யுந்
தயாபரனே யடிபோற்றி தமரே போற்றி
குறியாது குறித்தறியும் பெரியோ ருள்ளக்
கோகனகத் துறையளியே குரவா போற்றி 84

---

* கீழ்வரு மெதுகைநோக்கித் திரிபுடி என்றது திறிபுடி யென்று மருவிற்று.

அன்பிலா மான்மருப்பை யடியோ டீர்த்தே
யன்பான வாரணத்தை யளிப்பாய் போற்றி
புன்புலால் வீசுகின்ற புரங்க டங்கும்
புல்லறிவுக் கெட்டாத பொருளே போற்றி
முன்பனாய் மூன்றுலகும் புரக்கா நின்ற
முகுந்தனே யடிபோற்றி முதல்வா போற்றி
தன்பெருமை யறிந்துணர்ந்தோர் சகாயா போற்றி
தனக்கிணையொன் றில்லாத தனுவே போற்றி. 85

அன்றாலிற் றுயின்றவனே யடிகள் போற்றி
யைம்பத்தோ ரக்கரங்கட் கதீதா போற்றி
நன்றானுந் தீதானு நலியா தான
நாரணனே யுனதுபத நளினம் போற்றி
பொன்றாத பிரமனுக்குந் தந்தை யாகும்
புனிதனே புயங்கவணை துயின்றாய் போற்றி
யென்றாதை யன்னையுடன் சுற்ற மாகு
மெழிலான சீதரனே யிறைவா போற்றி. 86

கல்லாத கயவருறு கூட்டந் தன்னிற்
கலந்திருந்த வெனையழைத்த கரமே போற்றி
செல்லாத மாயையிருண் மயக்க மெல்லாஞ்
சீரணிக்கத் திறந்தந்த திண்டோள் போற்றி
வெல்லாத பகையுறவு வெல்வ தற்கு
விழிக்கருணை தந்தவொரு விமலா போற்றி
மல்லாரு மரவமெனுங் கொடியோன் றன்னை
மாயாது மாய்த்தவொரு வள்ளல் போற்றி. 87

## இடையிடையிற்றனிச்சொற்பெற்ற
## விரண்டடிக் குறட்டாழிசை.

செல்வச் செருக்கில் றிரமா வழுந்தினேன் ராம ராம—இது
தீர்வது மில்லை திருவரு ளன்றியே ராம ராம
பல்வழி சொல்லிற் படர்மத மேறுதே ராம ராம-நின்
பார்வைய தன்றிப் பகர்மதந் தீராதே ராம ராம. 88

உற்பத்தி நாச வுததி யழுந்தினேன் ராம ராம-இதற்
குன்னரு ளன்றி யொருவங்கங் காணேனே ராம ராம
வற்பத்தி லாசை யனுதினங் கொண்டேனே ராம ராம-இந்த
வாசைப் பிசாசுன் னருளன்றி நீங்காதே ராம ராம. 89

அன்னை யுதரத் தவஸ்தைகள் பட்டேனே ராம ராம—இனி
யாற்றேனே நீயவை யற்று விடவேண்டும் ராம ராம
பின்ன வபின்னப் பிணக்கதற் காளானேன் ராம ராம—இந்தப்
பின்ன முனதரு ளன்றிப் பிரியாதே ராம ராம. 90

நீங்காக் கருவி நிபங்க ளொழிந்தவே ராம ராம-உன்
னித்திய மான நிலைய தடைந்தால் ராம ராம
வாங்கார மென்னு மலகை யகன்றதே ராம ராம-நின்
னுதார மான வவிழ்த மருந்தவே ராம ராம. 91

உண்டே யுறங்குவ துண்மையா நம்பினேன் ராம ராம—நின்
னுண்மை யறிய வொழிந்தவை நீங்கின ராம ராம
பண்டே யிருந்த பயங்க ளொழிந்தன ராம ராம-நின்
பாத மலரிற் பணிந்த திடத்தினல் ராம ராம. 92

## சொரூப வணக்கம்.

*அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

இந்த வுலக சராசரங்க ளியாவ னிடமாத் தோன்றி யிடு, மிந்த வுலக சராசரங்க ளியாவ னிடமா விளங்கி யிடு, மிந்த வுலக சராசரங்க ளியாவ னிடமா வடங்கி யிடு, மந்தமூல முதற் பொருளை யகத்தெந் நாளும் வணங்கிடுவாம். 93

எண்ணற் கரிய சித்திரமோ ரேக படத்தி லிருப் பதுபோற், பண்ணற் கரிய சீவேச வுலக மிருக்கும் பரவிசும்பே, மண்ணைப் புனலை யனல்காலை வானைத் தருசங்கற்பசத்தி, நண்ணிப் பொருந்து மூன்றவத்தை நாளும் விளக்குஞ் சின்மயமே. 94

சுட்டு மறிவு கெட்டசுக சமனுந் துரியநிலை மேவி, யிட்டத் திருந்த தன்மயத்தோ ரிதயாம் பரத்தி லிலங் கொளியே, யெட்டுத் திசையோ டண்டமெலா மெங்கு நிறைந்தீ தெல்லா மாய்த், துட்டக் கருத்திற் றூரம தாய்த் தூயோர்க் கணித்தாந் தொல்பொருளே. 95

இங்கே சரிக்கு மெறும்பாதி யெண்ணம் பகத் தோனீறிதயத், தங்கங் கிருக்குந் தற்சாட்சி யான வகண்ட பூரணமே, கங்கே யிழுக்கும் வெறும்பிணம் போற் கனகமனைவி கான்முளையோ, டிங்கே குடும்பச் சுமையிழுப்போரிதயத் தெட்டா விரும்பொருளே. 96

எல்லா மிறந்த நிலையாகி யானு யெனது கற்பிதமா மெல்லா மாகி யல்லவுமா யிருந்து விளங்கு மின்னமுதே

பொல்லே னவிவே கத்தாலே புன்மை விடய மாக்கரைந்தே
யல்லற் படுவ துனக்கழகோ வத்தா வண்ணு வாரணனே. 97

சித்தத் திருக்குஞ் சிதாகாச தேவே தேவ
தேவதையே, பத்துத் திசையும் பதினு லோக மெங்
கும் படரொளியே, முத்திக் கரசே யாருறின் மூலப்
பொருளே மோனசுகம், புத்திக் கேதந் தவிர்த்தடிமை
பொருந்த வருள்வாய் புண்ணியனே. 98

---

## அருளிறை வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சகந்தனிலே * பிறந்திறந்து வீணாக நாட்கழித்துத்
தவித்த வென்ற
னகந்தனிலே யிருக்கின்ற பரவடிவை யானறிய
வன்பு வைத்துச்
சுகந்தனிலே மேலான சுகம்பரம சுகமென்றே
தோன்றக் காட்டு
முகந்தகுரு தேசிகனை யனுதினமு மிருதயத்தி
லுட்கொள் வேனே. 99

வேறு.

பொறியா ருறுங் காண்பரிய பொருளோ யுனது பதம்
போற்றி, யறியா நின்று மறிந்திலனு யானு யுனது பதம்
போற்றி, பிறியாப் பிறியத் தப்பாலாம் பெரியோ யுனது
பதம்போற்றி, சிறியே னறிவுக் கறிவான சித்தா முகந்த
குருபோற்றி. 100

---

* பிறந்து வந்து என்றும் பாடம்.

வே று.

பத்தி யுடைய வமரர்பெறும்
 பைம்பொன் னாட்டி னினிதான
சித்தி விளங்குங் காவிரிசூழ்
 செல்வப் பொருள்வை மாநகரோன்
புத்தி யிலனு மெனதுபவம்
 பொருள தாகக் கொண்டினிய
வத்து விதத்தை யளித்தவுகந்
 தானை வணங்கித் துதித்திடுவாம். 101

கடலே ஞான வேதாந்தக்
 கரும்பே யெனக்கோ ரருந்துணையே
யிடரே யருகு மாறெனக்கோ
 ரிச்சை யேதுன் கழலல்லா
துடலே பொருளே யாவியெனு
 முகந்தாய் மூன்று முனக்கென்றூற்
படரும் வினையை யகற்றியருள்
 பரிபூ ரணாவுன் பதம்போற்றி. 102

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

முத்துவெண் ணகையார் சித்தம தொக்க
 முயல்வதே கருமமென் றுன்னிப்
பித்தரின் மயங்கிப் பிறவியங் கடலிற்
 பிழையுற் றழுந்துறு வேனைச்
சித்தம தொக்க வாவென வழைத்துத்
 திகழுநீ பிரமமென் றருளு
முத்தம குருவே பொருள்வைமா நகர்வா
 ழுகந்ததே சிகசிகா மணியே. 103

பிள்ளைக ளூறு பிழைகள் செய்தாலும்
பெற்றவர் தனையரை முனிந்து
தள்ளுத லுலகி லுண்டுகொ லடியேன்
றவறினைப் பொறுத்தருள் புரிவா
யெள்ளுறு மிடமும் பிரிவிலாப் பொருளே
யெந்தையே யென்னுயிர்த் துணையே
யுள்ளுதற் கரிய பொருள்வைமா நகர்வா
ழுகந்ததே சிகசிகா மணியே. 104

ஏமநற் கிரியை வலஞ்செயுங் கதிரோ
னெழுவதன் முன்னமே யெழுந்து
சேமநீர் படிந்து செபித்துனைப் பரவுஞ்
செனனமே யெனக்குநீ தருவாய்
காமனை யெரித்துக் காலனை யுதைத்துக்
கஞ்சனற் சிரநகத் தரிந்த
வோமெனும் பொருளே பொருள்வைமா நகர்வா
ழுகந்ததே சிகசிகா மணியே. 105

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

உகந்தா னெனும்பே ரின்பவுரு
வோரா கமதா யெழுந்தருளிச்
சகந்தா னறிய வெனையாண்ட
தாயே வீர பத்திரப்பே
ருகந்தே தரித்து மோருருவ
மொருநா மங்க ளொன்றுமிலா
தகந்தான் புறந்தான் கீழ்மேலென்
றறுதிக் கடங்கா வம்பரமே. 106

ஒன்றும் வேண்டா வல்காள
வுண்மை மகுடந் தரித்தடியார்க்
கென்றுந் தம்மை மறைத்தவிரு
ளிரிய விளங்குந் திவாகரனே
நன்று தீதோ டியானெனது
நாடு நாம வுருவனைத்துஞ்
சென்றே யலையா திகள்போலச்
சேரும் சிவமாஞ் சாகரமே. 107

காண்டற் கரிய சீவனணு
வாகுங் கரணு திகட்கெல்லா
மாண்ட விந்தச் சூக்கவணு
மகத்திவ் வணுவுக் கணுவுருவே
வேண்டிப் படியிற் றொழுந்தெய்வம்
விள்ளற் கரிய பேதமிவை
காண்டற் குரிய தெய்வமதைக்
காட்டுந் தேவ தேவதையே. 108

செய்வான் செய்விப் பவன்செய்கை
செய்யுங் கருவி தொழிலைந்து
மெய்யாய் விளங்கும் பரமாக
மெய்யா வுரைத்த மெய்யுருவே
யெய்யா வெவைக்கு மகத்தாக
விருந்த சுத்தந் தனையடக்கி
யையா வகண்ட பூரணமா
யடங்கா மகத்தோ மகத்துருவே. 109

துச்சக் குகையா மைங்கோசத்
துன்ப வுருவின் மறைந்திருந்த
புச்சப் பொருளீ தெனக்காட்டும்
புராணா னந்தப் பழம்பொருளே
யச்சப் பிறவி மரணமெனு
மாழி கடக்க வேழைதனக்
கிச்சை யின்றி யருளுருவா
யெழுந்தே யொளிரு மரக்கலமே. 110

ஏகப் பொருண்முப் பதமாக்கி
யிருமூன் றாக்கி யொருமூன்றை
யேகத் தள்ளி யொருமூன்றை
யேக மாக்கு மென்மயமே
மோகத் தழுத்து மேழ்பூமி
முற்றுங் கடந்து மோகமறு
மியோக நிலமே ழேறியதி
னுறுவாழ் வளிக்குங் கற்பகமே. 111

தன்னைக் காணா வறிவாலே
சகத்தைப் பேத மாக்கண்டே
யென்ன திதியா னிவனென்னு
மிடருற் றுழன்றே னெங்கோவே
யன்ன மயக்க முன்னருளா
லகன்றே சகமென் கற்பிதமா
மென்னை யன்றி வேறன்றி
யாணாக் கண்டே னென்கண்ணே. 112

இந்த வுடலோ டாவிபொரு
ளெல்லா மித்தை யிவைவாங்கி
யந்த மில்லா வுன்வடிவை
யடியேற் கருளுந் தாதாவே
கந்த விடய மாதியைந்துங்
கைக்கொண் டருந்தி நீயிருக்க
வெந்தமதியா லியான் புசித்தே
னென்ன லாகு மிறையோனே. 113

ஆகா சாதி தேகாந்த
மான சகத்துன் கற்பிதமே
லேக வறிவா முன்வடிவே
யிவைக்கும் வடிவ மென்றாயே
மோக மறமுன் சொன்னவைகண்
முழுது நீயாய்த் தோன்றியிடி
னேகு நீநா னிமெதனவு
மெங்கே போத தேவதையே. 114

தன்னை யுணரு முணர்வின்றித்
தானும் பொய்யாங் கோசமைந்தும்
பின்ன மின்றி யிருந்தபடி
பின்னு மளிக்கும் பேரருளே
பொன்னங் கிரியு மணுவுருவும்
பொதுக்காட் சியிலே சமநிலையா
மென்னை யென்று லெனக்களித்தா
யெந்தா யென்ற னுயிர்க்குயிரே. 115

ஆரா வருந்தல் பொருந்தலிரண்
டருமை பெருமை யெனப்புசிக்கு
மோரா மெனக்கிவ் விரண்டோடு
முடம்புஞ் சுமையென் றுரைத்தவனே
யாரா விந்தப் பாரமெனக்
காமோ நானுன் கற்பிதநீ
பாரா திகட்கும் பரகர்த்தா
நீயே யிவைக்கும் பகவானே. 116

கடம்போ விருக்கு முடம்போடு
கரணங் காணுங் கரியானே
னடங்கா வகண்ட சிவமானே
னந்தோ வெல்லா மானேனே
யடங்கா மமதை யகங்கார
மகந்தை யிருக்கு மாலயமாங்
கொடும்பா விகடந் நெறியடியார்
கூடா தகற்றுங் குருமணியே. 117

எல்லா மாகி யல்லவுமா
யிருந்து விளங்கு மெம்மிறையே
பொல்லேன் றனுவாஞ் சுமைசுமந்து
பொறுப்ப தரிது மிகவரிது
கல்லா மனிதர் சம்பந்தங்
கடந்தே யுன்னை யடைவதென்றோ
நல்லோ ரன்றி யுயிர்க்குறுதி
நாடி லிலையென் றின்றறிந்தேன். 118

பஞ்ச கோசங் கடந்துசிவ
பார மேறி யனுதினமுந்
துஞ்ச லில்லாப் பரமசுகந்
தோய்ந்தே யிருக்கும் வாணாளை
யெஞ்ச லில்லாப் பெரியோர்க
ளென்று மடைந்தா ரவரன்றி
நஞ்சை யமுதா வருந்தியிடு
நானுங் கரையே றுவதென்றோ. 119

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

துஷ்டர்களை நிக்கிரகம் பண்ண வேண்டித்
தூயோர்கட் கனுக்கிரகஞ் செய்ய வேண்டி
யிஷ்டமுட னேதசா வதார மாக
வெடுத்ததுமுன் னிந்நாளி லடியேன் றன்னைச்
சிஷ்டனெனும் படியாக்க நினைத்த போதே
செலமாலங் கட்டியதாய்த் திரண்ட தேபோ
லிஷ்டமுடன் பதினொன்று மவதா ரத்தை
யெடுத்துமெனை யாண்டவா றென்னே யென்னே.

உண்டான கருவியெனு மாறு றுக்கு
முன்னரிதா மதுநீயென் றுரைத்தோன் றன்னை
விண்டாலு மவன்கருணை விளம்ப வொண்ணு
விண்டுவெனு மருளுருவா விளங்கி வந்து
கொண்டானே குரம்பைமுதன் மூன்றை யுந்தாங்
குவலயத்தி லெனதுதொழி லொன்றுங் காணேன்
பண்டான பழவினைக ளெல்லாஞ் சென்றே
பரமபத மெனக்குவரும் படியா யிற்றே. 121

அற்பமா மதுவருந்து மவனே குற்ற
மகுற்றமென வறியாது பிதற்றி னக்காற்
பொற்புமிகு முனதுபத்தி ரசம் புசிக்கும்
புன்மையனுக் கெதுநன்மை தீமை யாகு
மற்புயனே யவ்வெறியிற் பிதற்றும் பாடல்
வகையேது தொகையேது வழியே தாகுஞ்
சொற்பிழைகள் வந்தாலும் பொறுப்ப துன்றன்
சுதந்தரமே சுதன்வசனந் தந்தை போல. 122

இப்பாரி னுடலெடுத்தே யிந்நாண் மட்டு
மிவ்வுடலே சத்தியமா வெண்ணி னைந்தே
பொய்ப்பால னெஞ்சமெனும் வன்பே யோடும்
புகலிடமொன் றில்லாமற் புலம்பு நாளிற்
கைப்பாலன் றனக்கன்னை கருணை போலக்
கடாட்சிப்பா யெனத்துணிந்து கருதிப் பின்னு
மொப்பாரு மில்லாத வுன்னைக் கிட்டி
யுடலாதி பந்தமெலா மொழிய வந்தேன். 123

அன்னையுத ரத்திடையே யழுந்துந் துன்ப
மதுநீங்கிப் பிறக்கும்போ தழுத்துந் துன்பம்
பின்னுமுடற் பிணியதனல் வருந்துந் துன்பம்
பேதமதி யதனாலே பிறக்குந் துன்ப
மின்னவுட லிறக்கும்போ தழுந்துந் துன்ப
மித்தனையு நீங்கவெனக் கென்றோ வென்றோ
வென்னையுமோர் ஞானவடி வாக்கு வித்த
விறைவனடி நீடூழி வாழ்க வென்றே. 124

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆகந் தானு வழிந்தவெனை
யழுத்த வுரித்தா மடமையினாற்
பாகன் கரத்தி லகப்பட்டுப்
பதைத்த விபம்போற் பதைப்பேனை
மோகந் தீர்ந்த வுகந்தானு
முதிர்ந்த கருணை யாலழைத்து
வேக வறிவுன் னுருவென்றே
யிசைத்தா னவனை வணங்கிடுவாம். 125

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

தடமுயர் கடல்சூழ் பொருள்வைநன் னகரந்
தனின்மனுத் தேகமாய் விளங்கித்
திடமுடன் சுருதி சாஸ்த்ரவே தாந்தஞ்
சிந்தையி லநுபவந் தெளிந்து
படிதனிற் றனைவந் தடுத்தவர்க் கிரங்கிப்
பரமசற் குருவதா யுணர்த்தி
யடியவ ரடிகட் கேயுகந் தாட்சி
யரன்பதி கயிலைவாழ்ந் தனனே. 126

பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆக நற்கனக மேனி பெற்றுடைய
ராவி சுற்றுமொரு பாவிக
ளால மொத்தவிழி மேரு வொத்ததன
மாசை யொத்தவிலை கூறுவார்,
மூக விர்த்திகொடு மூட ரத்நமெனு
மூட னனவனை வெல்லுவார்

மோக மற்றவுனை நினையு மன்பரையு
மூழ்கு மாறுசெய வல்லரோ,
வேக போகசுக ரூப ஞானவுனை
யானு நம்பினவ ளாதலா
லின்ன மங்கையர்கண் மையல் கொண்டுழல்வ
தென்ன பாவமிது வென்னவோ,
வேக முற்றுவரு கோப னேவுகணை
வெட்டி யட்டதொரு வீரனே
வேத வாகம புராண ரூபமெனும்
வீர பத்திர சுவாமியே. 127

மான முற்றுவரு தார மக்கண்மனை
மாடு நித்தமென வெண்ணியே
மாளு சித்தமுறை தீன முற்றமட
மாய்வ தெப்பக லறிந்திலே,
ஞானு மற்றெனது மற்றலோ டறமு
நவிலு பாவமது மற்றுமே
ஞட லுற்றறிவு மீன முற்றவறி
யாமை யும்மறுவ தெந்தநா,
ளூன முற்றவுடல் பற்று துக்கசுக
மொருவி யின்பமய மாகியே
யுள்ள மென்னுமொரு கவலை யின்றியொளிர்
யோகி யேகொடிய பாவியாம்,
வேனின் மாரன்மிக வீசு பாணமதை
வெட்டி யட்டதொரு வீரனே
வேத வாகம புராண ரூபமெனும்
வீர பத்திர சுவாமியே. 128

நேரிசை வெண்பா.

அஞ்சும்போ யாறும்போ யைம்பத்தோ ரக்கரம்போய்
விஞ்சுவெறும் பாழாகி விட்டேனே—நெஞ்சே
யகந்தா னிருக்கு மகறிமிரம் போக்கு
முகந்தானு வேறென் றுணர். 129

---

ஆதியில் பஞ்சாக்கரமருள்செய்த

## குருவணக்கம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

அஞ்சக் கரந்தன்னை யெஞ்சாது சிந்திக்கு
மவர்கட்கோ ரல்லலில்லை
யயனும் படைக்கனினை யான்மறலி கிட்டுகில
னடையவேண் டுவதுமில்லை.
விஞ்சத் தனம்பூமி மைந்தரொடு சுற்றமகல்
வீடுதுணை யென்னவேண்டார்
வீணென வாருறு மெண்ணுர்கள் சொன்னலும்
மேலென்று சித்தம்வையார்,
மிஞ்சுற்ற விந்தவுப தேசந்த னைப்பெற்றோர்
வெகுகாலம் வாழ்ந்திருப்பார்
மெய்யனே துய்யனே யையனே யப்பனே
வேதாந்த மோனகுருவே,
மஞ்சுபதி ககனமென நிறையுஞ் சிதாகாச
வடிவமே யெமதுகுருவே
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாருது பொழியுமுகிலே. 130

நீங்காத வஞ்ஞான திமிரங் கழன்றோட
நிகழ்கின்ற பஞ்சாக்கர
நிலையான கிரணந் தரித்துவந் துதவலா
னின்மலக் கனலியெனலாந்,
தேங்காத தெளிவுதரு நால்வேத வாறங்க
திரளுந் தெரிந்தவதனாற்
சித்துருவ சீதர னுயிர்கட் கிரங்கிவரு
சின்மய வியாசரெனலாம்,
போங்காலம் வருகால நிகழ்கால மூன்றையும்
புந்தியி லுணர்ந்தவதனாற்
பொற்புடைய தற்பிரம சிற்சொருப வானந்த
பொருவரிய சுகமுனிவனும்,
வாங்காத வாங்கார தந்திக்கொ ரரியாகி
வந்தருளு ஞானகுருவே
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாறுது பொழியுமுகிலே. 131

அண்டங் கடந்துநிறை யீசனே பரதத்வ
மாகுமென் றுறுதியுளதா
லற்பபல சமயங்க ளோதிசெய் தொருவனுள
னுமென்னும் லோககுருவாம்,
வண்டமிழ் தெரிந்துபல பாமாலை யர்த்தங்கள்
வல்லையி னறிந்துகொளலான்
மந்தமா ருதமூல கிரியினி லுவந்தருளு
மாசில்குறு முனிவனாகும்,
பண்டுவரு காயத்ரி யல்லுபக னீங்காது
பகர்தலாற் பனவர்பதியாம்

பாழான மாயைதரு மியானெனை றவிர்ந்தசிவ
பத்தியுள சித்துருவமே,
வண்டுமது வுண்டுறையு முண்டகத் தெரியல்புனை
மாதவா போதகுருவே
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாறாது பொழியுமுகிலே. 132

தாரார்க ளோர்கணந் தருகடிகை தள்ளார்கள்
சந்ததமும் வந்தபிணியைச்
சலியாது வாங்கியநு பவியார்க ளென்றனுயிர்
தனுவிட் டகன்றபொழுது,
வாரார்க டுணையாக நீராள மாயுருகி
வந்திடுவர் போலவழுவர்
வந்தாலு நடையற்ற பிணமோடு கூடியே
மயானவரை வந்தாலோ,
தாராள மாகநா னவர்களுற வென்பதுஞ்
சதாகால மென்னையவர்கள்
சார்வாக வெண்ணினது மிப்படி முடிந்ததாற்
சரணமுனை யன்றியுளதோ,
வாராதும் வாராது வருவதுவும் வந்ததெனு
மதிதந் தளிப்பதென்றோ
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாறாது பொழியுமுகிலே. 133

சுத்தலட் சியமான சத்தாகி யேகமாய்ச்
சொல்லரிய சின்மயத்திற்
றோன்றுநின் மலசத்தி சகசீவ பரமதாய்த்
தோன்றுமதி ஞானவிதப்,

பெத்தமுறு பாவனையி லிற்றைவரை வீணாய்ப்
பிறந்திறந் தெய்த்துவிட்டேன்
பெறலரிய வுன்கருணை பெற்றுநா னுவிதப்
பிராந்தியது தீர்வதென்றோ,
புத்தமே முத்தமே சத்யமே யானந்த
போதமே பொன்னுலகுநேர்
புகழுந் திருப்புனவை வாசனே யடியர்துதி
பொன்றாத பரமகுருவே,
மத்தனே னெனதுமதி நின்பாத வனசத்தில்
வைத்திடுவ தெந்தநாளோ
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாறாது பொழியுமுகிலே. 134

ஓயாத வேழ்கடலு மீராறு சூரியரு
மொருசண்ட வாய்யுமொருகா
லுலகத்தில் வந்துறினு மணுவுங் கலங்காத
வுறுதியுள மேருவெனலா,
மாயாது வளர்கின்ற சிட்டா ணிரந்தர
மதிக்கரிய கெம்பீரமா
மனதுற்று நிற்றலா லெப்போது நிறைகின்ற
வாரியென லாகுமாதோ,
காயாத சீதமுடன் வெம்மைய திரண்டையுங்
கணியா திருந்தவதனாற்
கனவடிவு பெற்றுள்ள முண்டகக் கண்ணனிரு
கனமான பாரியெனலா,
மாயாத செல்வமதை யென்றனக் கருள்புரிய
வந்தருளு மோனகுருவே

வணிகர்குல வோஷதிக டமையவுப தேசமழை
மாருது பொழியுமுகிலே. 135

அல்லலா னதுவிலாக் குபேரன் றனத்தினு
மதிகநிதி நீங்குபொழுது
மாகாத பொய்யுரைகள் சொல்லா திருத்தலா
லயோத்திநக ரதிபனெனலாந்,
தொல்லைவினை ரூபமாய் வருபஞ்ச கோசநகர்
தூளாய்த் தகர்த்தவதனாற்
சொல்லரிய ஞானமத யானையென் றியாவருந்
துதித்துப் புகழ்ந்துசொலலா,
நல்லசிசு பொல்லாத சேயென்று தாயுமிரு
நாட்டந் தவிர்ந்தருள்வபோ
னுடுமுல குயிரைநீ சமமா யளித்தலா
னன்மையுறு மன்னையெனலாம்,
வல்லையென துடலாவி நிதிநா னளித்திலேன்
வலியவேற் றூண்டகுருவே
வணிகர்குல வோஷதிக டமையவுப தேசமழை
மாருது பொழியுமுகிலே. 136

ஆசைப் பெரும்புணரி காமக் களஞ்சிய
மாங்கார பீடநீங்கா
வஞ்ஞான வாலயம் பொய்யினுக் கோர்புற்
றகந்தைக்கோர் சூழலாகுங்,
காசுற்ற கோபாக் கினிக்கினிய காட்டமாங்
கடுலோபன் வாழுமனையாங்
கருதின்மிகு மிழிவுடைய மற்சரன்மு தற்பெயர்கள்
காதலோ டுறையுநகராம்,

பேசுற்ற லிவ்வகைக் கிடமா யிருந்துநான்
பெற்றபே ரின்னம்வேண்டாம்
பேசரிய முத்திக்கு வித்தாகு முன்கருணை
பெற்றுப் பிழைப்பதென்றோ,
வாசமுறு முண்டகத் துறைபவன் பொல்லாத
மறலியிடம் விட்டிடாதே
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாருது பொழியு முகிலே. 137

சின்மய விலாசராம் பரமபதி நாதரைச்
சிந்தித் திருக்குமுறையாற்
சித்தமுத லாறிந்தி யங்களு மடக்கலாற்
றிருவாத வூரரெனலாம்,
பொன்மயம தானவுரு மின்னார்கள் சாலமது
பொன்றத் தொலைத்தவதனாற்
புகழுடைய கங்கையின் சுதனகு மநிசமும்
புகழவரு சேனபதி,
யென்பெயர் தரித்தலா னிருண்மல மறுத்தலா
லிருசூர னுதியசுர
ரெட்டுணையு மிச்சமற வெட்டுமொரு வேலுடைய
வெழிலான கந்தனெனலாம்,
வன்பணிகள் புரிபவர்க ளாருறு முள்ளதால்
வருமுருக னுகுமையா
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாருது பொழியுமுகிலே. 138

பந்தமுறு தொந்தவினை சிந்தனையி லெண்ணுத
பரமபத மானகதியைப்

பகர்கின்ற வுயிர்கணித மடையவருள் புரிதலாற்
பார்வதி சமேதரெனலா,
மிந்தவுயிர் மிடியகல வந்தகுரு சுவாமியுன்
னிருபாத நிதியருளலா
லிருவான வரசுபுகழ் வரமான பதமுதவு
மெழிலா ரணத்தனெனலாந்
தந்தவினை வழிநின்று துன்பமுறு மெம்மனோர்
சனியாத வமுதமயிலச்
சந்ததமு வந்துதவு கின்றதா லீர்ங்கிரண
சந்திர னெனப்புகலலாம்,
வந்துபிற வாதவகை யடியனுக் கருள்புரியும்
வள்ளலே பரமகுருவே
வணிகர்குல வோஷதிக டழையவுப தேசமழை
மாறாது பொழியுமுகிலே. 139

## முத்தி நிச்சயம்.

### நேரிசை வெண்பா.

அறிவா னறிபொருளோ டாமுணர்வும் பொன்றிக்
குறியா வையுமாந்து குன்றிற்—பிறியாது
நித்தம் பரசுகமாய் நிற்பதுவே முத்தியதற்
கர்த்தமிது சொன்னே னறி. 140

நித்திரையுஞ் சாக்கிரமு நீண்மறப்பெண் ணத்தாலா
மத்தனையுந் தோன்றா தகத்தடக்கிச்—சித்திரம்போ
லென்றிருப்ப தன்றுமுத்தி யெய்துமிது வேசுகமா
நன்றிதுவே யர்த்தமென நாடு. 141

காண்பானுங் காண்பவையைக் காணுமிடத் தேகமதாய்ப்
பூண்பனவால் வாதனையும் பூண்டிடுமே—வீண்பயிலும்
வாசனையைச் சித்தத்தில் வையா ததுமுத்தி
யாசிலிதற் கர்த்தமிதே யாம். 142

உட்புறம்பால் யானெனதென் றுற்று வருமவற்றை
நட்புற்று நாடோறு நைந்துநைந்தே—யெய்ப்புற்றுப்
போகாம லெப்பொழுதும் பூரணமா மன்னமுத்தி
யாகாதோ வர்த்தமிதே யாம். 143

உள்ளசுக மீதென் றுணரவறி யாதமனக்
கள்ளனிரு லிவ்விடையா காங்கிசையு—மெள்ளமெள்ள
வந்ததே யிவ்விடய வாஞ்சை யிறக்கமுத்தி
சிந்தையிதே யர்த்தமெனச் சேர். 144

---

## தெய்வ நிச்சயம்.

### நேரிசை வெண்பா.

சுட்டுமிடத் துண்டெனலாய்ச் சுட்டற்று வில்லாத
துட்டமனச் சஞ்சலத்திற் றேயாம—லெட்டரிதா
யெவ்வுருவு மெங்கு மிரும்பொருளாய் நின்றதெதோ
வவ்வறிவே தெய்வமென லாம். 145

காண்பனவா லுண்டெனலாய்க் காண்பதற்று வில்லாத
வீண்பயிலு மாயைவிசித் திரமதாய்—மாண்புடைய
முப்பாழ் கடந்த முதற்பாழா மூலமெதோ
வப்பொருளே தெய்வமென லாம். 146

## மனத்திற் கறிவுறுத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

நன்றுகளுந் தீதுகளு நமதிடத்தி லில்லை
நமதிடத்தி லுண்டான நினைவதனு லுண்டு
நன்றுகளுந் தீதுகளு நினைவிறந்தா லில்லை
நமதுமயம் வெறும்பாழா நாடியது வாவாய்
நன்றுகளுந் தீதுகளு நினைவுமய மாகு
நமதுமய நினைவாகு நாடியுண ருங்கா
னன்றுகளுந் தீதுகளு மின்றிநிறை கின்ற
நமதுமய மெல்லாமா நாடியது வாவாய். 147

கலி விருத்தம்.

அம்மா விகமிதுவே பரமிதுவென் றனவரதந்
தம்மான் மிகநொந்தே யுமிக்குத்திச் சலியாதே
கைம்மா றறுமுடலைத் தினங்காக்கக் கரையாதே
சும்மாவிரு சுகமேவருந் தொடர்ந்தா யிலைமனனே. 148

நேரிசை வெண்பா.

வேண்டாதே கண்டவெல்லாம் வேண்டினுற் பந்தமுனைத்
தீண்டாதோ சென்மவினை தீர்ந்திடுமோ—மாண்டாலுந்
தீரா வியாதியுனைச் சிக்கியா ளாக்கிவிடும்
பராய் தவிரும் படி. 149

அச்செல்லாம் பொய்யென் றறிந்தா லதிலொருவன்
றுச்சமற நன்மையறச் சொன்னுலு—மச்சொல்லும்
பொய்யோ வதுமெய்யோ போதமில்லா நெஞ்சமே
யையோ விதிஞேவா ரார். 150

அத்தியந் தாபாவ மாகுமிழி கோசமைந்தும்
புத்தியினு னித்தியமாய்ப் பொற்புறல்போற்—புத்தியினு
லில்லாதாய் நீங்காதோ வேழைமன மேயிதனிற்
புல்லா திருந்தவனே பொய். 151

## பொதுவாகக் கூறியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

விண்ணுதி பூதமெலாஞ் சிவமே யாகு
மெய்யுருவும் பொய்யுருவுஞ் சிவமே யாகுங்
கண்ணுன வேதமெலாஞ் சிவமே யாகுங்
கருதுகின்ற நினைவெல்லாஞ் சிவமே யாகு
மெண்ணிறந்த பேதமெலாஞ் சிவமே யாகு
மிப்படியே தினந்தோறுங் காண்பா ணுகிற்
பெண்ணுணு மலியாகும் பேத மின்றிப்
பிரமமய மாதறிண்ணம் பேத மின்றே. 152

அகவிருத்தி தனிலுண்டாஞ் சீவ னுக்கே
யதிட்டான ஞானவடி வல்ல வென்று
லகவிருத்தி தானிதமா வாகும் போதே
யவனெனதென் றியாதொன்றை யறிய வொண்ணு
வகவிருத்தி செனித்தவிட மகண்ட மாகு
மல்லவெனி லவைசெனித்த வடிவ மாகா
வகவிருத்தி செனித்தவடி வாத லாலே
யதிட்டானந் தனிலடங்கு மைய மின்றே. 153

நேரிசை வெண்பா.

சீறும் புயங்கஞ் சினமிகுத்த தென்றறிந்து
பாறுறு மெய்யோர் பயமான—வாறதுபோ
லாங்கார வீண ரருகே யறிவுடையோர்
தாங்காமற் சொல்லார் தகும். 154

எண்ணிப் பலபொருளை யீட்டினே ஞனாலு
மண்ணிற் பெரியோனாய் வாழ்ந்தாலும்—விண்ணதிலே
மூடா விழியுடையோ ராளுலு முத்தியினைக்
கூடார்கட் காளாக் குறி. 155

சாதிக் கிழுக்கென்றுந் தன்குலத்துக் கீனமென்றும்
பேதிக்கு மூடனே பேசக்கே—ளாதிக்கே
யில்லாத சாதிக் கிருப்பிடமீ தென்றுரைத்தா
னல்லா ரதைநாடு வார். 156

தன்மயமாஞ் சத்தி தானினைக்க நாமவுரு
மின்மயம்போற் றோன்றி விளிந்திடுமே—யென்மயமே
யாமே யவையெல்லா மானல்யா னும்மெனதும்
போமே சிவமயமாய்ப் போம். 157

ஆதிநடு வந்தத் தழியா திருந்ததெந்தச்
சோதியன்றோ வைந்தாந் தொழில்செய்யும்—தீதிலவை
யோரா ரெனதுமய மென்றறிந்தா லெத்தொழிலு
மாரார் சிவமயமே யாம். 158

தீதுநலம் பாவமறஞ் சேதனமாஞ் சின்மயமே
சேதமற நின்று தினம்புரியு—மாதலினா
லிவ்வுருவ மென்மயமே யென்றுணரி லிந்நான்கு
மவ்வுருவ மாஞ்சிவமே யாம். 159

கும்பிடவோ மேலில்லை கும்பிடவோ கீழில்லை
கும்பிட்டு நீங்கக் குறையில்லை—கும்பிடும்பே
ராரோ வறியேன்யா னுகாகா வோகோகோ
சீரேது மில்லை சிவம். 160

செய்யுந் தவமுந் திரயோக நிட்டைகளுஞ்
செய்யுமுப தேசந் திரபூசை—யையமறச்
சொல்வேன் சுதந்தரனை யன்றி யுலகென்ப
தில்லென் றுணருமி தே. 161

தெய்வ வடிவறிந்தத் தேவதையைப் பூசைபண்ணித்
தெய்வ வடிவாந் திறங்கேளீ—ரையமினால்
சற்குருவாற் றுனுணர்தல் சந்ததமுஞ் சிந்தித்த
னிற்குமது வான நிலை. 162

ஐஞ்ஞூற்று வீச ரடியிணையைச் சேர்ந்தவுனக்
கெஞ்ஞான்று நெஞ்சே யிடருண்டோ—பைஞ்ஞாகந்
தாங்கும் புவிவிளங்கச் சஞ்சரிக்கும் பானுகண்ட
தூங்கிமம் போகாதோ சொல். 163

ஈயக் கதிரா மிலக்கணமு மின்குறளு
மாயப் பொருளா வறைந்தாலு—நோயகலா
துன்னை மறந்த வொருதுரிய பூமியிலே
மன்னி யிருக்க மதி. 164

---

## புத்திக்கறிவுறுத்தற் கண்ணி.

வெண் செந்துறை.

பஞ்ச விதவிடயம் பாங்காய்ப் பரம்புசிக்க
நெஞ்சேநீ நானெனவே நிச்சயிப்ப தென்னமதி. 1

அஞ்சு விதவிடய மாருமறி வாயிருக்கப்
பஞ்ச விதமாகப் பார்த்துழல்வ தென்னமதி. 2

காண்பவனைக் காணாது காண்பவையைக் கண்டுழன்று
வீண்கால மாக விழுற்கிறைப்ப தென்னமதி. 3

ஈசன் வடிவாமே யெட்டுருவு மென்றுணர்ந்து
பாசந் தவிர்ந்தொழியப் பாராத தென்னமதி. 4

காரியரூ பங்களெல்லாங் காரணமாக் காணுமெ
ஞாரிமனை யென்னதென நாடவந்த தென்னமதி. 5

சும்மா தனியிருக்குந் தூயதாந் துரியமதி
லம்மா தினமிருப்ப தாகாத தென்னமதி. 6

எவ்வுருவு நாடி யிராக வெகுளியறத்
தவ்வ லறச்சிவமாய்ச் சார்ந்தறியா தென்னமதி. 7

நானெனவு நீயெனவு நாடலுட லைக்குறித்தே
ஞானமய மொன்றெனவே நாடாத தென்னமதி. 8

பொய்யைப் பொருளாகப் புன்மதியாற் கண்டதுபோன்
மெய்யையுணர்ந் தத்துவிதம் வேண்டாத தென்னமதி. 9

எப்பொழுதுந் தன்னையன்றி யாதுவந்த தியாதொழிந்த
தப்படியே யெண்ணி யமையாத தென்னமதி. 10

மாயா விருளிரவில் வந்தகனு விட்டொழிந்து
நீயா நிலைதனிலே நில்லாத தென்னமதி. 11

முன்னடங்கும் வாதனைகண் முற்றுந் தவிராமே
யின்னமினந் தாங்கி யிரங்குவது மென்னமதி 12

ஆகாத வாதனையா லல்லறினம் பட்டுழன்று
மோகோ வினந்தவிரா தழலுமதி யென்னமதி. 13

பேதமுறு புந்திதனைப் பேதித் தகற்றும
லாகமயல் கொண்டதுவா யாகுமதி யென்னமதி. 14

பொல்லாக் கயவர் புகும்வழியிற் செல்லாம
னல்லோ ரடங்குமிட நாடாத தென்னமதி. 15

கற்பிதத்தை மெய்யாகக் கண்டுகண்டு துன்பமுறா
தற்புதமாஞ் சின்மயநீ யாகாத தென்னமதி. 16

சுட்டற்ற வெட்டவெளி தோயாம ளைமவுருச்
சுட்டி யனுதினமுந் துன்பமுற லென்னமதி. 17

நிற்க நிறுத்த நிலையாத நீசமனத்
துற்சங்க நீங்கிச் சுகமாகா தென்னமதி. 18

தட்டத் தடுக்கத் தடைபடா நீசமனத்
துட்டப் பிசாசோடுந் தோயுமதி யென்னமதி. 19

கட்டப் பிடிக்கக் கடந்தோடு மீனமனச்
சுட்டகற்றித் தற்பதத்தைத் தோயாத தென்னமதி. 20

நிர்க்குணனே முக்கணனாய் நின்றுசகங் காட்டியட்டு
நிர்க்குணனாய் நிற்பதென நில்லாத தென்னமதி. 21

சந்ததமுஞ் சின்மயமாய்த் தானிருந்தாற் றொந்தவினை
வந்துறுமோ வென்று மதியாத தென்னமதி. 22

கண்டவெல்லாம் பொய்யாகக் கண்டிருந்துங் காண்பவை
யுண்டெனவே பற்றி யுழலுமதி யென்னமதி. [மை

## நெஞ்சோடிரங்கல்.

### பாயிரம்.

நேரிசை வெண்பா.

மேலாந் துரியநிலம் விட்டுவிட யத்துழன்று
நாலா விதவரந்தை நண்ணி நண்ணி—மாலாகி
நின்றமனத் தோடிரங்கு நீதி தனையிதயந்
துன்றியுறை யைங்கரனே சொல். 1

மஞ்சூரு மஞ்சன் மகன்றனுவி னூறுற்ற
நஞ்சாருங் கண்டத்து நக்கனிட—மெஞ்சாது
புல்லியி ருந்தருளும் பூரணிநெஞ் சோடிரங்கல்
சொல்லுமென்ற னுவிருந்து சொல். 2

---

வெண்செந்துறை.

சீரார் கழனித் திருநெல்லை யம்மைபதஞ்
சாராம லென்னோ சனித்திறந்தாய் நெஞ்சகமே. 1

இதுவே சிவமென்று மீது மனமென்று
மதனால் விளங்கிலுனக் கறிவெங்கே நெஞ்சகமே. 2

பன்னாளுங் காண்பவற்றைப் பற்றிநொந்து நைந்திருப்ப
தென்னா டொலைத்தறிவா யென்றிருப்பாய் நெஞ்சகமே.

எந்நாளு மின்பநிலை யீதென் றறிந்திருந்தும்
பன்னாளுந் துன்பம் படலாமோ நெஞ்சகமே. 4

அச்சந் தவிர்ந்தநிலை யாமதனைச் சேராமற்
றுச்ச வினைபுரியத் துணிந்தனையே நெஞ்சகமே. 5

தன்மயமீ தென்றுணர்ந்துந் தானதுவாய் நில்லாம
லின்ன மிடரடைவ தென்னமதி நெஞ்சகமே. 6

ஈதென தியானிவனென்றெண்ணியெண்ணியேழையர்போற்
றீதடைந்தாற் சீதளமுஞ் சேருமதோ நெஞ்சகமே. 7

பாச வடவிதனைப் பற்றிப் பயமடைந்தான்
மாசு தவிர்ந்தவெளி மன்னலுண்டோ நெஞ்சகமே. 8

வாசனைக ளியாதுமிலா மன்னுதுரி யந்தனிலே
தேசுபெற நிற்கத் திகைப்பேனோ நெஞ்சகமே. 9

சங்கற்ப சாலந் தவிர்ந்தசம பாவனையிற்
றங்கிப் பரமசுகஞ் சார்வதென்றோ நெஞ்சகமே. 10

பாராமற் பார்க்கும் பரமவிழி பெற்றிருந்தால்
ஊரேது பேரே துலகேது நெஞ்சகமே. 11

இந்தப் பெரும்பிரமா காரநிலை யெய்தாமல்
தொந்தப் பிராந்திநிதந் தோய்ந்தனையே நெஞ்சகமே. 12

மோகாதி காரியங்கண் முற்றுமி றந்தபதத்
தோகோகோ சேரா துழல்கின்றாய் நெஞ்சகமே. 13

ஐம்பொறியு மைம்புலனு மாறி யடங்குமிட
நம்பிநம்பி நீயடையு நாளென்றோ நெஞ்சகமே. 14

பற்றுமற் பற்றும் பரமசுக நிட்டைதனைப்
பெற்றிருந்தா லென்னகுறை பேசாய்நீ நெஞ்சகமே. 15

ஆன்ம வுருவகண்ட மந்தவுரு வாகாமற்
றானொருவன் போலாய்ச் சலித்தனையே நெஞ்சகமே. 16

சச்சிதா னந்தத் தனிவீட்டில் வாழாம
னச்சுருவாங் காட்சிதனை நாடினைந்தாய் நெஞ்சகமே. 17

சான்றாந் துரியமதைச் சாராம லூடேறுந்
தோன்று விடயமதைச் சுட்டினையே நெஞ்சகமே. 18

பாவனைக ளியாதுமிலாப் பானநிலை யெய்தாமற்
றீவினையைச் சேர்வதென்ன சிந்தனையோ நெஞ்சகமே.

தூங்காமற் றூங்குஞ் சுகநிலையிற் செல்லாது
நீங்காமற் றுச்சவினை நீ புரிந்தாய் நெஞ்சகமே. 20

காண்பவற்றை முப்பொழுதுங் காட்சியறத் தோற்றுவிக்கு
மாண்புடைய சித்தின் மடிவதென்றோ நெஞ்சகமே. 21

நித்தரங்க முந்நீர்போ நின்று விளக்கறிவின்
வைத்த படிரமித்து வாழ்வதென்றோ நெஞ்சகமே. 22

* திறிபிடிக்குஞ் சாட்சியெனுஞ் சின்மயமாய் நில்லாமற்
குறிபிடித்து நாடோறுங் குலைகுலைந்தாய் நெஞ்சகமே. 23

அவத்தாத் திரய வதிட்டான மாயிருந்து
பவத்தை யழிக்காமற் பாழ்பட்டாய் நெஞ்சகமே. 24

முக்குணமுங் கெட்ட முதற்பாழைச் சாராம
லக்குணத்தோ டொன்றி யலைந்தனையே நெஞ்சகமே. 25

கோசமைந்துந் தோன்றாக் குருதுரியஞ் சேராமற்
பாசமெனும் வலைக்குட் பட்டுழன்றாய் நெஞ்சகமே. 26

எல்லா மிறந்தநிலை யீதென்று கண்டிருந்து
நில்லாம லந்தநிலை நீங்கினையே நெஞ்சகமே. 27

ஆறாறின் மேலா மறிவுமய மாகாம
லோராறி னோடி யுழல்வதென்னோ நெஞ்சகமே. 28

துன்பத் துவிதந் தொலைந்தசுக நிட்டையிலே
யின்பத் துருவா யிருப்பதென்றோ நெஞ்சகமே. 29

---

* திரிபுடி என்பது எதுகை நோக்கித் திறிபுடி என வந்தது.

சீவேசுர செகத்தைச் சித்தொன்றாத் தோற்றுவிக்கப்
பாவனையாற் பேதித்துப் பற்றுகின்றாய் நெஞ்சகமே. 30

ஆமை யுறுப்பை யடக்குதல்போற் காண்பவையாந்
தீமை தனிற்புலனைச் சேர்க்காதே நெஞ்சகமே. 31

சத்தோ டசத்துஞ் சதசத்து மாகாத
சித்தம் பலவாஞ் செகம்பொருளோ நெஞ்சகமே. 32

சித்துருவாற் றோன்றுஞ் செகந்தனையீ தின்னதென்று
நித்தமவ தானஞ்செய் நீயொழியாய் நெஞ்சகமே. 33

எத்தனையோ கோடி யியல்புரைத்துங் கேளாம
லத்தனையும் பாழா வயர்ந்தனையே நெஞ்சகமே. 34

எட்டுருவு மீசன்மய மென்றறிந்து மந்தமதி
விட்டவனைப் பற்றி விடுதலுற்றாய் நெஞ்சகமே. 35

நிவாத தலதீப நிற்பதி னில்லாமற்
குவாலப் பிணிக்குரம்பை கூடினைந்தாய் நெஞ்சகமே. 36

சித்திரத்தி லேவரைந்த தீபம்போ னில்லாமற்
கத்தித் தலைவெடிக்கக் கற்றனையே நெஞ்சகமே. 37

அரவின் களமறுக்கி லந்தலையின் கேட்டிற்
பரமவுரு நீயடையிற் பாறுமைந்து நெஞ்சகமே. 38

தத்தாப பிண்டமதிற் சார்ந்தசலம் போற்றுரிய
வத்தி லடங்கியதாய் வாழ்வதென்றோ நெஞ்சகமே. 39

எண்ணே யிருப்பற்ற வெழிற்றீபம் போலவுநீ
யெண்ணரிய விச்சைதவிர்ந் தென்றழிவாய் நெஞ்சகமே.

இல்லா திறக்கு மிழிகுரம்பை வாசனையைப்
புல்லாது மெய்யுணர்வைப் புல்லலென்றோ நெஞ்சகமே.

சும்மா யிருந்துசுகந் தோயாமற் றன்னினைவா
லம்மா சுகமடைந்தோ ராருரைப்பாய் நெஞ்சகமே. 42

போராட்டப் பட்ட புரமெடுத்த விவ்வரையில்
சீராட்டி லென்னசுகஞ் சேர்ந்தனைநீ நெஞ்சகமே. 43

இல்லாளு மில்லத் திருநிதியு மீன்றமக
வெல்லா மறந்திருப்ப தென்றுரையாய் நெஞ்சகமே. 44

பந்தநமக் குண்டதனைப் பாற்றமுத்தி வேண்டுமெனு
மிந்தநினை விரண்டு மென்றயர்ப்பாய் நெஞ்சகமே. 45

மறப்பதுவே நல்லதென மாணவர்தாஞ் சொல்ல
வறத்தினமு நீநினைத்தே யல்லலுற்றாய் நெஞ்சகமே. 46

எல்லா மறந்துவிட்டா லிவ்வுடல நீங்குமெனி
லில்லமிலாப் பித்த னிருப்பதுபோ னெஞ்சகமே. 47

முற்றுமல மாயிருக்கு மூடமதா மிவ்வுடலிற்
சற்றும் விரத்தியுண்டாய்ச் சார்கிலையோ நெஞ்சகமே.

செய்ததுவே செய்யத் தினந்துணிந்து செல்வதுவே
யுய்யும் வழியென் றுருப்பட்டாய் நெஞ்சகமே. 49

பத்துத் திசையும் பதினான் குலகுமற்றுஞ்
சித்தசித்துஞ் சிற்சடமுஞ் சிவரூப நெஞ்சகமே 50

பண்ணவிதன் பாதநிழற் பற்றியது வாயிருக்கி
லெண்ணரிய விச்சை யிரிந்தோடு நெஞ்சகமே. 51

என்னிதயத் துள்ளே யிருந்ததிரு நெல்லைபதத்
துன்னினைவு நீயு மொழிவதென்றோ நெஞ்சகமே. 52

அண்டமெலாந் தோற்றி யழிந்தபத மாயிருந்தாற்
பிண்ட வுபாதியன்றே போமதோ நெஞ்சகமே. 53

எல்லா வுலகு மிறந்துமிற வாதபதஞ்
செல்லாது காண்பவற்றிற் சிக்கினையே நெஞ்சகமே. 54

தோன்று சிசுவுணர்வு துகளற்றுக் காணுதலின்
மான்றவுரு வந்தோன்ற வருவதென்றோ நெஞ்சகமே. 55

தோற்றுருவை யீதெனவே சுட்டுமய லாமறிவை
மாற்றி யகண்டசுக வாழ்வடைவாய் நெஞ்சகமே. 56

விட்டே னுலகமெனும் வீணான வாசனையுங்
கெட்டிலங்கு மன்னையடி கிட்டுவையோ நெஞ்சகமே. 57

எத்திக்குந் தானா யிறந்துபிற வாதடைந்தாற்
செத்துப் பிறத்தலன்றே தீராதோ நெஞ்சகமே. 58

ஒன்றோடுந் தாக்கற் றுறு துரியா தீதமதிற்
சென்றுசிவ மாகவெந்நாட் செல்லுமதோ நெஞ்சகமே. 59

மெய்யுருவை நாளும் விரும்பா திருந்தவிந்தப்
பொய்யுருவாற் பட்டதுயர் போதாதோ நெஞ்சகமே. 60

பன்னாளுங் காண்பவற்றைப் பற்றிப் படுந்துயரா
மென்னா லினிச்சகிக்க வேலாதே நெஞ்சகமே. 61

என்னுட் சிவவடிவை யான்மறந்த தன்றுமுத
லுன்னோடுங் காண்பவற்றை யுற்றுழன்றே னெஞ்சகமே

இற்றைவரைக் காண்பவையை யெய்தியெய்தி யென்னசுகம்
பெற்றனைசொன் னாலறியாய் பேதமல நெஞ்சகமே. 63

எல்லா மிறந்ததிரு நெல்லை யிணையடியைப்
புல்ல வகமிதமும் போகாவோ நெஞ்சகமே. 64

வித்தைச் செருக்கடைந்து வீணாட் கழிக்குமருட்
புத்திக் குருடர்நெறி போகாதே நெஞ்சகமே. 65

நிழனெருப்பாய்க் கண்ட நினைவு தவிராதே
விழலுக்கு நீரிறைக்கும் வேலையுற்றாய் நெஞ்சகமே. 66

நாரியிலம் பூமிதன நாசமுறு மென்றவெலாம்
வாரியினிற் பெய்த மழையான நெஞ்சகமே. 67

ஓயா துழலுமதி யோய்வதிலை யுன்றனக்கு
வாயாற் பிதற்றமதி வந்ததென்னோ நெஞ்சகமே. 68

பொல்லாத விக்காயம் புல்லுமதி வாசனைக
ளெல்லா மிறந்தவென வென்றிருப்பாய் நெஞ்சகமே. 69

காரார் குழன் மடவார் கற்பித்த வேவல்செய்து
தூராக் குழிதூர்க்கத் தோன்றினையே நெஞ்சகமே. 70

விண்ணாதி கண்ட விசுவமிற வாதிருந்த
கண்ணுந் துரியமதைக் கையிகழ்ந்தாய் நெஞ்சகமே. 71

ஆரணங்க ளீதென் றறிவரிய தென்கழனிப்
பூரணியை நீமறந்து புண்பட்டாய் நெஞ்சகமே. 72

அல்லும் பகலு மகமிதந்தீ ரென்றதனாற்
கல்லுங் கரையாதோ கடைப்பட்ட நெஞ்சகமே. 73

இல்லந் துறந்து சுகத்துறவை யெய்தாம
லல்லற் படுமியல்பை யார்விதித்தார் நெஞ்சகமே. 74

பற்றுமற் பற்றும் பரமசுக நிட்டைபெற்றாற்
பற்றறுவி லென்னதெனும் பார்வையுண்டோ நெஞ்சகமே. 75

தோன்றுமற் றோன்றுந் துரியநிலங் கண்டிருந்தா
லான்றுது பற்றிவிடு மோர்வுண்டே நெஞ்சகமே. 76

## தெய்வமேயென்னுங் கண்ணி.

அண்டமும் பிண்டமு மானதுங் காண்கிலேன்
றெய்வமே— யிந்த—வண்டமும் பிண்டமும் வேறென்
றறிந்திலேன் றெய்வமே. 1

ஆதியு மந்தமு மில்லா வரும்பொரு டெய்வமே-யிந்தக்-
கோதா முடம்பாய்க் குறித்து விளங்குதே தெய்வமே. 2

இன்ப வுருவா யிருந்த பரஞ்சுடர் தெய்வமே—யிந்தத்-
துன்ப சுகவினைத் தொந்த மடைந்ததே தெய்வமே. 3

ஈகையு மேற்றலு மில்லா விரும்பொரு டெய்வமே-யிந்த-
வீகையு மேற்றலு மாகி யிருந்ததே தெய்வமே. 4

உண்மையு மின்மையு மின்றி யிருந்ததே தெய்வமே-யிந்த-
வுண்மையு மின்மையு மாகி விளங்குதே தெய்வமே. 5

ஊன முறும்பந்த வோதமொழிந்ததே தெய்வமே—யிந்த-
வூன முறும்பந்த வோத மடைந்ததே தெய்வமே. 6

எப்பொரு ளாவது மெய்ப்பொரு ளென்பது தெய்வமே—
யிந்தத்—தப்பறு நல்லோர் நிலையிது சத்தியந் தெய்வமே. 7

ஏதோ தறிகள்ள னென்பது போலொன்று தெய்வமே—
யிந்தத்-தீதே யிலாத சிவத்தினிற் றோன்றுதே தெய்வமே. 8

ஐய வுருவே யகமென்று தோன்றலாற் றெய்வமே—
யிந்தப்-பொய்யா மலகையாம் புன்பவந் தோன்றுதே
தெய்வமே. 9

ஒன்றோ படும்பா டுரைப்பேன் சிறிததிற் றெய்வமே—
யிந்தப்-பொன்று முடம்பு பொருளாய் முடிந்ததே தெய்
வமே. 10

ஓவாத ஞான வமுத முவட்டுதே தெய்வமே—யிந்த-
வோவும் விடய விடஞ்சுக மொத்ததே தெய்வமே. 11

ஔவிய மில்லா வறிவு மறைந்ததே தெய்வமே—யிந்த-
ஔவிய ரூப வகிலமே தோன்றுதே தெய்வமே. 12

அக்கமும் பக்கமு மானதைக் காண்கிலேன் றெய்வமே—
யிந்த-வக்கமும் பக்கமு மெண்ணி யழிந்தேனுன் றெய்
வமே. 13

கண்ட வுருவங்கள் காண்பதாக் காண்கிலேன்
றெய்வமே—யிதைப்-பண்டு பறித்திட்ட பாவிய ரார்
கொலோ தெய்வமே. 14

காலங்கண் மூன்றுங் கடந்ததைக் காண்கிலேன்
றெய்வமே—யிந்த-ஞாலத்தின் பேதங்க ளன்றாகத்
தோன்றுதே தெய்வமே. 15

கின்ன முறும்பல வினைரைக் கிட்டினேன் றெய்
வமே--யிந்த-நன்னலம் பெற்றோரை நண்ணவு நாணி
னேன் றெய்வமே. 16

கீழோ ருரைத்த வுரைகளைக் கேட்கிறேன் றெய்
வமே—இந்தப்-பாழ்வாழ்வி லென்ன பயனெனத் தேர்கி
லேன் றெய்வமே. 17

குட்டிய மான குரம்பையை நாடொறுந்தெய்வமே-மிகக்-
கட்டியே காத்திருந் தென்பயன் கண்டனன் றெய்வமே.
கூடாதென் றுலிந்தக் கூட்டி லிருக்கவுந் தெய்வமே—
யிந்தப்-பாடு படுவது பார்த்திலே யோபர தெய்வமே. 19

கெம்பீர மன்றிக் கிலேச மடைந்தனன் றெய்வமே—யிந்-
தப்-பம்பு பவக்கட றுண்டலென் றோபர தெய்வமே. 20

# கிளிப்பத்து.

வெண் செந்துறை.

கண்படையுஞ் சாக்கிரமுங் காணாத் துரியநிலைப்
பண்படைவ தென்றோ பகராய்நீ யஞ்சுகமே. 1

உள்ளும் புறம்புமன முற்றிடுஞ்சங் கற்பசகந்
தள்ளிச் சுகநிலையிற் சார்வதென்றோ வஞ்சுகமே. 2

உன்ன லொழிதலினு முண்டாந்தை யின்பமிது
பன்னு சமநிலையிற் பாறலென்றோ வஞ்சுகமே. 3

உள்ள நினைப்புமறப் புற்றிடி னோர் தன்வடிவை
யுள்ள படியுணர வொண்ணுமதோ வஞ்சுகமே. 4

இத்தரையிற் றேகமெடுத் தெய்துமனச் செய்கைவிட்டுச்
சித்தசம மாம்வாழ்வு சேர்வதென்றோ வஞ்சுகமே. 5

இட்டமொடு நாமவுரு வெய்திமனஞ் சுட்டியுறுஞ்
சுட்டறிவு நீங்குநிலை தோய்வதென்றோ வஞ்சுகமே. 6

தம்மா லறிவறியா மையிரண்டுந் தள்ளிவிட்டுச்
சும்மா விருக்குநிலை தோய்வதென்றோ வஞ்சுகமே. 7

இத்தேகம் பற்றி யிருக்குமொரு தேகியின்றி
யெத்தேக மும்யானு யிருப்பதென்றோ வஞ்சுகமே. 8

மூலப் பகுதி முடிந்துமுடி யாதுபெறும்
சீலப் பரமசுகஞ் சேர்வதென்றோ வஞ்சுகமே. 9

சித்த மிறந்தாற் சிவமிறக்குந் தேகியுள
தத்தன்மை யின்றியவ னுவதென்றோ வஞ்சுகமே. 10

அத்திபா திப்பிரிய வாதிவெளி யாயிருந்தாற்
சுத்தமிலாச் சிவபரத் தொய்தமெங்கே யஞ்சுகமே. 11

---

## சந்த விருத்தம்.

நன்னனு-நன்னனு-நான நன்னன
நானன-நானன-நானனே.

சொல்லலாஞ்-சொல்லலாந்-தார-தனங்களைத்
தூற்றிவிட்-டோமென-வாயாலே. நன்னனு. 1

சொல்லலாஞ்-சொல்லலா-மந்தக்-கரணத்தைச்
சுட்டுவிட்-டோமென-வாயாலே. நன்னனு. 2

சுவாநுபவத் திருவாக்கு முற்றுப்பெற்றது.
சர்வஞ் சின்மயம்.

## சுவாநுபவத் திருவாக்கியங்கள்.

சர்வம் பஞ்ச பூதமயம். 1

சர்வம் மித்தை. 2

சர்வஞ் சின்மயம். 3

நாம ரூபம் நாடாமல் பகிர்முகமின்றி யிருக்கவேண்டும் 4

பரிபூரணமாகிய தனக்கு என்ன வேண்டுவது? 5

எல்லாந் தோற்றன்மாத்திரம். 6

அதிட்டானமாகிய தானைப் பார்க்கும்போது நானவ
னெங்கே? 7

உபசாந்தமுந் துரியம்; அறியாத விடயமுந் துரியம். 8

பாசபந்தம் வரும்போது பாச நிவர்த்தியுந் தோன்ற வேண்டும். 9

சுகதுக்க முள்ளவரையில், தாரதம்மியம் நீங்காது. 10

பிரபஞ்ச மித்தையா பாவனையினாலுந் தன்மய பாவனையினாலுங் காண்பான் காட்சி நீங்கும். 11

எல்லாவற்றையுந் தானறிவதாயுந் தன்னை யொன்று மறியாததாயு மிப்படிக் காண்கிறதே பிரத்தியட்ச ஞானம். 12

தன்னிடத்தி லகங்காரம்-பிராந்தி மூலம். 13

இங்கும் அங்கும் ராகத் துவேஷமன்றி யிருந்தால் இரண்டுக்கு மைக்கியம். 14

பிரத்தியட்சமான விடயமும், அப்பிரத்தியட்சமான விடயமும், திருக்குவாகிய ஞானத்துக்குத் திருசியம்.

வஸ்து நிர்ணயத்தில் பிரபஞ்சந் தானல்லவென்றும், அத்துவிதத்தில் தன்னைத்தவிர வேறில்லாதபடியினாலே தானென்றும் காண்க. 16

சோகத்தினாலே துக்கத் தோற்றம்; மோகத்தினாலே சுகத் தோற்றம். 17

இத்தனையு மாயாமயமல்லவோ; உள்ளபடி முடியும். 18

திருசியந் திருக்குவையன்றித் தோன்றாது. 19

அதிட்டானத்தைத் தவிர வாரோபத்துக்கு வடிவமில்லாதபடியினாலே யெல்லா மதிட்டானமயந்தான். 20

இந்திர சாலக்காரனிடத்தில் கந்தருவபுரந் தோன்றினில்லாம லழிந்துபோவதுபோல, தன்னிடத்திலுண்டாகா

நின்ற சங்கற்ப மெவ்வளவோ அநேகமாய் வந்தும் ஒன்று நிற்கவில்லை. 21

உபசாந்தமானாலும், தன்மயமானாலும், சகலத் தியாகந் தான். 22

நிவர்த்தியா யிருக்கவேண்டும்; அல்லது, நாமரூப நாட்டம் வந்தால், அத்துவிதமா யிருக்கவேண்டும். 23

தன்னைச் சிவ பாவனையாகக் காண்கிறதே பிறவி; தன்னைச் சிவ ரூபமாய்க் காண்கிறதே மோட்சம். 24

சகல கலைஞான வல்லவர்களுக்கும், நிராசைவேண்டுவதுதான். 25

எல்லாஞ் சிவன் செயல்தான். 26

எல்லாஞ் சிவாகாரந்தான். 27

சிற்றறிவிலேதான் உயர்வு தாழ்வான தாரதம்மியங்கள். 28

பேரறிவிலே சமசாட்சிதான். 29

உபசாந்தத்தில் சச்சிதானந்த மூன்றும் அநுபவமாய்க் காணவேண்டும். 30

பிரபஞ்சத்தில் தோன்றும் பேதங்க ளெல்லாஞ் சிற்றறிவிலேதா னென்றறியவேண்டும். 31

எல்லா முன்னுடைய செயலேயானால், கொடுத்ததார்? வாங்கின தார்? 32

ஈதனைத்துஞ் சொரூபமே; யானிங்கெதை யிச்சிப்பேன். எதை யிகழ்வேனெனல் பற்றின்மை. இதில் யாருக்கும் நம்பிக்கை வரவேண்டுவதுதான். 33

தேகோக புத்தியினாலே யருந்தல்; இதனாலே பொருந்தல்; இதனாலே சகல ஆசையும் வந்தன. 34

நிருவிகற்ப சமாதியில் என்ன தோற்றம் வந்தாலுந் தன்னைத் திருக்காகவே காணவேண்டுவதுதான். 35

பிரபஞ்சத்தில் பஞ்சவிடய சுகத்தில் பொருந்தும் போது பிரியமாயிருக்கும்; பிற்பாடு தனக்குத்தானே வெறுப்புக்காணும். இதுபோலவே, தன் சொரூப சுகத்தில் பொருந்தும்போதும் பிரியம் வரும்; எத்தனை நாளிருந்தாலும் பிரியம் வாங்காது. 36

சமுத்திரத்தில் முன்வந்த அலைபோய்ப் பின் அலை வருகிறதற்கு முன்னாலே சமுத்திரமாத்திர மிருந்தது போல, தன்னிடத்திலும் முன்னாலே வந்த கடபட நினைவுபோய்ப் பின்னாலே வருகிற நினைவுக்கு முன் தானிருந்தது; இதனாலே பிரபஞ்ச மசத்து; தான் சத்து; தன்னை யநுபவிக்கிறது மிந்த நிலைதான். 37

பூமியிலுண்டான வஸ்துக்களைக் கற்பிதமென்றும், தன்மயமென்றும் சொல்லலாம்; இதுபோல, சிதாகாசத்துக்கு மேலில்லாதபடியினாலே அதிலுண்டானவைகளைக் கற்பிதமென்றும், தன்மயமென்றும் சொல்லலாம். 38

வகையாகக் கண்டு மயங்காமல், தொகையாகக் கண்டு சும்மா இருக்கவேண்டும். 39

சாது சங்கமே சகல கலை சன்மார்க்கத்துக்கு மேது. 40

உபசாந்தத்திற் காண்பான் காட்சி யில்லை. 41

* மேல் நனவுபோல இராநின்ற துரியநிலையிற்றான் சர்வ துக்க நிவிர்த்தியாம். 42

உற்றவாறு எது வரும்; அது வருக. 43

எல்லாங் கதைதான். 44

எல்லாம் புலம்பல்தான். 45

பிறர் குற்றத்தைத் தனதாக வெண்ணிக்கொண்டு தன் குற்றத்தை விசாரிக்கவேண்டும். 46

சிற்றறிவாகிய சீவ வறிவே யெல்லாவற்றிற்கு மூலம். 47

மனம் முதலாகிய பிரபஞ்ச வியல்புகளும் மோகா டம்பரந்தான். 48

ஞான நாட்டத்திலே சிரத்தையும், பிரபஞ்ச நாட்டத்திலே அசிரத்தையும் வேண்டும். 49

தத்துவா தத்துவ விசாரம் பண்ணி, அதத்துவத்தைத் தள்ளி, தத்துவத்தைத் தானாகக் கண்டு, சந்தேக விபரீதமற விருக்க வேண்டும். 50

ஜனன மரணமு நினைவு மாத்திரமே. 51

நாம ரூபமாய் நாடுவதைத் தள்ளிச் சொரூபமாக நாடுவதே சமநிலை. 52

குரு வாக்கியத்தில் சந்தேக விபரீதமின்றி யிருக்கிறது மெய்ப்புருடார்த்தம். 53

தன் சுபாவ நிலையில் நினைவுக்கு நித்தியத்துவம் இல்லாத படியினாலே பிரபஞ்சம் மித்தைதான். 54

---

* மேல் என்றது முன்னே.

அதிட்டான ஞான நிலைமை யுள்ளவர்களுக்கு எல்லா மாகிய அத்துவித ஞானமும் வரும். 55

பற்றின்மையாகிய துரிய நிலைமை யுள்ளவர்களுக்குப் போன காரியத்திலும் வருகிற காரியத்திலும் நினைவு தோன்றாம லிருந்தால், சாட்சாத்காரந்தான். 56

தான் சித்துரூப னென்கிற புத்தி வாங்காமலிருந்தால், நான் நீ யென்கிற பேதமாகிய அஞ்ஞான நீக்கம் வரும். 57

நிகழ் காலமாகிய எதிர்காலத்தில் செய் காரியங்களைப் பின் வருத்தமும் சௌக்கியமும் அறிந்து செய்ய வேண்டும். 58

அக்கினியில் எவ்வளவு பொறி கிளம்பினாலும் அக்கினிக்கு லயமில்லாததுபோல, பூரணமான தன்னிடத்தில் தேகாதி முதலாய வாழ்ந்ததாயுந் தாழ்ந்ததாயு முள்ள என்ன நினைவு வந்தாலுங் கற்பிதமே; தான் நித்தியம். 59

எல்லாமானதாகத் தன்னை யறிந்தால், ஈதலும் இரக்கமும் வரும்; ராகத் துவேஷம் வராது. 60

தன்னிடத்தில் பெருமை, சிறுமை, பகை, உறவு, சுக துக்கமாய் வருகிற சங்கற்பம் கற்பிதம். ஆரோபம் அத்தியாசந்தான். 61

சரீர முதலான பிரபஞ்சம், காலத்தில் உட்பட்டபடியினாலே அதனிடமாய் வாராநின்ற உயர்வு, தாழ்வு, வருத்தங்களுக்குப் பிரமாணமில்லை. 62

பிரபஞ்சத்தில் விவேகத்தினாலே குணத்தைப் பொருளாய்க் கொள்ளாமல், குற்றமே காணவேண்டும். 63

ஒன்றிலே தோன்றி யனைத்துருவமுமான உணர்வுக்குப் பகை யுறவென் றுரைப்பதெங்கே? 64

நான் சித்ரூப னென்கின்ற புத்தி மறந்தால், உடனே விட்சேபமும் விபரீதமும் வரும். 65

சுவரிடத்திலுள்ள சித்திரம் வஸ்துவாகாது; அது போல, தன்னிடத்தி லுண்டான சர்ப்ப முதலானவை வஸ்துவாகாது. 66

தன்னைப் பஞ்சகிர்த்திய முடையவனாகக் கண்டால், ஜனன மரணந் தனக்கில்லை. 67

துரிய நிலையிலும், எல்லாம் சின்மயமென்கிற நிலையிலும் புத்தி யழுத்தம் வேண்டும். 68

கூத்தாடியைப்போலக் கூத்து நிலையல்ல; அதுபோல, எல்லாங் கூத்தாகக் கண்டால், தான் நித்தியந்தான்.

பிரமா முதல் தம்பப் பூச்சிப்பரியந்தம் நிலைமையில்லாதபடியினாலே, தானொருவன்மாத்திர மிருக்கிறவன்; இதனாலும் அத்துவிதந்தான். 70

ஜகத்தெல்லாந் தன்னைத்தவிர இல்லாதபடியினாலேயும், தானே யெல்லாமானதாலும், அத்துவிதந்தான். 71

சரீரமெடுத்து விசாரந் தோன்றினவரைக்கு முள்ளாக வெகு விதங்களாய் உத்கிருஷ்டமென்று சொல்லப்பட்ட பேர்களிருக்கவில்லை; ஆனதால், தேகாதி முதலானவைகளி லென்ன திரநிலை? 72

பிரபஞ்சம் காலத்திரயத்திலு மில்லாதபடியினுலேயும், ஒரு நினைவு வரும்போது ஒரு நினைவு அழிந்து போகிறபடியினுலேயும் காணப்பட்டன வெல்லா மழிந்து போகிறபடியினுலேயும், மித்தை யென்று சொல்லுகிறதிலே சந்தேகமில்லை. 73

திருநதித் துறைகளெல்லாந் தீம்புனல் வறந்தவேயோ? அக்கினியி லுண்டாகாநின்ற பொறிக்கு அனல் காரண மானதுபோல, ஜகத்துக்கு ஆதமாவே காரணமல்லா மல் இடையிலொன்றுஞ் சொல்லத்தக்கதில்லை. 75

பழுதையி லுண்டான பாம்பு பழுதையே யென்று சொல்லலாம்; அதுபோல, பிரஹ்மத்தி லுண்டான ஜகத்துப் பிரஹ்மந்தான். 76

தன்னைக் கர்ம கர்த்தாவாய்க் காணும்போது கர்த்துரு தந்திரமென்றும், நித்தியமாய்ப் பூரணமாய்க் காணும் போது வஸ்து தந்திரமென்று மறிக. 77

காரண காரியமா யுள்ளதுக்குப் பரிச்சின்னத்துவமுண்டு; நிஷ்காரணமா யிருக்கின்ற ஆத்மாவுக்கு அபரிச்சின் னத்துவ மென்னும் பூரணத்துவமுண்டு. 78

சகல சாஸ்திர விசாரம் பண்ணின விசார ஞானிகளுக்கு யான் எனது எனப் போகத்தி லாசாபாசப் பிர விர்த்தி வருகிறதற்குக் காரணம் பிரபஞ்சம் சத்திய மென்னும் பிரமாண புத்தியேயாம். 79

அநேகமான செல்வ முடையவர்களுக்கு உதார புத்தி யும் இரக்கமு மில்லாமல் இருத்தல் அவிவேகத்தி னுலேதான். 80

தெய்வ வியதிரிக்தமாக ஜீவேசுர ஜகத்துக்களில் கட்டுப்பாடாய்ப் பேசாநின்ற வசனங்க ளெல்லாம் புத்திமான்களுக்கு நச்சு வசனங்களாய்த் தோன்றல் வேண்டும். 81

வானவ ரசமாந் தொடர்பிரு லுலகோர்
வழுத்துறும் வன்னியைங் கரனை
வானவ ரதன மணியறு முகனை
மாசறு கொற்றவா ளிறையை
வானவர் முதுவன் பாலன வலவன்
வணங்குநற் றிருநெலை மாதை
வானவ ரதனு முத்திரா மேச
வள்ளலை வணங்கிவாழ்த் திடுவாம்.

சுவாநுபவத் திருவாக்கு முற்றிற்று.

---

## பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் | பிழை எண் |
|---|---|---|---|---|---|
| 61 | 1 | 3 | பகாவ | பாகவ | 400 |
| 62 | 2 | 4 | நிறைக | நிரைக | 500 |
| 126 | 11 | 2 | [தந: | . . . | |
| 126 | 19 | 1 | குட்ய | குட்யா | |

# சாஸ்திர அட்டவணை.

பக்கம்


1. சிறப்புப் பாயிரம் ... ... 3
2. ஸ்துதிகள் ... ... 7
3. விநாயகர் அகவல் ... ... 12
4. கந்தர் கலிவெண்பா ... ... 15
5. ஸ்தோத்திரப் பாக்கள் ... ... 25
6. ஞானிகளின் பெருமை ... ... 28
7. மூவர் தேவாரங்கள் ... ... 29
8. திருவாசக சிவபுராணம் ... ... 35
9. திருவெம்பாவை ... ... 40
10. திருப்பள்ளி யெழுச்சி ... ... 47
11. கோயின்மூத்த திருப்பதிகம் ... 50
12. யாத்திரைப் பத்து ... ... 52
13. நால்வர் துதி, நால்வர் மகிமை ... 55
14. திருமந்திரம், பட்டணத்தார் ... 58
15. அருணகிரி நாதர் ... ... 59
16. பெரிய புராணம் ... ... 60
17. திருவாய்மொழி, பகவற் கீதை ... 61
18. குரு கீதை, ஈசுவர கீதை... ... 65
19. பிரம கீதை ... ... 68
20. ரிபு கீதை ... ... 72
21. ஞான வாசிட்டம் ... ... 84
22. விவேக சூடாமணி ... ... 99
23. ஆத்மானு சந்தானக் கிரம தசகம் ... 100
24. விவேக ஷட்கம் ... ... 102
25. வைராக்கிய டிண்டிமம் ... ... 104
26. சொரூப சாரம் .. ... 105

பக்கம்
27. பாடு துறை ... ... 107
28. அத்துவித வுண்மை ... ... 110
29. அத்துவித ரசமஞ்சரி ... ... 111
30. ஆத்மவித்யா விலாசம், நிஷ்டானுபூதி ... 113
31. தாயுமான சுவாமிகள் ... ... 114
32. சிவஞான வள்ளலார் ... ... 119
33. கண்ணுடைய வள்ளலார், ஒளவையார் ... 122
34. திருப்போரூர் சந்நிதிமுறை, குகை நமசிவாயர், குரு நமசிவாயர், சிவபோக சாரம் ... 123
35. ஞானசுகாதீத வெண்பா, பிரத்தியட்சானுபூதி விளக்கம், இராமலிங்க சுவாமிகள் அருட்பா 124
36. ப்ரஹ்ம நாமாவலீ ... ... 125
37. அக்ஷரமாலிகா ஸ்தோத்திரம் ... 127
38. ஸ்ரீ சங்கரபகவத் பாதர் தோடக ஸ்தோத்திரம் 129

அருச்சனை நாமங்கள்.

39. ஸ்ரீ விநாயகர் சோடச நாமங்கள் ... 130
40. ஸ்ரீ விநாயகர் அஷ்டோத்ர சத நாமங்கள் 131
41. ஸ்ரீ சுப்ரமண்யர் சோடச நாமங்கள் ... 132
42. ஸ்ரீ சுப்ரமண்யர் அஷ்டோத்ர சத நாமங்கள் 133
43. ஸ்ரீ சிவாஷ்டோத்ர சத நாமங்கள் ... 134
44. ஸ்ரீ அம்பிகை அஷ்டோத்ர சத நாமங்கள். 136
45. ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அஷ்டோத்ர சத நாமங்கள் 138
46. ஸ்ரீ சரஸ்வதி அஷ்டோத்ர சத நாமங்கள் 140
47. ஸ்ரீ சொரூப அஷ்டோத்ர சத நாமங்கள்... 142
48. ஸ்ரீ பரமகுரு பரம்பரை வணக்கம் ... 143
49. சுபாநுபவத் திருவாக்கு ... ... 154
50. பிழை திருத்தம் ... 230
51. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ... 57

விவேகாநந்தா பிரஸ், தளவாய் அக்ராகாரம், மதுரை:—35.

VIVEKANANDA
PRESS
MADURA